# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



சித்திரை - 2024

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

சித்திரை - 2024

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டைப் படம் : இணையம்
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

காற்றுவெளி மின்னிதழின் சித்திரை மாத(2024) இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.கடந்த மாத மொழிபெயர்ப்புச் சிறப்பிதழாக வந்திருந்தமை பலரின் பாராட்டுதலையும் பெற்றுத்தந்தது.தங்களின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவைகளை அனுப்பிவிடுவதால் அவை பக்கங்களை நிறைத்துவிடும் அபாயமும் உள்ளது.பலதடவைகள் சொல்லியும் இருந்தோம்.மீள,மீள அவற்றையே அனுப்பிவிடுகிறாரகள். மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் பற்றி நாம் குறிப்பிட்டிருந்தாலும் யாரும் கவனத்தில் கொள்வதில்லை. எழுத்துரு மாற்றங்களினால் வரும் எழுத்துப்பிழைகளை அதிக கவனமெடுத்துப் பார்த்தாலும் தவறுகள் நிகழ்ந்துவிடுகிறது.அதனால் தான் மேலதிக கவனத்திற்காக படைப்பாளர்களுக்கு தனியே அனுப்பப்படுகிறது. மாறாக,அவற்றை முகநூலில் பதிவிட்டுவிடுகிறார்கள்.மற்றவர்களுக்கு சங்கடங்கள் ஏற்பட்டுவிடும் என்பதையும் புரிந்துகொள்கிறார்களில்லை.

நாம் தொடர்ச்சியாக சிறப்பிதழ்களையும் வெளியிட்டு வருகிறோம்.அதன் தொடர்ச்சியாக நமது எழுத்தாளர். அமரர்.எஸ்.அகஸ்தியர் அவர்களின் ஞாபகார்த்த சிறப்பிதழ் ஒன்றையும் கொண்டுவரவுள்ளோம்.அதற்கான படைப்புக்களை லதா எழுத்துருவில் அனுப்பி உதவுங்கள்.வெறுமனே அஞ்சலிக்குறிப்புக்களாக அமைத்தல் கூடாது.

மின்னிதழாக மட்டுமே வருகிறது எனச்சொன்னாலும் அச்சிதழ் பற்றிக் கேட்டவண்ணமே உள்ளனர். அவர்களின் ஆர்வத்திற்கு நன்றி.

சந்தா பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் யாரும் அதுபற்றி அலட்டிக்கொள்ளாததினால் நாமும் மௌனமாகவே கடந்துவிடுகிறோம்.

எனினும் இவ்வாண்டு கனவுப்பதிப்பாக கொண்டுவந்துவிடவேண்டும் என்பதே வேணவா.

காலம் கனிந்துவரட்டுமே.

நம்பிக்கையுடன் பயணிப்போம்.

நட்புடன்,

சோபா

*01/04/2024*

# படைப்பாளர்கள்:

## கவிதைகள்:

1. வியாத்தன் ச.லக்ஷ்ஹரன்
2. ச.சக்தி
3. ஜெ.பி. ஆதிரன்
4. ச. இராஜ்குமார்
5. ம.ஆச்சின்
6. ந.சிறீதரன்
7. சீ.பாஸ்கர்
8. த. ரவீந்திரன்
9. பெ.விஜயலட்சுமி
10. அம்பலவன்புவனேந்திரன்(யேர்மனி)
11. முனைவர் மு.கவியரசன்(திருநெல்வேலி)
12. ஜே.வஹாப்தீன்
13. ரோஷான் ஏ.ஜிப்ரி
14. கீத்தா பரமானந்தன்
15. ச.ஆனந்தகுமார்
16. மாலதி இராமலிங்கம், புதுச்சேரி
17. நற்பவி மணிபாலா(திருப்பூர்)
18. ஜமீல்(இலங்கை)
19. வட்டக்கச்சி வினோத்(இலங்கை)
20. கா.ந.கல்யாணசுந்தரம்(தமிழகம்)
21. ஏ.எம். கஸ்புள்ளா
22. சு.சுடர் நிலா (இலங்கை)
23. சே கார்கவி கார்த்திக்(நாகப்பட்டினம்)
24. கோவை ஆனந்தன்
25. உடப்பூர் வீரசொக்கன்(இலங்கை)
26. இளையவன் சிவா
27. நேசன் மகதி
28. மணிபாலா
29. க. புனிதன்
30. இரா. வெங்கடேஸ் குமார்
31. Dr.ஜலீலா முஸம்மில்
32. சங்கர சுப்பிரமணியன்(மெல்பேர்ன்)
33. மணிமேகலை சரவணன்
34. கவிஜி
35. இரவிகாந்தன்
36. ஐ.தர்மசிங்(நாகர்கோவில்)
37. மு.ஆறுமுகவிக்னேஷ்

## சிறுகதைகள்:


1. இரஜகை நிலவன்(மும்பை)
2. ஆர்னிகா நாசர்
3. இரா. மதிராஜ்
4. ஸ்ரீவி.முத்துவேல்(துபாய்)
5. நௌஷாத் கான்.லி
6. தி.வள்ளி (திருநெல்வேலி )
7. ரகுநாத் வ
8. கமலினி கதிர்(சுவிற்சர்லாந்து)
9. கார்த்திக் கிருபாகரன்

## திரைப்படப்பிரதி:

1. கே.எஸ்.சுதாகர்

## கட்டுரைகள்:

1. பிரேமா இரவிச்சந்திரன்(சென்னை)
2. ச.வாசுதேவன்
3. கனகசூரியம் யோகானந்தன்(திருகோணமலை)



கவிஞர் வியாத்தன் ச.லக்ஷஹரன்

# அழிந்த தமிழர் அடையாளங்கள்


அண்ணியன் ஏக கலைவித்தை தெரிந்தும் நம் கலை முத்தை
தேடி தான் நிற்கின்றான்
நிதம் நம் பருக மறந்த பவளச்செம்மலை
பவித்திரத்தை சொத்தாக்கி
சோதி நெறியாளனாகிறான்.

நித்திரையிருக்கும் உம் அறிவுகண்ணை
வேட்கை கொண்டு திறந்திடு!.. உனக்கு வேண்டிய அனைத்தும்
தமிழ்தாயிடம் அளப்பெரிதாய் இருக்கின்றன...
ஆய்வில் தொடங்கி அறிவு
வரை வியாபித்து

உன் முதற் செயற்பாட்டை முற்றுகையிட்டு முடக்கலாம் -
ஆனால் சிந்தனையின் முதற்தேடலை எண்ணத்தை ஒருபோதும்
முடியாது.
அதுவே உன்னை எதற்கும் உந்தி நிற்கும் உன் பெயர் தலைமுறை
காத்து சொல்லும்.

“நீ முழுமனிதனா? இல்லையேல் அரை மனிதனா? சற்று
யோசி ஆடையில்லாதவன் அரைமனிதனென்றால் நடப்பறிவு
இல்லாதவன் உலகதிசை அறியாதவன்? “
உணர்விலாவது ஆதி தமிழாக்கத்தை நாடி,
அதன் சுவாச காற்றை சுவாசிக்க துடிப்பானாயின் ஒவ்வொரு
தனிமனித வரலாறும் வரலாற்று பக்கங்களாகும்.

## கவிஞர் ச.சக்தி, பண்ருட்டி




நிலைக் கண்ணாடியின்
முன் நின்று
தலைசீவி பொட்டு வைத்து பூச்சூடுகிறாள் மகள்
நான் தூரத்திலிருந்து பார்க்கிறேன்
என் கண்களுக்கு
முன் நிழலாடுகிறது இரு பிம்பம்
ஒன்று என் அம்மாவுடையது
மற்றொன்று அம்மாவாக
பிறந்திருக்கும்
தன் மகளுடையது,

★

எனது பெயரை எழுதி
அதற்கு பின்னால்
படித்து பெற்ற பல பட்டங்களை
எழுதும் பொழுது
எனது பெயருக்கு முன்னால்
நான் எழுதிய
முதல் எழுத்தாகிய
அப்பாவின் பெயரால்
மேலும் அழகாகிறது
எனது பெயரும்
எனது பெயருக்கு பின்னால்
நீளும் பல பட்டங்களும்,

★



ஒரு சுவர் கடிகாரத்தை
வரைந்து வைத்து தினம் தினம்
நேரம் தவறாமல் அவ்வப்போது
பார்த்து கொண்டிருக்கிறேன்

நிமிடத்திற்கு நிமிடம்
நகர்ந்துக்கொண்டேயிருக்கிறது
என்னை நம்பியவர்களின்
எதிர்காலமும்
என் இறந்தகாலமும்,

★

வெட்ட வெளி
நீல வானத்தின் நிழலில்
மூன்று கல்லை நட்டு தீயை மூட்டி கடனாக
வாங்கிவந்த
மாட்டுக் கறியை சட்டியில் போட்டு
வதக்க வதக்க
வானம் சிவப்பு நிறமாக
சிவக்க ஆரம்பித்தது
தூரத்திலிருந்து
அழுத்தம் திருத்தமாக நீள்கிறது
ஒரு குடியானவனின் குரல்
செத்த மாட்டுக் கறியை
ஆக்கி துண்ண
எங்க நிலம் தான்
உங்களுக்கு கிடைச்சதா யென்றவாறு
இரண்டு பேரையும்
சேர்த்தே தான் துண்ண
காத்துக் கொண்டிருக்கிறது
அந்த ஆறடி நிலம்,

ஜெ.பி. ஆதிரன், சேலம்

# முதிர் கன்னி

திருமண கனவுகளை
உள்ளுக்குள் புதைத்துக் கொண்டு...
நரைத்த முடிகளை
மையிட்டு மறைத்து கொண்டு...
திமிரும் இச்சைகளை
உடலுக்குள் அடக்கி கொண்டு...
ஏழ்மையில் தவிக்கும்
பெற்றோரை மனதில் வைத்து...
எப்பொழுதும்...
யாரிடமும்...
கூசாமல் சொல்வேன்
“இப்பொழுதென்ன அவசரம்
திருமணத்திற்கு..!

ச. இராஜ்குமார்

உனக்கும் எனக்கும் சண்டை ஓராயிரம் முறை
உன்னிடம் மன்னிப்பு வேண்டுதல்கள்

அருகில் நெருங்கி வர நெருங்கி வர
விலகி செல்கிறாய்
பார்க்க மறுக்கிறாய் ஊடல்பொழுது இப்படிதான்
என நாடகம் நிகழ்த்துகிறாய்

எதிரும் புதிருமாய்
நம்மைப் போல
மரக்கிளையில் அமர்ந்திருக்கிறது
ஒரு ஜோடி பறவை....!





ம.ஆச்சின்

# கண்ணாடிகாரனின் கவிதை!

கண் கண்ணாடி இயற்கையை வர்ணிக்கிறது,
பின்னாடி கூடு விட்டுக் கூடு பாய்கிறது!
பார்வையில் பல இயற்கை வண்ணங்கள்,
கண்டு மகிழ்கிறது கன்னங்கள்!
சிந்தனையில் பல எண்ணங்கள்,
உணர வைக்கிறது பல கோணங்கள்!
இயற்கையைக் கண்டேன்,

மனதில் கவியைச் செதுக்கினேன்!
தென்றல் காற்று உள்த்தைக் குளிரச்செய்கிறது,
இயற்கைக் காட்சி சிந்தனையில் கவி
எழுதவைக்கிறது!
ஒய்யார கால்கள் அடர்ந்த காடுகளை வியந்து
நாற்காலியில் உருளுகிறது,
தூரக் கடல் நீர் சுவாசத்தைச் சுவாசித்து
இளைப்பாறுகிறது!
மேகங்கள் உருவமெடுக்கின்றன தேகமாய்,
சரீரத்தை எழ வைக்கிறது வேகமாய்!



# ந.சிறீதரன் கவிதைகள்

## மிலேனியம்

ஓய்வில்லா
மனப்பறவையின்
சிறகுகள்...

விரிப்பதற்குள்
இருண்டு
உருண்டோடும்
காலங்கள்..

அசைப்பதற்கும்
வலிகளும்
ரணங்களும்
எரிபொருளாக...

கல்லறை
வருவதற்குள்
கனவுக் குடையை
விரியுங்கள்
சிலவேளை
விழிகள்
நனையாமல்
இருக்கலாம்...

★

ஏன் இந்த
இசையில்லா
மூங்கில் காடுகள்..
நிஜத்தில்
மன உரசல்கள் கூட
தெறிக்கும்
தீயாகுமே...
இதழ் தீண்டி
விரல் தூண்டும்
ஸ்வரங்களுக்குள்
கூட
பல்லாயிரம்
கீர்த்தனைகள்
கலந்திடுமே...
ஏன் இந்த
இசையில்லா
மூங்கில் காடுகள்..

# சீ.பாஸ்கர் கவிதைகள்

### பறவைகளின் வேண்டுதல்

மறுஜென்மம் எதுவும் வேண்டாமென
இயற்கையிடம் வேண்டிக்கொள்கின்றன
பறவைகள்
கண்முன்னே மரங்கள் வெட்டப்படுவதை
பார்க்கும் போதெல்லாம்

★

### ஆறுதல் பரிசு

நூலறுந்து வானில் தவிக்கும்
தனது பட்டத்தை
கவலையுடன் பார்க்கும்
சிறுவனுக்கு
தன்னிடமிருக்கும் இறகு ஒன்றை
காற்றில் பரிசாக அனுப்பி வைக்கிறது
பறவையொன்று

★

### வேம்பின் வேட்கை

வெவ்வேறு மரங்களில் இருக்கும்
பலவகை கனிகளை ருசித்த
பறவையொன்று
வேப்பங்கிளையில் வந்தமர்ந்தும்
தனது கசப்பை மறுபரிசீலனை
செய்ய நினைக்கிறது மரம்

★

### அம்மாவின் ஏக்கம்

கிழிந்த உடையணிந்திருக்கும்
குழந்தையை இடுப்பில் சுமந்து
கூலி வேலைக்குச் செல்லும் அம்மா
ஏக்கத்துடனே கடந்து செல்கிறாள்
உயர்ந்தரக ஆடைகளணிந்த துணிக்கடை
பொம்மைகளை பார்க்கும்போதெல்லாம்.



த. ரவீந்திரன்..

# என்னை அறியாமல்..

அவ்வப்போது என் மாலையில்
முகம் காட்டாமல் மௌனத்தை
கானமாய் பாடும் குயிலொன்று
அமர்ந்திருக்கும்..

தெரிந்தும் தெரியாதது போல்
இருவரும் கடப்போம் அந்திமாலையை..

அந்தக் குயில் கருமை நிறமல்ல மாறாக
வெளிர் மஞ்சள் நிறத்தில் வசீகரிக்கும்
அழகிலிருக்கும்..

இன்று காணவில்லை
தேடத் தேட தொலைந்த
என்னில் பதற்றமான இதயத்தோடு
கனக்கும் இமயத்தை சுமந்து
செல்கிறது கால்கள்
விடியாத இரவை சுமக்கும்
விதியோடு என்னை அறியாமல்..



பெ.விஜயலட்சுமி

# முகமூடி


எதார்த்தங்களை மறைத்துக் கொண்டு
முகமூடிகளுடன் திரியும் முகங்களே
எப்பொழுது உங்கள் முகமூடிகளை கழட்டி
வைக்கப் போகிறீர்கள்

அடுத்தவருக்கு ஆறுதல் சொல்லும் உங்கள்
கரங்கள்
கண்ணீரைத் துடைக்கும் போதெல்லாம்
உள்ளுக்குள் சிரித்துக் கொண்டிருக்கிறதே
உங்கள் முகங்கள்

உண்மையில்
அசிங்கமாக இருக்கிறது
பொருத்தமில்லாத இந்த முகமூடிகளோடு
உரையாடும் போதெல்லாம்
உண்மை அன்பு
தோற்றுப் போகிறது

ஒப்பனைகள் செய்து பழகியதால்
இப்பொழுது முகமூடிகளுக்கும் ஒப்பனைகள்
தேவைப்படுகிறது
பிடிவாதமாய் போட்டுக் கொண்டிருக்கும்
முகமூடிகளை கிழித்து விடுகிறது
குழந்தையின் ஒற்றை சிரிப்பு

முகமூடியைக் கழட்டி வைத்து விட்டு வா
நேருக்கு நேர் நின்று
ஒரு முறையேனும்
உண்மை முகத்தோடு
எதார்த்தமாய் கைகுலுக்குவோம்!



# இன்னொரு வானவில்...

இரஜகை நிலவன், மும்பை

மாலையின் மயக்கத்தில் பூமி இருளாகிக் கொண்டிருந்தது. வானம் சிவப்பாகிக் கொண்டே போக சூரியன் போதை மயக்கத்தோடு கடலில் விழுந்து கொண்டிருந்தான்.

எதிர் வீட்டில் நிச்சயதார்த்தத்திற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தது. இந்துமதி இறுக்கமாக நிம்மதியில்லாமல் நடந்து கொண்டிருந்தாள்.

"இந்து, நீயில்லாமல் எனக்கு ஒரு வாழ்க்கையா? அதை நான் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது." கையில் முத்தமிட்டு விட்டுச் சென்ற குமரனை நினைத்து அவளுக்குள் குமைந்தாள்.

அந்தக் குமரனுக்கு எதிர் வீட்டு மாலினிக்கும்தான் திருமண நிச்சய தார்த்தம் நடக்கப் போகிறது.

"இந்துமதி உன்னைத்தவிர இந்த உலகத்தில் அழகானப் பெண்ணே கிடையாது. அதிலும் உன் கண்கள்..." குமரன் சொன்ன வசனங்கள் ஞாபகத்தில் வர அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது.

எப்படியெல்லாம் குமரனோடு சேர்ந்து வாழ்க்கையை இரசிக்கலாமென்று கனவுகளோடு சே... பணத்திற்கு ஆசைப்பட்டு இப்படி மாலினியைத் திருமணம் செய்து கொள்ள எப்படி சம்மதித்தான்.

வாசலில் நிழலாட நிமிர்ந்து பார்த்தாள் சித்தப்பா சுரேஷ். "நீ இன்னும் கிளம்பலியா எட்டு மணிக்கு ரயிலைப் பிடிக்கணும். போய் புதுசா வேலையிலே சேரப் போறே...ம் சீக்கிரம் கிளம்பு" என்றார்.

:இதோ புறப்பட்டு விடுகிறேன் சித்தப்பா, கொஞ்சம் இருங்க... அம்மா சித்தப்பா வந்திருக்காங்க. காபி கொண்டாங்க" என்று சொல்லி விட்டு உள்ளே போனாள்.

இரவு முழுவதும் இரயிலில் பயணத்தில் தூக்கம் வரவில்லை. "குமரன் என்னைத் துரத்தித் துரத்திக் காதலித்தாயே... எல்லாமே போலி வேசம்தானா.... ஒரு வேளை நான் எல்லாமே திருமணத்திற்கு என்று சொன்னதற்கான கோபத்திலே... சீ.. நீயெல்லாம் ஒரு மனிதனா.. காமுகன்... உன்னை என் மனதிலிருந்து துடைத்தெறிய வேண்டும்..." என்று கருவினாள்.

"ஆனால் இந்தப்பாழாப்போன மனசு கேட்கமாட்டேன் என்கிறதே.... எவ்வளவு விழுந்து விழுந்து சிரித்துப் பேசினாலும் எவ்வளவு எளிதாக என் இதயத்தில் இடம் பிடித்தாய், இந்த உலகமே நீதானே என்று என்னை ஒரு எல்லைக்குள்ளே போட்டு விட்டு இப்போது நிறைய வரதட்சணை கிடைக்கிறது என்று என்னை மறக்க முயன்றவனே..." என்று மாய்ந்தாள்.

இந்துமதி அந்த இன்சூரன்ஸ் கம்பெனிக்கு வந்து ஓர் ஆண்டு ஆகிவிட்டது. குமரன் அடிக்கடி வந்து இதயத்தில் வந்து இதயத்தில் சிரித்து விட்டுப்போன தருணங்கள் கொஞ்சம் வலிகளை தந்தாலும் அவள் வரிந்து கட்டிக்கொண்டு அவனை மறக்க முயல நிறைய வேலைகளை இழுத்துப் போட்டிக்கொண்டு அதிகமாக வேலைகள் செய்ய, கம்பெனியின் எம்.டி.அவளுக்கு மூன்று முறை சம்பள உயர்வும், பதவி உயர்வும் கொடுத்து விட்டார்.

இரவில் வந்து வீட்டிலே சமைத்துக் கொண்டிருக்கும் போது வந்த வசந்தன் அலுவலகத்தில் புதிதாக வந்து சேர்ந்திருக்கும் அடுத்த டிபார்ட்மெண்ட் மேனேஜர் சிரித்துக் கொண்டே பேசியது மனதிற்குள் சிறிய சலனத்தை ஏற்படுத்தியது.

தலையை ஆட்டிக்கொண்டு தோசை மாவை வார்த்துக்கொண்டு இருக்கும் போது காலிங்பெல் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்து கதவைத் திறந்தாள்.

வசந்தன் நின்று கொண்டிருந்தான். கையில் ஒரு ரோஜாப் பூங்கொத்தோடு "ஏய்... வசந்தன் என்ன விசயம்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இன்று உனக்குப் பிறந்த நாள். பிறந்தநாள் வாழ்த்துகள்" என்று கைக்குலுக்க கை நீட்டியவன் "என்ன மாவுக் கரண்டியோடு... " என்றான்.

"சாரி. என் பிறந்தநாள் எனக்கே மறந்து போச்சு.. உள்ளே வாங்க.." என்றவள் கை கழுவி விட்டு வந்து அவன் வாழ்த்துகளை ஏற்றுக் கொண்டு " என் பிறந்த நாளை எப்படிக் கண்டுபிடித்துக் கொண்டீர்கள்?" என்று சிரித்தபடி கேட்டாள்.

"இது ஒண்ணும் பெரிய விசயமில்லை இந்துமதி, அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் சொன்ன விஷயம் பற்றிப் பேசி விட்டுப் போகலாம்ன்னு.." என்று நாற்காலியில் அமர்ந்தான்.

ஜூஸ் கொண்டு கொடுத்து விட்டு "நான் ஏற்கனவே வாழ்க்கையில் காதலில் தோற்றவள்" என்றாள் மேலே பார்த்துக் கொண்டே.

"இதை ஏற்கனவே சொல்லி விட்டீர்கள். இப்போது என்னோடு வாழ்க்கையை பகிர்ந்து கொள்ள முடியுமா? என்று கேட்கத்தான் வந்திருக்கிறேன்" என்றான் வசந்தன்.

மனதை கொஞ்சம் கண்களை மூடி தேடியவள் அங்கே ஒரு வானவில் வந்து விட்டுப் போனதை உணர்ந்த இந்துமதி "எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்க" என்றாள்.

"தாராளமாக" என்று சிரித்துக் கொண்டு எழுந்தான் வசந்தன்.

அம்பலவன்புவனேந்திரன், யேர்மனி

# இன்றைய வினாக்கள்

புதிரோடு புலர்ந்திடுமே எதிர்காலம் -நம்
புவிமீது படந்திடுமே புதுஜாலம்
சதிராடும் மானிடத்தின் செயலாகும் -மெல்ல
சரிகிறதே சகதியிலே வருங்காலம்

வண்டாடும் மலர்வனமும் கருகிடுமே -பயிர்
வயற்காடு வரண்டினியும் கருகிடுமே
பிண்டமதாய் உருகிவரும் எரிமலையில் -உயிர்
பிரிந்தவுடல் புதைந்திடுமே கரிமலையில்


அண்டவெளி அனலாகி எரிகிறதே -தினம்
அடர்ஓசோன் படலமுமே கிழிகிறதே
கண்டங்கள் பணியாற்றில் மிதக்கிறதே -புவி
காணாத துன்பத்தில் தவிக்கின்தே

கண்டறியா அமிலமும் கலந்திடுமே -ஆழி
கழிவுகளால் உயிரினமும் தொலைந்திடுமே
தண்டனையை தருகிறது இயற்கையுமே -ஏதும்
தடங்களின்றி அழிக்கிறது செயற்கையுமே

கந்தகமும் வெளியெங்கும் கலந்திருக்கு -சுவாச
காற்றோடு நுரையீரல் நிறைந்திருக்கு
வெந்திடவே நஞ்சோடு புகையிருக்கு -இனி
வீழ்ந்திடும் மானுடத்துள் பகைஎதற்கு

துண்டாடியே அகழ்ந்திடும் பூமியிலே - பெரும்
துயர்வந்து சுனாமியாகும் நேமியிலே
திண்டாடும் தலைமுறையும் பாரினிலே -புதுத்
தீர்வறிய ஆய்கிறது வேரினிலே

அறிவியலால் மானிடமே ஞானம் உரை-புது
அழிவுகளில் விடுபடவே காலம் கரை
பொறிமுறையால் பூமியைப் புனிதமாக்கு -நாளை
புதியதலைமுறை கேனும் மனிதம்தேக்கு.





# நஸீபு

ஆர்னிகா நாசர்

தற்கொலை செய்து கொண்டவனின்
கடவுச் சொல்
நான்கு வகை சொற்களாய்
இருளில் சிதறிக்கிடக்கிறது
எங்கோ மரித்துக்கிடக்கும்
உயிர்ச்சொல்லை
இறைவன் கண்டறிய வேண்டியதில்லை
எழுதி ஆட விட்டவனே அவன்தானே?

-வலங்கைமான் நூர்தீன்

குல்மொஹர் மரத்தடி. கீழே நால்வர் அமர்வதற்கு போதுமான சிமின்ட் பெஞ்ச் போடப்பட்டிருந்தது. மரக்கிளையில் நீள ஊஞ்சல் தொங்கியது.

நறுமணாவின் மனக்கண்களுக்குள் குழந்தை பிராய ஊஞ்சலாட்டங்கள் காட்சி துணுக்குகளாய் வந்து போயின.

பத்து நிமிடங்கள் ஊஞ்சலாடிய பின் தான் இறங்கிக்கொண்டு சரபு நிஷாவை ஊஞ்சலில் ஏற்றினாள் நறுமணா.

இருவரும் போதுமான அளவு ஊஞ்சலாடிய பின் சிமின்ட் பெஞ்ச்சில் வந்தமர்ந்தனர்

நறுமணா ரமீஸ் பிலாலி எழுதிய ஒரு கவிதையை முணுமுணுத்தாள்.

வாங்கி வந்த
வரம் அப்படி
என்று தானே
பேசுகிறார்கள்
உன்னைப்பற்றி
புறணி பேசுவோர் கூட
நீ ஏன்
சாபமென்று
புலம்புகிறாய்?''

சரபுநிஷா வெகுவாக கவிதையை ரசித்தாள் ''நுட்பமான கவிதை''

''இந்த இஸ்லாமியக் கவிஞர் தலைவிதியை பற்றி தான் பாடியுள்ளார் என கருதுகிறேன், நீ சொல்லு சரபு... இஸ்லாமில் தலைவிதி என்கிற விஷயம் நம்பப்படுகிறதா?''

சிரித்தாள் சரபு. ''என்ன இப்படி கேட்டுவிட்டாய்? இஸ்லாமின் அடிப்படை தலைவிதிதான். இதனை நஸீபு என்கிற அரபு வார்த்தையால் குறிப்பர். தக்தீர் எனவும் கூறுவர். நஸீப் என்கிற வார்த்தையை இந்தோனேசியா, மலேசியா, பெர்ஷியா, துருக்கி, பாஷ்தோ நாடுகளில் பயன்படுத்துகின்றனர். சிந்தி, சோமாலி, உருது, ஹிந்தி, குஜராத்தி, பெங்காலி, பஞ்சாபி மொழிகளிலும் நஸீபு என்கிற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

''ஓஹோ!''

''நஸீபுக்கு விதியின் விதி, அதிஷ்டம், யோகம், நல்வாய்ப்பு, விதி, கைநிறைய அதிஷ்டம் போன்ற மாற்றுவார்த்தைகள் உள்ளன!''

''அப்படியா?''

''நஸீபு என்கிற வார்த்தைக்கு சமமான பொருள்தரும் வார்த்தைகள் இரண்டை கூறுகிறேன்- பாக்யா, கிஸ்மத்!''

''அப்படி என்றால் அல்லாஹ் ஒவ்வொரு உயிரின் தலையிலும் அதன் தலைவிதியை எழுதி விடுகிறான் என்கிறாயா?''

''தலையில் எழுதப்படுவதில்லை. அனைத்து பிரபஞ்சங்களிலும் நடந்தவை நடக்க இருப்பவை அனைத்துமே அல்லாஹ்வால் எழுதி முடிக்கப்பட்டு விட்டது என நம்புவதுதான் விதியை நம்புவது எனப்படும். உயிர்களின் தலைவிதியை இறைவன் 'லவ்ஹுல் மஹ்ஃபூழ்' எனப்படும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் எழுதுகிறான்...

''மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன. அவனைத் தவிர யாரும் அதை அறிய மாட்டார்கள். தரையிலும் கடலிலும் வானத்திலும் உள்ளவற்றை அவன் அறிவான். ஓர் இலை கீழே விழுந்தாலும் அவனுக்கு தெரியும்.

''உங்களிடம் எந்த துன்பம் நிகழ்ந்தாலும் அதை நாம் உருவாக்குவதற்கு முன்பே பதிவேட்டில் இல்லாமல் இருக்காது. இது அல்லாஹ்வுக்கு எளிதானது- என்கிறான் அல்லாஹ்.

''ஒருவனுக்கு வாழ்நாள் வழங்கப்படுவதும் வாழ்நாள் குறைக்கப் படுவதும் பதிவேட்டில் இல்லாமல் இல்லை.

''பூமியிலும் வானத்திலும் அணுவளவோ அதைவிட சிறியதோ அதைவிட பெரியதோ இறைவனை விட்டு மறையாது.

''பூமியில் உள்ள உயிரினம் எதுவாக இருந்தாலும் அவற்றுக்கு உணவளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும். அவற்றின் வசிப்பிடத்தையும் அவை சென்றடையும் இடத்தையும் அவன் அறிவான் என்கிறது இஸ்லாம்!''

''நல்ல பதில்''

''மார்க்க அறிஞர்கள் இரண்டுவிதமான விதிகள் இருப்பதாக கூறுகிறார்கள். ஒன்று- இறைவன் எழுதிய விதி இதனை யாரும் மாற்ற முடியாது. இரண்டு-

காலவரையற்ற விதி இது மாற்றக்கூடியது!"

"ஒரு மனித உயிருக்கு எப்போது விதி எழுதப்படுகிறது?"

"நூல் புகாரி 3208, 3332, 6594, 7454 களில் அது தொடர்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன நறுமணா!"

"சொல் சரபு!"

"அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அறிவித்தார்- உண்மையே பேசிய வரும் உண்மையே அறிவிக்கப்பட்டவருமான இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் கூறினார்கள். உங்கள் படைப்பு உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாட்களில் ஒருங்கிணைக்கப்படுகிறது. பிறகு அடுத்த நாற்பது நாட்களில் அட்டை போன்ற கருக்கட்டியாக மாறுகிறது. மூன்றாவது நாற்பது நாட்களுக்கு பிறகு சதைப்பிண்டமாக மாறுகிறது. பிறகு அல்லாஹ் ஒரு வானவரை அதனிடம் அனுப்புகிறான். அந்த வானவருக்கு நான்கு கட்டளைகள் பிறக்கப்படுகின்றன. அவை அதன் கருவாக இருக்கும் அந்த மனிதரின் செயலையும் (அவருடைய செயல்கள் எப்படி இருக்கும் எனபதையும்) அதன் வாழ்வாதாரத்தையும் (அவருக்கு என்னென்ன எந்த அளவு கிடைக்கும் என்பதையும்) அதன் வாழ்நாளையும் (அவர் எவ்வளவு நாள் வாழ்வார் எப்போது இறப்பார் என்பதையும்) அது (இறுதி கட்டத்தில்) துர்பாக்கியசாலியா நற்பேறு உடையதா என்பதையும் (நான் விதித்தபடி) எழுது என்று அந்த வானவருக்கு கட்டளையிடப்படும். பிறகு அதனுள் உயிர் ஊதப்படும்.."

"மயிர் கூச்செறிகிறது எனக்கு!'

"உங்களில் ஒருவர் நற்செயல் புரிந்து கொண்டே இருப்பார். எந்த அளவுக்கு என்றால் அவருக்கும் சொர்க்கத்துக்கும் இடையே ஒரு முழம் தூரம்தான் இருக்கும். அதற்குள் அவரின் விதி அவரை முந்திக்கொள்ளும். அவர் நரகவாசியின் செயலை செய்து நரகம் புகுவார். உங்களில் ஒருவர் தீயசெயல் புரிந்து கொண்டே இருப்பார். எந்த அளவுக்கு என்றால் அவருக்கும் நரகத்துக்கும் இடையே ஒரு முழம் தூரம்தான் இருக்கும். அதற்குள் அவரின் விதி அவரை முந்திக்கொள்ளும். அவர் சொர்க்கவாசியின் செயலை செய்து சொர்க்கம் புகுவார்..."

"நீ சொல்றதை பார்த்தா பிறவியிலேயே மனிதன் கெட்டவனாக அல்லது. நல்லவனாக படைக்கப்படுகிறான் என்றாகிறது. அப்படி என்றால் எதற்கு தொழுகை? எதற்கு ஜக்காத்து? எதற்கு நோன்பு? எதற்கு ஹஜ் யாத்திரை?"

"நல்ல கேள்வி மூன்று விஷயங்கள் நஸீப்பை மாற்றும் வல்லமை கொண்டவை. தொழுகை பிரார்த்தனை தானம் தவிர நம் நேர்மறையான எண்ணங்கள் நம் நஸீபை மேம்படுத்தும்!"

"மூன்றுமே மனிதரால் செய்யக்கூடியவை தான்!"

"இறைவனுக்கு இணை வைக்காமல் இறைவனின் மீது முழுநம்பிக்கையும் கொண்டு ஒருவனோ ஒருத்தியோ நடந்தால் இறைவன் அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் சிறப்பானதை பரிசளிப்பான்!"

"இறைவனின் நஸீபு ஒரு தண்டவாளம் என்றால் தானம் பிரார்த்தனை தொழுகை நற்செயல்கள் மறுதண்டவாளம் எனலாம்"

'தாராளமாக. நான் சொன்னதை சிறப்பாக புரிந்து கொண்டாய். ஒரு ஆணுக்கோ பெண்ணுக்கோ இறைவன் நாடினால்தான் நேர்வழி!'"

"ஒவ்வொரு ஜீவராசியின் முதுகுக்கு பின்னும் இறைவன் இருந்து இயக்குகிறான் அவன் எழுதிய நாடகத்தில் நாம் அனைவரும் கதாபாத்திரங்கள். அவன் எழுதிய வசனங்களே நம் வாழ்க்கை. நம் பிரார்த்தனைகளுக்கு ஏற்ப சில சமயம் வசனங்கள் மாற்றி எழுதப்படுகின்றன.."

"சபாஷ்!" கைதட்டினாள் சரபுநிஷா. "அதி முக்கியமான உண்மை ஒன்று சொல்லவா?"


"சொல்!"

"நஸீபு பற்றி நீ கேட்டதும் நஸீபு பற்றிய விளக்கங்கள் நான் சொன்னதும் இறைவனின் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கும்!"

"அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது!" கோரஸாய் கிசுகிசுத்தனர் வானவர்கள்.

பிரபஞ்சத்தின் விருந்தாளியான
உன்னை வரவேற்க
ஒவ்வொரு அணுக்களும் தகைந்து
நிற்கின்றன
பூட்டை பூட்டியவன்
சாவியை உன்னிடமே கொடுத்து
விட்டான்
ஆட்டுக்குட்டியை தோளில்
போட்டுக்கொண்டு மந்தையின் எண்ணிக்கை
குறைந்துவிட்டதென
புலம்பும் முட்டாள் மேய்ப்பனே!
விதிவசப்பட்டோலையின் வைர
வரிகளை எழுதும் ரட்சகனின்
நாட்டத்தோடு
உனது நாட்டத்தை இணைத்துவிடு.

-நிஷா மன்சூர்



கவிஜி

# கத்தரிப் பூக்கள்

எத்தனை நேர்த்தியாக நறுக்குகிறான்
அத்தனை கண்ணாடியிலும்
கத்தரிப் பூக்கள்
எங்கு தேவை இருக்கிறதோ
அங்கு நிறுத்தி
யோசனை கேட்கிறான்
அப்படி ஒரு சீடன் மொழி
இன்னொருவர் தலை
தன்னிச்சைக்கு அப்பாற்பட்டது
அறிந்த முனி போல
அதிராத ஒழுங்கு நடை
இடமிருந்தும் வலமிருந்தும்
ஒரு வாசிப்பை நிகழ்த்துகிறானோ
கரக் கரக் கரக் கரக்
சீராக சீப்பு வழியில்
சிகை செதுக்குவதும்
சிற்ப பாடு தான்
இறுதியாக எல்லாம் முடிந்து
நவாப்பழ கூடையை தலைக்கு
தூக்குவது போல இருக்கிறது
கழுத்தெல்லாம் பவுடர் இட்டு
பொத்தினாற் போல
துடைத்து விட்டு
துண்டை உதறி
எந்திரிக்கலாம் என்று
ஜாடை காட்டுவது....!

முனைவர் மு.கவியரசன், திருநெல்வேலி.

# கலங்கிய இதயம்...

அந்த மரத்திற்கு
அடியில் நிற்பது
வேதனையையும்
எல்லையற்ற
சங்கடத்தையும் தந்தது

மேல் மூச்சு
கீழ் மூச்சு - என
பெரு மூச்சு விட்டுக்கொண்டாலும்
அவளைக் காண
காலங் காலமாகக்
காத்திருந்தத் தருணம்
அது

எப்படியாவது காதலித்துவிட வேண்டும்
மனைவியாக்கிக்கொள்ள வேண்டும் - என்று
தன் இறகுகளையெல்லாம்
நேர்த்தியாக
வெட்டியிருந்தேன்

என்
அலகினையும்
அழகாக
செதுக்கியுமிருந்தேன்

காலம்
எல்லாவற்றையும் மாற்றிவிடும்
என்பதை - நான்
எதிர்பார்க்க வில்லை

பார்வையின்
பரிபாசைகள் - என் மீது
தெளிக்கப் பட்டிருந்தது

பல நாள்
காத்திருப்புக்குப் பின்
என்னிடத்தில் பேசினாள்
அவள்

வாழ்க்கையின்
முதல் படி - நிறைந்து
திறந்திருந்தது

எங்கெங்கோ சென்றேன்
கிடைத்த
சிறு சிறுக் குச்சிகளை யெல்லாம்
அலகுகளால் கவர்ந்து
ஆர்வத்தோடு கட்டிய
முதல் கூடு

வெயிலின் தாக்கம்
வியர்வையால்
குளிக்க வைத்தது
மன்னிக்கவும்
அதில்
கண்ணீரும் கலந்திருந்தது

அவர்கள்
ஏன் இங்கு வந்தார்கள்
என்று எனக்கு தெரிய வில்லை

கையில்
கொண்டு வந்த கருவிகள்
கலக்கத்தினை ஏற்படுத்தியது

இதயத்தில்
குத்திக் கிழித்த
பெரும் வலி

ஒவ்வொரும் கிளைகளும்
கண்முன்னே
வெட்டப்பட்டு
வீழ்ந்தது

சிலர்
அவற்றை
அடுக்கடுக்காக அடுக்கி
வைக்கின்றனர்

அவ்வடுக்கிலிருந்து
வீழ்ந்த கூடும்
கண்ணீர் துளிகளைத்
தானமாகத் தந்து
இறக்கிறது

வெயில் சுட்டெரித்தது
மேனியினை மட்டுமல்ல
இதயத்தையும்....

அவள்
இப்போது வரக்கூடும்....

ஜே.வஹாப்தீன்

# கவிதை காற்று நீர்

கழுவிய அரிசியாய்
உள்ளப்பானையில் புழுங்கிய சொற்களைச்
சோறாக்கி
கவிதைக்கு சோறு படைக்கலாம்;
கவிதை ஒருபோதும்
சோறு தந்ததில்லை.

காற்று நீர் கொதிப்பதனால்
இந்தப் பானை
அடிக்கடி புழுங்கி
அவித்துத் தருகிறது அடிசில்.

ஆவிபறக்கப் பறக்க
காகிதங்களுக்குப் பசிதீர்த்துவிட்டு
கிணற்று நீரை மட்டும் குடித்து
கிடுகு வீட்டுத் தின்னையில்
மல்லாந்து கிடந்த இளமைக்காட்சிகளை
ஞாபகமூட்டுவது
கவிதைகள்தான்.

கவிதையும் நன்றியுள்ளது.

காலங்கடந்தாலும்
காட்சிகளை அது மறைப்பதில்லை.

காற்று நீர் உறவாடும் வரை
மனப்பானை கொதிக்கும்
காலம் தீ மூட்டும்
தொடர்ந்து சொற்கள் புழுங்கும்
கவிதை பசியாறும்.

கவிதைக்குத்தான் பசி தீர்க்கத் தெரியாது.
பாவம் வயிறு;
பாவம் புலவன்.

ரோஷான் ஏ.ஜிப்ரி

# ஓர் இலையின் செருக்கு.

உன்னை ஏமாற்றிய
பூக்காலங்கள்
உன்னுடன் இல்லை
இன்று உதிர்காலத்தில்......,
ஓர் உதிரி உன் இருப்பு
ஆயினுமென்ன....
நீ பல....,
கிளைகளுக்கான வேர்
இன்று பழுத்துதிர்ந்த
சாமானியச் சருகென
தூற்றுவார் தூற்றட்டும்
போற்றுவோர் போற்றட்டும்
நீ நிழலின் தசையானது
நீ காற்றின் விசையானது
இறப்பு வரைக்கும்
இரப்பைக்கு தேவையுண்டு
இருப்பை இன்னும் பதி
உன் ஆலாபனைகள்
இந்த காற்றில் கலவி கொள்ளும்
காதுகளுக்கு எட்டிய தூரம்வரைக்கும் இசையால்
இனிமை சேர்க்கும்
பிரதிகள் தேவையில்லை
பிம்பங்கள் உடை
தனித்துவத்தால்
தகவு கொள்
பிடிவாதம் ஒரு பிடியாவது இருக்கவேண்டும்
உரமாவதிலும் உயர்வு உண்டென
கர்வம் கொள்
சருகாக வாழ்ந்ததிலும்
சரித்திரம் என்று
ஊரென்ன இந்த உலகம்
உணரும்வரை
காற்றோடு கலந்திரு
நீ ஒரு விருட்சத்தின் விதை!
நீ ஒரு வெளிச்சத்தின் கதை!!

கீத்தா பரமானந்தன்

# புதுமைப் பெண்!



படைப்பின் புதுமை பாரினில் பெண்மை
பரவசம் சொரியும் பன்முகத் தன்மை
நடைமுறை உலகில் நாளும் இன்னலை
நயந்து நிற்கும் நாட்டாண்மை உலகின்
முடைகள் எல்லாம் மூலையில் தள்ளி
முகிழ்ந்து தருவதோ முல்லையின் சுகந்த
படையாய்க் காப்பாள் பண்புடன் மனிதம்
பகலிரவு இல்லா பம்பரம் இவளாய்

சுற்றிடும் பூமியின் சுழற்சியின் மாற்றத்தில்
சுந்தர மான சுந்திரக் கமழ்வைப்
பற்றிடு படர்ந்திடு பாவையே நீயென
பாட்டினால் உயர்த்தினான் பாரதி கனலினை
கற்றலின் பெருமையைக் காத்திரம் ஆக்கி
கனவுகள் வளர்த்துக் காட்சியாய் மாற்றியே
பெற்றிட்ட புலமையில் பேதமை விலக்கி
பேரெழில் அறிவெனுப் புத்துணர்வு பெற்றாள

வண்ணகள் சிந்தும் வனப்புறு பூமியில்
வனிதையர் தடங்களும் வலிமையாய்ப் பதிந்தது
எண்ணிய முடிக்கும் எழிலுடை சக்தியாய்
ஏந்திழை இவளும் இசைக்கிறாள் இன்னிசை
பின்னிடும் தளைகளின் பேதமை விலக்கிட
பிறக்குது புதுயுகம் பிறள்விலாப் பாதையில்

தன்னை உணர்ந்து தடம்புரளா நெறியில்
மன்னுயிர் மதித்து மகிழ்வினை ஏந்தி
விண்ணிலும் மண்ணிலும் வீரமாய் எல்லையிலும்
விருப்புடன் தொடர்கிறாள் விநயமாம் செயல்கள்
சரீரம் சம்பிரதாயச் சடங்குக்குள் அமிழ்த்தினும்
சந்தனம் என்றே சதா உரைபட்டுச்
சரித்திரம் படைக்கின்ற சதாவதானி இவளாய்ச்
சாதித்து நிற்கிற புதுமைபெண் இவளே.



# காத்துக் கருப்பு...

(முனிபாய்ச்சல் 200 மீட்டர்)

இரா. மதிராஜ்...

“ஏல மாரிமுத்து

நேத்திக்கு ஏழு மணி வரைக்கும் என் கூடத்தான் இருந்த அதுக்குப் பெறவு

எங்கலேப் போன?

உன்னைக் கண்டு பிடிக்க முடியல “

“அண்னே அது வேற ஒன்னும் இல்ல அண்னே

நைட் வீட்டுக்கு போக லேட் ஆச்சுன்னா எங்க அம்மா வந்து என்ன ஏசிச்சிட்டு இருக்கும் அதான் போய்ட்டேன் “

“ உங்க அம்மா வந்து எதுக்குடா உன்னை ஏசுறாங்க “

“அண்னே அது வேற ஒன்னும் இல்ல அண்ணா நைட் ஆச்சுன்னா வந்து காத்து கருப்புனு எங்க அம்மா பயப்படுறாங்க “

“சும்மா எதாவது உளறாதலே

என்னலேப் பெரிய காத்துக் கருப்பு”

“....”

“காத்து எப்போதும் தான் நம்மக் கூட தான் இருக்கு “

“...”

“ அதுக்கு போய் பயப்படலாமா லே “

“அண்ணனே நீங்கச் சொல்றது நல்லா தான் இருக்கு உங்களுக்கு அதே மாதிரி ஒரு நிலைமை வந்தால் தான் நீங்க நான் சொன்னதைk கேப்பீங்கன்னு நினைக்கிறேன் “

“நீ பாரு வெள்ளையா இருக்க”

“...”

“ என்னையப் பாரு அண்ணன் கருப்பா தானே இருக்கிறேன்”

“யோவ் சும்மா வந்து தெரியாத மாதிரி நடிக்காதும்மையா “

“ எனக்கு சத்தியமா தெரியாது லே நீ கொஞ்சம் சொல்லு லே “

“இப்போ உங்க வீட்டு பக்கத்துல இருந்து

இந்த இடிஞ்சுப் போன வீடு இருக்குல”

“ஆமா “

“அங்கிருந்து அப்படியே முனியம்மா ஆச்சி வீட்டு வழியா போனோம்னா

ரேவதி அக்கா வீட்டைத் தாண்டி முக்குல திரும்பினதும் இடிஞ்சு விடு ஒன்னு கிடைக்கல”

“ஆமாம் லே “

“....”

“ஆம் லே நீ எதுக்கு ஊர்ல உள்ள எல்லா வீட்டையும் வரிசையா சொல்லிட்டு இருக்க? “

“யோவ் கொஞ்சம் அவசரப்படாம சொல்றத கேளும் யோய்”

“ ஏல சீக்கிரம் சொல்லித் தொலை லே “

“அப்படியே போனோம்னா

சங்கத்தை தாண்டி

அவரு யூனியன் ஆபீஸ் லே வேலை பார்க்கல நாராயணா அண்ணாச்சி வீடு இருக்கலா “

“ஏலே கொஞ்சம் கதையை நீப்பாட்டு, நாராயண அண்ணாச்சி வீட்டைப் பத்தி நான் ஏற்கனவே கொஞ்சம் கேள்விப்பட்டு இருக்கேன் லே இப்ப தான் கொஞ்சம் எனக்கு வயித்த கலங்குறது மாதிரி இருக்கு மாரி முத்து “

“ யோவ் இதுக்கே இப்படி பண்றீர் யோய் இன்னும் கதையை நான் சொல்லியே முடிக்கல “

“...”

“ அப்படி போன சாமியார் முடுக்கு வரும்

தெரியுமா? “

“சாமியார் முடுக்கு தெரியாம இருக்குமா லே

நம்ம ஸ்கூலுக்கு பக்கத்துல தான அது இருக்குது”

சரியா நான் நேரா வந்து உம்ம வழிக்கே வரேன்

“நான் சொல்ற ரூட்ல நீர் மட்டும் நைட்டு ஒன்பது மணிக்குப் போய் வந்திரும்”

“நான் போயிட்டு வந்துட்டா நீ என்னலே செய்வே? “

“அப்படி மட்டும் நீர் மட்டும் போயிட்டு வந்துட்டா

நீர் ஒரு தைரியமான ஆளு தான்னு நான் ஒத்துக்குறேன் வே “

“சரி நீ சொல்ற ரூட்ல நான் வந்து போயிட்டு வந்துட்டா நீ என்னலே வாங்கி கொடுப்ப சொல்லு லே “

“....”

“ நான் கேக்குறது நீ வாங்கி கொடுப்பியா? “

“யோவ் நீர் என்ன வேணாலும் கேளும் ஒய்

இத செஞ்சிட்டு என்னது கேட்டாலும் நான் வாங்கி குடுக்குற ன்

இது பெட் ஒய் “

“ சரி நம்ம தீன் பாய் புரோட்டோ ஸ்டால்ல நமக்கு ஒரு செட்டு புரோட்டா மட்டும் வாங்கி கொடுத்திரு லே “

“இத செஞ்சிட்டு நீங்க கேக்கும் போது உமக்கு கண்டிப்பா வாங்கி கொடுப்பேன்”

“ மவனே சனிக்கிழமைக் காசு எடுத்து ரெடியா வை லே “

“ பெட்டு தான்யா”

இப்படி குழந்தை ஆசாரி மகன் மாரிமுத்தும் நானும் பேசிட்டு இருக்கோம்

பெட் தைரியமா கட்டியாச்சு

ஆனா உள்ளக்குள்ள ஒரு பயம் இருக்கத்தானே செய்யுது

ஆறுமுகம் அண்ணன் வீடு,

ரேவதி அக்கா வீடு,

முனியம்மாச்சி வீடு வரைக்கும் மட்டும் சரி,

அப்பறம்

திரும்ப எப்படி அதில் சாமியார் முடுக்கு வரைக்கும் போக முடியுமா? அதுவும் நைட் ஒன்பது மணிக்கு..

இதுல வேற ஒத்தையில வேற போவேன்னு சொல்லியாச்சு

ஏற்கனவே எங்க அம்மா அப்பா வேற சொல்லி இருக்காங்க அதுல முனி பாய்ச்சல் வேற இருக்குன்னு சொல்லி இருக்காங்க..

நம்ம வேற அவன் கிட்ட வீர வசனம் வேறப் பேசிட்டோம்

வீட்ல இதைச் சொன்னா செருப்படி தான் விழும் என்ன பண்றது?

நம்ம ஊர்ல ஒரு விவரமான அண்ணன் ஒருத்தர் இருக்காரு

அவர்ட்ட நைஸா வேணாக் கேட்டு பாக்கலாம்

அவரு என்ன சொல்றாருன்னு தெரியல

விஷயத்தை சொல்லவும்

“ ஏலே என்ன கோட்டிக்கார பையன் மாதிரி பேசுற லே

சாமியார் முடுக்குல தான்

முட்டையை அடிப்பாங்க உனக்கு தெரியுமா? தெரியாதா? லே “

“ஆமாம் அண்ணன் எனக்கு தெரிம் அண்னே சித்திரை மாசம் வடக்குத் தெரு அம்மன் கோவில் கொடைக்கு கொடை குடுக்கும் அன்னைக்கு முட்டையை வைத்து அடிப்பாங்கனே...”

“சரி சரி பார்த்து சூதானமாய் இரு லே “

“....”

எல்லா இரவுகளிலும்

இடிந்த வீட்டின் அருகில் நின்று


முனிப் பாய்ச்சல் தெருவில் நடக்க ஆரம்பிக்கிறேன்

கடைசிவரை அந்த சாமியார் முடுக்குக்கு போய் நான் சேரவே இல்லை

இப்போதும் மாரிமுத்து மற்றும் நண்பர்கள் அனைவரும்

பாய்க்கடை புரோட்டாவை பத்தி ஆகா ஓகோ ன்னு என்ன பேசினாலும்

நான் அந்த இடத்தை விட்டு வேறு எங்கேயாவது சென்று விடுகிறேன்....



ச.ஆனந்தகுமார்

# முற்று பெறாத கவிதை

இருப்பதை விட
இல்லாமலிருப்பதே
நிம்மதி
எனப் புரியவைக்கும்
கடைசி நிறுத்தம்

★

வாழ்ந்து முடித்த மொத்த
வாழ்க்கையையும்
பிரியங்களில்
வழிகிற கண்ணீரை
தணிக்கை செய்தால்
தெரிந்துவிடும்..

★

இறந்தது உடனிருப்பவர்களுக்கு
சொர்க்கம் என்றால்
நரகத்திற்கும்
இறந்தது உடனிருப்பவர்களுக்கு
நரகம் என்றால்
சொர்க்கத்திற்கும் பயணப்படலாம்..

★


இந்த நாளில்
மறக்காமல் செடி ஒன்றை
நட்டு வையுங்கள்..
பூக்கிற பூக்களில்
நான் மறுபடியும் சிரிக்கலாம்..

★

காதல் பாசம் நட்பு
மரியாதை நேசம்
எல்லா உணர்வுகளும்
முடிவது கண்களில் வழிகிற சில
நிமிட கண்ணீரோடு

★

பூவைத்து புகைப்படத்திற்கு
சட்டமடித்து ஊதுபத்தி
வைப்பதோடு மிச்சமற்று
முடிவிற்கு வருகிறது மரணம்



# மாலை – ஐந்து நிமிடத் திரைப்பிரதி

கே.எஸ்.சுதாகர்

*நான்கு பாத்திரங்கள் : ஆனந்தன், மல்லிகா, கார் சாரதி, சிறுபெண்*

**காட்சி 1**

*வெளி*

*மதுரை நகர்*

**காலை**

வாடகைக் கார் செல்கின்றது. பின் சீற்றில் ஆனந்தனும் மல்லிகாவும் இருக்கின்றார்கள். ஆனந்தன் வேட்டி சட்டையுடனும், மல்லிகா சீலையுடனும் அமர்ந்திருக்கின்றார்கள். க்ளோஸ் அப் / close up.

*ஆனந்தன் : தம்பி... அம்மன் கோயிலுக்குப் போக இன்னும் எவ்வளவு நேரம் பிடிக்கும்?*

*கார் சாரதி : வலப்பக்கம் திரும்பிப் பாருங்க... தூரத்திலை கோபுரம் தெரியுது*

ஆனந்தனும் மல்லிகாவும் சாரதி சொல்லும் திசை நோக்கிப் பார்க்கின்றார்கள். தூரத்தில் ஒரு கோபுரம் மறைவாக மங்கிய பனிப்புகாரில் தெரிகின்றது.

## காட்சி மாற்றம் 2

வெளி

கோவிலின் முன்

**காலை**

கோவிலின் வெளிப்புறக் காட்சி. தெரு முழுவதும் கடைகள். ஆரவாரமாக மனிதர்கள். தேநீர்க் கடைகள், பூக்கடைகள், கார்கள், விலத்த முடியாத மனிதர்கள். ஒரே இரைச்சல்.

கார் சாரதி : மன்னிக்க வேண்டும். காரைக் கோயிலுக்கு முன்னாலை நிப்பாட்டேலாது. இதிலை இறங்கிக்குங்க. உள்ளை போய் தரிசனத்தை முடிச்சுட்டு இந்த மரத்தடிக்கு முன்னாலை வாங்க. நான் காரை எங்கையாவது வசதியான இடத்திலை நிப்பாட்டிப் போட்டு அந்தத் தேத்தண்ணிக் கடைக்குள்ளையிருந்து உங்களைப் பாத்துக்கொண்டு நிப்பன். (சாரதி ஒரு மரத்தையும், பின்னர் தேநீர்க்கடையையும் காட்டுகின்றான்)

கார் சாரதி அவர்களை இறக்கிவிட்டுப் போய் விடுகின்றான்.

மல்லிகா : அம்மா... தாயே! இந்த முறையாவது எனக்கொரு புழு பூச்சியைக் குடுத்துவிடு தாயே! (கோபுரத்தை நோக்கி இரு கரம் கூப்பி வழிபட்டவாறே முணுமுணுக்கின்றாள். அவளின் முணுமுணுப்பு ஆனந்தனுக்குக் கேட்கின்றது. அவன் அவளைக் கவலையுடன் பார்க்கின்றான்.)

ஆனந்தன் : எட... றைவரைக் கேட்டிருக்கலாம். இப்ப எந்தப் பக்கத்தாலை கோயிலுக்குப் போறது? கனக்க கோபுரங்கள் தெரியுதே!

மல்லிகா : (ஒரு கோபுரத்தைச் சுட்டிக் காட்டி) உதுதான் கிட்டவாக் கிடக்கு... உதாலை போவம்.

இருவரும் நடக்கத் தொடங்குகின்றார்கள்.

சிறு பெண் : அம்மா... ஒரு முழம் பூ வாங்கிக்கோம்மா... உங்களுக்கு நல்ல அழகா இருக்கும்.

சத்தம் வந்த திசை நோக்கி மல்லிகா பார்க்கின்றாள். பத்து வயது மதிக்கக்கூடிய சிறுபெண். அப்படியே உருக்கி வார்த்த அம்மன் விக்கிரகம் போல அழகாக இருக்கின்றாள். அவளின் ஆடையில் ஏழ்மை தெரிகின்றது. கோவில் சூழல் என்பதால், குளித்து மங்களகரமாக கந்தையானாலும் கசக்கிக் கட்டி நிற்கும் அவளின் நெற்றியில் விபூதி சந்தணம். மல்லிகாவின் மனம் ஏக்கம் கொண்டது.

மல்லிகா : ஒரு முழம் என்ன விலை?

சிறு பெண் : நூறு ரூபா தாங்க அம்மா...

அவளிடமிருந்து ஒரு மாலையை, நூறு ரூபா குடுத்து வாங்கிச் சொருகியவாறு கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள் மல்லிகா. சிறு பெண் மல்லிகாவை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் ஏதோ தொக்கி நின்றது.

சிறு பெண்: அம்மா.... இன்னும் ஒரு மாலைதான் இருக்கு. அம்மனுக்குப் போட வாங்கிக்கோம்மா... இதையும் வித்துப்புட்டேன்னா நான் பள்ளிக்குப் போயிடுவேன்.

மல்லிகா ஆனந்தனைப் பார்த்தாள். அவன் மற்ற மாலையையும் வாங்கும்படி தலையாட்டினான். மல்லிகா அந்தச் சிறு பெண்ணைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டாள். ஆனந்தன் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். மல்லிகா மாலையை வாங்கியபடியே,

மல்லிகா : பிள்ளைக்கு என்ன பெயர்?

சிறு பெண் : அஞ்சலி

மல்லிகா : அஞ்சலி – அம்மனின் பெயரல்லவா!

சரி... சரி... பின்புறம் திரும்பிக்கோ..

அஞ்சலி தயங்கியபடியே மல்லிகாவையும் ஆனந்தனையும் பேந்தப் பேந்த முழித்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.


மல்லிகா : திரும்பிக்கோம்மா...

சிறு பெண் மெதுவாகத் திரும்பி மல்லிகாவுடன் ஒட்டி நின்றாள். ஒரு பிள்ளையின் நெருக்கத்தை மல்லிகா உணர்ந்தாள். அவளின் தலையில், ஒரு அம்மாவின் கரிசனையுடன் அந்த மாலையைச் சூட்டினாள்.

சிறு பெண் : அப்ப சாமிக்கு?

மல்லிகா : நீதானடி என்ரை சாமி

சிறு பெண்ணைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டாள் மல்லிகா. சிறு பெண்ணிற்கு ஒன்றும் புரியவில்லை. மடை திறந்த வெள்ளம் போல் மல்லிகாவின் கண்களில் இருந்து கண்ணீர் தாரையாக வழிந்தது. அவளைப் பார்த்த ஆனந்தன் கண்ணைக் கசக்கிக் கொள்கின்றான். சிறு பெண் அவர்கள் இருவரையும் பார்த்துவிட்டு, இருவருக்கும் எதிர்ப்புறமாகத் திரும்பி நின்று குலுங்கிக் குலுங்கி அழுகின்றாள்.



நற்பவி மணிபாலா (திருப்பூ)

# பெண்ணின் பெருந்தக்க யாவுள..

*கண்ணின் மணியன்ன பெண்ணின் நல்லாள்!*
*கல்லைக் கனியாக்கும் சொல்லில் வல்லாள்!*
*காவியத்தலைவி யவள் அழகோவியம் போன்றாள்!*
*பாதாதிகேசம் பாராளும் அழகுடை சீராள்!*
*போர் செய் வாள் அன்ன*
*வேல் விழி இரண்டும் பாழ்*
*செய் பகை அழிக்கும் போர்த்தொழில் வேங்கை*
*மங்கை அவள்கங்கை*
*ஆதி அந்தம் பாதி*
*தந்த*
*ஜோதி சிவன் சக்தி*
*ஆதிபராசக்தி வான் முதல் மண்/வரை ஆளும்*
*பெண்ணரசி மங்கள*
*மகராசி பேசும் தமிழ் வீசும்*
*கவரி பூசும் மஞ்சள் மணக்கும்*
*சுவாசினி பிள்ளைத்தமிழ் சொல்லில் பிறந்த*
*பிள்ளை இலக்கியமாய் இலக்கணமாய்*
*இருப்பவள்/*
*இல்லத்தரசி அவள் மனைமாட்சி மானுட*
*மனசாட்சி நல்லோர்க்கு பெண் விசுவாசி*
*அல்லார்க்கு அவளே கொடும் ராட்சசி*
*வாழிய பெண்ணினம் ஊர் மெச்சி*


கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# கலயங்கள் காலியாய்

*களிமண்ணில் வடிச்சேனே கையாலே கலயம்!*
*பளிங்காவே மின்னுமே பகட்டிலா கலையும்!*
*ஈரத்தில் தோச்சிதானே எழிலான வடிவம்!*
*பாரத்திலே அழுவுதே குவயனென் குலமும்!*

*பலவிதமே செஞ்சும் பலனிலா தொழிலாளி!*
*சூளைக்கு நேராவே சூடிருக்கும் வயித்தாழி!*
*வெந்தெழுமே எண்ணம் வேர்வையே மிச்சம்!*
*மந்திரத்தாலே வாழ்க்கை மாத்திடுமோ எச்சம்!*

*கலயங்கள் காலியாய் கவலையே எந்நாளும்!*
*பலமேது வறுமையிலே பாரந்தானே வாழ்வும்!*



# ஜென் கதை

ஸ்ரீவி.முத்துவேல், துபாய்

அலைபேசியில் ரிங்க்டோன் ஒலித்துக்கொண்டிருந்தது.

பாத்ரூம் கதவைத் திறந்ததும் அலைபேசியை எடுத்து,

சொல்லு மச்சான் என்றான் விஜய்.

“இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் டா மச்சான் “ என்றான் செல்வா.

டே நீ குளிச்சிட்டு கௌம்பிரு நான் உன்ன ஒரு இடத்துக்கு அழைச்சிட்டுப் போறேன்.

தேங்க்ஸ் டா. எங்கப் போறோம்

அது தான் சஸ்பென்ஸ்... நீ கௌம்பிரு நான் வர்றேன்.

ஒகே.

சில நிமிடங்களுக்குப் பிறகு காரிலிருந்து இறங்கி வந்தான் செல்வா.

ஏய் விஜய் கிளம்பிட்டயா?

கிளம்பிட்டேன். இப்பயாச்சும் சொல்லு எங்கப் போறோமுனு...

வா போற வழியில சொல்லுறேன்.

கொழும்பிலிருந்து நகர நகர

மாத்தளையின் குளிர் நெருங்கி நெருங்கி வந்தது.

சாப்புட்டுப் போலாமா?

சரி டா.

எடன்வலவையில் உள்ள ஒரு உணவகத்தில் சாப்பிட்டு மீண்டும் நகரத் தொடங்கியது அவர்களின் கார்.

இடையில் கரை நிறுத்தி

அண்ணா... வல்பொலமுல்ல கிராமத்துக்கு எப்படிப் போறது என்று டீக்காரரிடம் கேட்டார்.

ஒரு இரண்டு கிலோமீட்டர் போங்க..எடன்வல செக்போஸ்ட் இருக்கும்..அங்க பாரெஸ்ட் ஆபிஸர்கிட்ட பெர்மிஸ்ஸின் வாங்கிட்டு போகணும்.

சரிங்க அண்ணா.தேங்ஸ்

இந்தா செக்போஸ்ட் வந்துருச்சு விஜய்..

ட்ரக்கிங்க்கு ரெடியா? பர்த்டே பாய்

ட்ரக்கிங்க்கா? இத முன்னாடி சொல்லிருந்தா ஷூ எடுத்துட்டு வந்திருப்பன்ல

இந்தா ஷூ....

இது எப்படா வாங்குன?

உன்னோட பர்த்டேக்கு வாங்குனது. இதப் போட்டுட்டு வா போவோம்.

சில நிமிடங்களுக்குப் பிறகு...

சரி போலாம் செல்வா.

காரை பார்க்கிங் செய்து விட்டு அவர்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு சென்றனர்.

வல்பொலமுல்ல கிராமத்திற்குத் தானே போறீங்க என்று கேட்டார் செக்போஸ்ட்டில் வனத்துறை அதிகாரி

ஆமாங்க சார்.

உங்க பேர சொல்லுங்க ஐடி காடு குடுங்க

சாயங்காலம் ஐஞ்சு மணிக்குக்கெல்லாம் கீழ இறங்கிருங்க..ஓகே?

ஓகே. தேங்ஸ் சார்..என்று சொல்லிவிட்டு வல்பொலமுல்ல கிராமத்திற்குச் செல்லும் பாதையில் இருவரும் செல்பி எடுத்துக் கொண்டனர்.

டே என்ன... பாதை இப்படி இருக்கு..

ரெம்பா ஸ்டீப்பா போகுது.... கல்லா வேற இருக்கு..

விஜய் ட்ரக்கிங்குனா வேற எப்படி இருக்கும்.. எனக்கும் இது தான் பர்ஸ்ட் டைம்..

யாரும் இந்தப் பாதையில போன மாதிரியும் தெரியலேயே என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் செல்வா.

சிறிது தூரம் நடந்த பிறகு

செமயா மூச்சு வாங்குது செல்வா.. இங்க கொஞ்சம் நேரம் உட்கார்ந்துட்டுப் போவோமா..?

ம்ம்.. எனக்கு ரெம்ப தாகமா இருக்கு...தண்ணி பாட்ல குடு..

மச்சி இங்க எவ்ளோ மரங்கள் இருக்கு பாரு..

ம்ம்ம்ம்...எல்லாம் ரெம்பா உயரமா, பெருசா இருக்குல என்று சொல்லி சில போட்டோக்கள் எடுத்தனர்.

சரி வா கொஞ்சம் வேகமா நடப்போம் விஜய்.. அஞ்சு மணிக்குள்ள கீழ இறங்கணும்..

ம்ம்.. ஜெய் பாகுபலி... இப்ப பாரு என்னோட வேகத்த..

டேய் இங்க பாரு.. இந்த மாதிரி பூவயெல்லாம் நான் இதுக்கு முன்னாடி பாத்ததே இல்ல விஜய்.

எவ்ளோ மணமா இருக்குது பாரு..

ஏய்...கொஞ்சம் அமைதியா இரு..தேன் உறிஞ்சுற பட்டாம்பூச்சியெல்லாம் பறந்துற போகுது..

ஓகே என்று சொல்லிப் பெரு விரலை உயர்த்திக் காண்பித்தான்.

சரி வா கொஞ்சம் வேகமா நடப்போம் விஜய்....

ஓகே.

மச்சி என்ன.... ஒரே வெட்டவெளி மைதானம் மாதிரி இருக்கு..

இங்கயிருந்து மலையப் பாக்குற வியூவ் செம்மையா இருக்குல..

ஆமாம்.மச்சான்.. கொஞ்சம் இரு ரெண்டு மூனு வீடியோ எடுத்துகிறுவோம்.

இன்னும் எவ்ளோ தூரம் போகணுமோ தெரியலயே.. என்று சொல்லிக் கொண்டு சுற்றிப் பார்க்கையில் பாறையில் வல்பொலமுல்லவிற்கு ஒரு கிலோமீட்டர் என்று எழுதி இருந்ததைப் படித்தான் செல்வா.

இந்தா...இந்த ஒத்தையடிப் பாதையில போனா கிராமம் வந்துரும் போல.

மச்சான் அந்த மரத்துல பாரு மூக்கு நீளமா இருவாட்சிப் பறவை இருக்கு.

இந்த மலையப் பத்தி தேடும் போது நெட்ல பாத்தேன். இப்பத் தான் நேர்ல பாக்குறேன்.

சிறிது தூரம் பேசிக்கொண்டே அவர்கள் நடந்தனர்.

வீடு ஒன்னு தெரியுது பாரு.

அப்பாடா வல்பொலமுல்ல கிராமத்துக்கு வந்தாச்சா?. என்ன இந்த வீடு இப்படி இருக்கு?.

இந்தக் கிராமத்தோட முதல் வீடு இது தான் போல.

வீடு பூட்டியிருக்கு.. ஆளு யாரும் இல்ல... குச்சியக்கட்டி அதுக்கு இடையில கல்லெல்லாம் அடுக்கி களிமண்ண வைச்சு எப்படி கட்டியிருக்காங்கனு பாரு.

திறந்திருந்த சன்னல் வழியே எட்டிப்பார்த்த விஜய்... இங்க பாரு ஒரு பாட்டியம்மா போட்டோ இருக்கு.. கட்டிலும் இருக்கு.

ரெம்பா பழசா இருக்குல.. இங்க யாரும் இருக்குறது மாதிரி தெரியலயே.வா போலாம்

கிராமமுனு சொன்னாங்க.. வெறும் காடாத் தான் இருக்கு.

சரி...அப்படியே முன்னாடி நட

இங்கயும் ஒரு வீடு இருக்கு பாரு

ஊத்து தண்ணி மாதிரி எவ்ளோ குளு குளுனு இருக்குப் பாரு இந்தக் குழாயில தண்ணி..

ம்ம்ம்...

இருவரும் தாகம் தணித்துக் கொண்டனர்...ஆளு யாரும் இருக்காங்களானு பாப்போம்

ஐயா யாரும் இருக்கீங்களா...?

வீடும் சுத்தமா இருக்கு.. மலை நெல்லு வேற காய வச்சுருக்காங்க..இந்த வீட்ல ஆளு தங்குற மாதிரி தான் இருக்கு ஆனா யாரையும் காணுமே என்றான் விஜய்

வா இந்த சைடு போய்ப் பாப்போம்.

ஐயா யாராச்சும் இருக்கீங்களா? என்று சத்தமிட்டான் செல்வா..

என்ன ஆளுங்க சத்தம் மாதிரி கேக்குது. இங்க யாரும் அப்படி வர வாய்ப்பு இல்லையே...என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார் அந்தக் கிராமத்தில் வாழும் முதியவர் ஒருவர்.

விவசாயம் எல்லாம் பண்ணுறாங்களா இங்க....

டே விஜய் அங்க பாரு.ஒரு ஆளு மாடுகளோட நிக்குறாரு..வேகமா வா..

யாரோ வர்றாங்களே...?

ஐயா, நாங்க கொழும்புல இருந்து வர் றோம்...

ஓ அப்படியா.என்ன விஷயமா வந்தீங்க இந்த மலைக்குள்ள..

இங்க மலை மேல ஒரு கிராமம் இருக்கு அங்க ஒருத்தரு தான் வாழ்றார்னு கேள்விபட்டோம் அதுதான் தான் என்னனு தெரிஞ்சுகிலாமுனு வந்தோங்கய்யா..

ஓ அப்படியா.

இந்தக் கிராமம் பத்தி என்ன என்ன இருக்குனு சொல்லுங்கய்யா

இங்க நாலு குடும்பம் இதோ இந்த வீடு மாதிரி கட்டிக்கிட்டு இருந்தாங்க.. இப்ப அவங்க எல்லாம் எடன்வலை தேயிலை எஸ்டேட்ல வேலை செய்யுறாங்க.

சரிங்க ஐயா.உங்க கிராமம் தான் ஆசியாவிலயே சின்ன கிராமமா இருக்குமுனு நெனக்கிறேன் என்றான் விஜய்.

ஆசியாவா அப்படினா.. எந்தப் பிரதேசம் அது?

நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் வியப்பாய்ப் பார்த்துக் கொண்டனர்.

இந்த மலைங்காட்டுக்குள்ள யானையெல்லாம் இருக்குனு சொல்றாங்க உங்களுக்கு பயமா இல்லயா?

நான் அதுங்கள தொந்தரவு செய்யறது இல்ல. என்ன அதுங்களும் தொந்தரவு செய்யறது இல்ல.

இன்னும் சொல்லப் போனா இங்க தான் நான் பொறந்தது வளந்ததே

நம்ம தான் யானகள புரிஞ்சுக்கிறாம இருக்கோம் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அப்ப நீங்க மட்டும் தான் இந்த கிராமத்துல இருக்கீங்களா ஐயா?

“ஒரு நிமிஷம் இந்தா வந்துர்றேன் என்று சொல்லிவிட்டு மாடுகளை வயலுக்கு அருகில் இருந்த குளத்தில் நீர் அருந்த விட்டார்..

செல்வாவும் விஜய்யும் இதுவரை அவர்கள் வாழ்நாளில் பார்க்காத வண்ணங்களில் பட்டாம் பூச்சிகள் வயலில் பறந்து கொண்டிருந்தன.

குருவிகளின் சத்தத்தையும் காட்டு வண்டுகளின் சத்தத்தையும் சில நிமிடங்கள் ரசித்துக் கொண்டிருந்தனர்.

ஆங்.என்னவோ கேட்டீங்களே தம்பி..

இந்தக் காட்டுல மன்னிக்கவும் ஐயா.இந்தக் கிராமத்துல நீங்க மட்டும் தான் இருக்கீங்களா?

“இந்தப் பிரபஞ்சத்தில்

விழித்திருக்கிறேன்

விலகியிருக்கிறேன்

தனித்தில்லை

என்னுடன் எத்தனை உயிர்கள்...”

என்று இருகைகளை விரித்து கூறினார். அவருடைய பதில் அவர்கள் இருவரையும் இயற்கையுடன் மேலும் ஒன்றச் செய்தது.

## ஜமீல்

காலையில் மலர்ந்து
மாலையில் உதிர்வதற்குள்
எத்தனை ஆச்சர்யங்களை
நிகழ்த்தி விடுகின்றன பூக்கள்

காலம் முழுவதும் முகிழ்ந்தும்
யாருக்கும் பிரயோசனமின்றி
அர்த்தங்களற்று உதிர்ந்து போகும்
உனக்கு முன்னால்

இந்தப் பூக்கள்
எத்தனை முறை வேண்டுமானாலும்
பூத்து
எத்தனை முறை வேண்டுமானாலும்
உதிர்ந்து போகட்டும்

★


புத்தகங்களை சந்தித்து
வெகு நாட்களாகிவிட்டன


அவை என்னிடம்
பேசுவதற்கும் பகிர்வதற்குமென
பக்கம் பக்கமாக
சொற்களை அடுக்கி வைத்திருந்தது

வாழ்க்கையை வாசிக்க
அலைந்து திரிந்ததனால்
புத்தகங்களை சந்திப்பதற்கான
அவகாசங்கள் கிடைக்கவில்லை

முதலில் புத்தகங்களை சந்தித்திருந்தால்
இப்படி செத்து சுண்ணாம்பாகும்
நிலை ஏற்பட்டிருக்காது

வாழ்வின் சூட்சுமங்களை
நமக்கு போதிக்க மறந்ததில்லை
ஆதியிலிருந்து புத்தகங்கள்.





# காதலொன்று கண்டேன்

நௌஷாத் கான்.லி

டே ஆரிப் நான் சொன்னேன்லே இப்படி பைத்தியக்காரப் புண்ணாக்கு மாதிரி இருக்காதடா,தப்போ,ரைட்டோ மனசுல பட்டதை சொல்லிடணும்னு...

இப்ப பாரு காலேஜ் வாழ்க்கையும் முடிய போகுது,உன் காதல் வாழ்க்கையும் முடிய போகுது?

என்னடா சொல்லுற சேட்டு,எனக்கு ஒண்ணுமே புரியலை

உன்கிட்ட என்ன வெங்காயத்த சொல்லுறது அதான் இதயம் முரளி மாதிரி இருந்து,இருந்து உன் வாழ்க்கையை,காதலை,ஆசையை எல்லாத்தையும் தான் அஸ்தமனம் ஆக்கிட்டியே

என்னடா சொல்லுற,கொஞ்சம் புரியிற மாதிரி சொல்லு

பர்வீன் வீட்ல மாப்பிள்ளை பார்த்துட்டாங்கடா,இன்னும் ஒரு மாசத்துல எக்ஸாம் முடிஞ்சு அவளுக்கு கல்யாணம்.

இப்படியே மனசுக்குள்ளேயே பொத்தி,பொத்தி காதல்ல வச்சிருந்தா அவளுக்கு எப்படி உன் காதல் தெரியும்?

டே ஆரிப் அவ கல்யாணத்துக்கு அப்புறம் உன் பொக்கிஷமான ஒரு தலைக் காதலை உன் மனசுக்குள்ளேயே வச்சுக்கிட்டு வாழ்க்கை முழுதும் அழுது கிட்டே சாவுடா

சேட்டு அப்படி சொல்லவும் அவனையும் அறியாமல் கண்ணீர் விழிகளில் வழிந்தோடியது

அழுத கண்களோடு அவன் பேக்கை தூக்கி கொண்டு பர்வீனை நோக்கி சென்றான்.

பர்வீன் அந்த காலேஜ்ஜில் உள்ள தூங்கு மூஞ்சி மரத்தின் நிழலில் தனியாக உட்கார்ந்து படித்து கொண்டிருந்தாள்.

இங்க பாரு பர்வீன் என் பேரு ஆரிப் உன் கூட உன் கிளாஸ்ல தான் படிக்கிறேன் முன்ன,பின்னே இதற்கு முன்னாடி உன் கூட பேசுனது கிடையாது ஆனா உன்னை எனக்கு சின்ன வயசுல இருந்தே பிடிக்கும் நான் டவுன் ஹை ஸ்கூல்ல படிச்சப்ப நீ சரஸ்வதி பாடசாலையில படிச்ச.

ரெண்டு பேருக்கும் பொதுவா இருந்தது அந்த கும்பகோணத்து மடத்துதெரு பஸ் ஸ்டாண்ட் தான்.நீ படிச்ச டியூசன்,இங்கிலீஷ் ஸ்போக்கன் கிளாஸ் என்று உனக்காகவே தான் சேர்ந்தேன்.அப்ப அது காதல்ன்னு எனக்கு தெரியாது.என்னை பொறுத்தவரைக்கும் உன்னை டிஸ்டர்ப் பண்ணாம என் வாழ்க்கை முழுதும் பார்த்துக்கிட்டே இருக்கணும்.

கும்பகோணத்துல பிறந்த நான் அதுவும் எங்க ஊர்ல டசன் கணக்குல அம்புட்டு காலேஜ் இருந்தும் நீ திருப்பனந்தாள் குமரகுருபரர் காலேஜ்ல சேர்ந்த ஒரு காரணத்துக்காக நானும் சேர்ந்தேன்.உன் மேல என் உசுரையே வச்சு இருக்கேன் ஆனா இப்ப இருக்கிற என் சூழ்நிலையில உங்க வீட்ல வந்து உன்னை பொண்ணு கேட்கவோ,பரிசம் போடவோ எனக்கு தகுதி இல்லை ஏன்னா என் வாழ்க்கைல ஒரு நல்ல வேலைவாய்ப்பை தேடி என்னை நிலைநிறுத்திக்க இன்னும் மூணு வருஷம் தேவைப்படுது எனக்காக,என் காதலுக்காக நீ காத்திருப்பியா??

எப்படி லவ்வை சொல்லணும்னு கூட எனக்கு தெரியாது இப்ப கூட உனக்கு நிச்சயதார்த்தம் பண்ண போறாங்கன்னு என் நண்பன் சேட்டு சொன்ன ஒரே காரணத்துக்காக தான் பதறி அடிச்சு உன்கிட்ட என் காதலை சொல்ல வந்தேன்.

எங்க அம்மா சத்தியமா ஒண்ணே ஒண்ணு சொல்லுறேன் என் வாழ்க்கைல நீ வந்தா உன்னை வாழ்க்கை முழுதும் சந்தோசமா பார்த்திப்பேன் பர்வீன்

DO YOU LOVE ME?

(பர்வீன் சிறு புன்னகைக்கு பிறகு )

ஒரு ஆம்பளை பத்தடி தூரத்துல இருந்து பார்த்தாலும் ஒரு பொண்ணுக்கு தெரிஞ்சிடும் நீ இத்தனை வருஷமா பார்க்குற எனக்கு தெரியாம இருக்குமா என்ன?

உன்னை எனக்கு பிடிச்சதால தான் எனக்கு படிக்க பிடிக்கலைன்னாலும் மேற்படிப்புக்கு இப்பவே அப்ளிகேஷன் போட்டு இருக்கேன்,


எம்.பி.ஏ பண்ண போறேண்டா அதுக்குள்ள உன் படிப்பை பூர்த்தி செஞ்சிட்டு நல்ல வேலையில சேர பாரு அதுக்கப்புறம் உங்க வாப்பா,அம்மாவை கூட்டிக்கிட்டு வந்து முறைப்படி பொண்ணு கேளு

அப்ப உனக்கு நிச்சயதார்த்தம்,கல்யாணம்ன்னு சேட்டு சொன்னது

அவன் உன்கிட்ட டூப்பு விட்டிருப்பான் அவன் பொய் சொன்னதிலும் ஒரு நல்லது நடந்து இருக்கு இப்பவாச்சும் உன் மனசுல இருந்த காதலை சொன்னியே.

சரி,சரி நான் ஒகே சொல்லிட்டேன்னு அங்கே,இங்கேன்னு சுத்தாதே ஒழுங்கா மரியாதையா அரியர் வைக்காம பாஸ் பண்ணுற வழிய பாரு என்று ஆரிப்பை அதட்டி அனுப்பினாள் பர்வீன்.

போவதற்கு முன் அவள் முகத்தை ஒருமுறை திரும்பி பார்த்தான் அவள் விழிகளில் இவனுக்குள் பூத்த அதே காதலொன்றை கண்டான்!!



**வட்டக்கச்சி வினோத்**

# என்னைப்பற்றி

என்னைப்பற்றி நானே வாசிக்க மறுத்தால்
நான் சுவாசித்ததை ஏற்க தவிர்த்தால்
நான் யாருக்கு, எங்கு, எப்போது என
தெரியாது,அறியாது பிறந்தேன்
இயற்கை இதுவென உலகம் சொல்ல உணர்ந்தேன்

★

சாப்பிடு, சாப்பிடு என எனக்கு திணிக்கப்பட்ட
உணவும்
படி படி என என்மீது திணிக்கப்பட்ட கல்வியும்
குறைவுதான்

★

சுதந்திரம் அனுபவிக்க முடியா நூற்றாண்டின்
அடிமைக் குழந்தையாக
தந்திரம் நிறைந்த நரிகள் சூழ்ந்த குடிசையில்
எந்திரன் போலே ஓயாமல் சுழலும்
தடுக்கில் தவழும் மழையாக

★

நரிகளின் பற்கள் என் வாழ்க்கை
நாடியை கடித்து குதறியபோதும்
பரிகள் போல் என் நம்பிக்கை எழுந்து ஓடியது

★

என் காலத்தில் நிலவில் கால்பதித்த போதும்
என் கால்கள் வாசல் தாண்ட
அனுமதிக்கப்படவில்லை
இருந்தாலும் என் கற்பனை அண்டம் தாண்டிப்
பறந்தது

★

என் கண்முன்னே ஓர் பெரும் திரை
போடப்பட்டது
இதற்கு நீ ஆசைப்படாதேயென்று
என் பேராசைப் பார்வை திரையில் துளையிட்டு
பெருநெருப்பாக திரையெரித்தது
அதில் எனக்கான பெருங்கனவின்
வழிதெரிந்தது

நானும் தீண்டாமையின்
தீ காயங்களை இதயத்தில் சுமந்தவன்தான்
சாதியே இல்லாத போதும்
பொருளாதார பாகுபாட்டின் வரிசையில் என்னை
கடைசியில் துரத்தியது
என் வைராக்கியம் வாழும்வரை
என் முன்னே ஒருநாள் வரிசை இராது



சிறுகதை

# எங்க மாமன் பெயர் வச்சவன்

இரா. மதிராஜ்,

அந்தக் கீழத்தட்டப்பாறைக் கிராமத்தில் அவருடைய மானாவாரி இடத்தில் பருத்திப்போட்டு இருந்தார் பெரியவர்

" ஏலே அங்கு யாரோ வராங்க லே "

"......"

" குட்டியா லே அது "

" ஏலே எங்க மாமா பேரு வச்சவன் வந்திருக்கான் டோய் "

அப்ப எல்லாம் காட்டு விவசாயம்தான். பண்டமாற்று முறை தான்

"ஐயோ என் மாமா பேரு வச்ச உனக்கு என்கிட்ட கொடுக்குறதுக்கு ஒன்னும் இல்ல இப்ப நான் என்ன செய்வ? "

"சரி சரி மருமகனே நீங்க வீட்டுக்குப் போங்க "

"...."

"மாமா அப்படியே செத்த நேரத்தில காட்டுல இருந்து வீட்டுக்கு வந்துறேன் "

"சரிங்க மாமா"

"அடியே இங்க வாடி"

" இந்தா வரங்க "

"மருமகன் பிள்ளை வந்திருக்கான்

டியோ,திங்க ஏதாவது இருக்காடி? "

"என் தங்கச்சி மகன் என் மாமாப் பேரு வச்சவன் வந்து இருக்கான்டி"

"அவனுக்கு காபி போட்டு கொடுடி "

" திங்கறதுக்கு ஏதாவது? "

"பயிர் ஏதாவது? "

"ஏங்க ஒன்னும் இல்லையே இருந்தது ஆனா வந்து,

"...."

" என் தங்கச்சி காலையில வந்ததும் அவளுக்கு அவிச்சி கொடுத்துட்டேன்"

"சரி சரி இருக்கட்டும் போவுது "

"அங்கு அறை வீட்டுக்குள்ள ஒரு கொத்து பருத்தி கிடக்கும் பாரு அதை கெட்டியாப் பிடிச்சு எடுத்துட்டு வா லேய் "

"சரிங்க "

" ஐயா ராமசாமி

நீங்க எதுவும் நினைச்சுக்காதீங்க

மாமா வீட்ல காபி தான் இப்போ இருக்கு

"

"....."

"மாமா ஒரு கை பருத்தித் தாரேன்

அது அந்த செட்டியார் கடையில் கொடுத்து ஏதாவது வாங்கி சாப்பிட்டு வாயா "

ராமசாமி படுத்தியை பக்குவமாக பிடித்துச் செட்டியார் கடைக்குச் செல்கிறார்

"ஏய் நீ புதுக்கோட்டைக்காரன் தான் லே தளவாக் கோனார் மகன் தானே இங்கே எங்க லே வந்த?"

" மாமா வீட்டுக்கு வந்தேன் அண்ணாச்சி "

"சரி சரி என்னையா வேணும்? "

" இந்தப் பருத்தியை மாமா தந்து விட்டாவோவ '

"இந்த பருத்தியை வச்சிட்டு ஏதாவது பயறு இருந்தா தாங்கய்யா"

பருத்தி செட்டியாரிடமும்

அவிச்சத் தட்ட்டாம் பயிறு ராமசாமிக் கைக்கு இடமும் கைமாறுகிறது,

இன்னொரு நாள்,

புதுக்கோட்டை ஊர்ல பத்து, பதினைச்சுத் தோட்டம் தான் இருக்கும் எல்லாம் கிணத்துப் பாசனம் தான்,

பருவத்துக்கு தான் பயிர் போடுவாங்க

அதுல முக்கியமான ஒருத் தோட்டம்

நம்ம ஜெயராஜ் நாடார் தோட்டம்,

ஜெயராஜ் நாடார் நாலஞ்சு வருஷமா கொஞ்சம் படுக்கையில தான் இருக்கிறாரு,

ஆனா அன்னத்தாய் பாட்டி வந்து அவ்ளோ நல்லா வேலை செய்யும்

இன்னைக்கு வேற அவியத் தோட்டத்துல

கிழங்கு எடுக்குறாங்க, அதாங்க சீனிக் கிழங்குன்னு சொல்லவாங்க, வெள்ளை வௌர்ன்னு இருக்கும் சக்கரைவள்ளிக் கிழங்கு தாங்க, கருப்பட்டிப் போட்டு அவிச்சித் தின்னா அவ்வளவு நல்ல இருக்கும்,

கிழங்கு எடுத்து சந்தைக்கு போறதுக்கு முன்னால அவங்களுக்கு ஒரு

இந்த, சித்திரை,தை மாசம் அறுவடைல

நல்ல கிழங்கு முதல எடுத்துட்டு

அதை யாரெல்லாம் அறுப்புக்கு வேடிக்கைப் பார்க்க வராங்களோ அவங்களுக்கெல்லாம், காசு வாங்காம இலவசமா

தலையில கட்டி கொடுத்துடுவாங்க,

“ ஐயா கோனார் மவனே இங்க வாலே “

ஜெயராஜ் நாடார் பொண்பாட்டி அன்னத் தாய்ப் பாட்டி மக்கமார் இடத்துல பேசுது

“ஏல இரத்தினசாமி, பொன்னுச்சாமி

ராமசாமி வந்திருக்கிறான்”

“இதுல நல்ல கிழங்காப் பார்த்து, வெட்டு விழாதக் கிழங்கைப் பார்த்து எடுத்து நல்ல அரிசிச் சாக்குலக் கட்டி பக்குவமா கொடுத்து விடுய்யா “

“ சரிங்கம்மா”

சீனிக் கிழங்குனு சொல்லுவாங்க

சித்திரை மாசம் தை மாசம் அறுவடை நடக்கும்

அவ்வளவு கிழங்கு எப்படி வளந்துசுச்சுன்னு வெளியே தெரியாது

ஒரு கிழங்கு ஒன்னு, கால், அரைக் கூட கிலோ எடை வரும்,

சணல் அரிசி சாக்ல கிழங்கைக் கட்டி

வச்சு முடிச்சு போட்டு

சிறுவன் ராமசாமி தலையில் கட்டி வைத்துதாங்க இரத்தின சாமியும், வெள்ளைச் சாமியும்,,

“ஐயா பாத்து மெல்ல நடந்து போயா”

இப்படி ராமசாமிக்கு மட்டும் இல்ல

வேடிக்கை பார்க்க வந்த பத்து, இருபது பேருக்கும் வெட்டிக் கொடுத்து முடித்த பிறகுதான்,

அடுத்து வந்து கிழங்கை சாக்ல கட்டி தூத்துக்குடி, ஏரல் சந்தைக்கு அனுப்புவாங்க,

“காந்திமதி ஆச்சி விவசாயம்தான்”

மாடு,காடு எல்லாம் பாத்துட்டு இருக்குது, மாட்டுக்கு பாஞ்சாலின்னுப் பேர் வச்சிருந்தா,

பக்கத்துல ஒரு கஷ்டப்பட்ட அம்மா ஒன்னு இருக்குது

அந்த முனியம்மாவும் காந்திமதிக்குச் சொக்கார முறைதான்,

நல்ல காட்டு வேலை செய்யும்

காந்திமதியும் முனியம்மாவும் ஒருத்தருக்கு ஒருத்தரு ஒத்தாசையா இருந்தாங்க,

தெனமும் காபிக் குடிக்கும் போது

முனியம்மாவேவாவும்,காந்திமதியும் சேர்ந்து தான் காபி குடிப்பாங்க,

அப்பல்லாம் அடுப்பு வீட்டுக்கு வெளியே தான் இருக்கும்

முனியம்மாவே காந்திமதி வீட்டிலேயேத் தான் தினமும் சோறுப் பொங்கி தான் ஒத்தப் பையனுக்கு எடுத்துட்டு போகும்

காபி குடிக்கிற இடத்துல சாயங்காலம்

வறுத்த கானப்பயிறு அதாங்க கொள்ளு உண்டு,

ராமசாமி பெரியவனா ஆனப் பின்பு சீக்கிரமாப் படிச்சு முடிச்சு ஒரு அரசாங்க வேலைக்கு போயிட்டான்

அப்போ ஒரு நாள்

ரத்தினசாமி ராமசாமியைத் தேடி வாராரு

“ நமக்கு ஒரு உதவி செய்யணும் அண்ணன் “

“என்னலே தம்பிச் சொல்லுல”

“அரசாங்கத்தில் ஒரு வேலைக்கு எழுதி போட்டு இருக்ககேன்”

“....”

“வேலை போட்டுக் கொடுக்க

பெரிய அதிகாரிட்ட நீ தானே எனக்காக எப்படியாவது பேசணும்”

அரசாங்கத்தில் உயர் பதவியில் இருக்கிற அதை தேவர் போய் பார்த்து

“வணக்கம் ஐயா”

"தம்பி தளவா மகன் தானே நீ?

"ஆமாம் அண்ணாச்சி "

"சொல்லுய்யா "

"வேலை எல்லாம் எப்படி போகுது? "

"நல்லப் போகுது ஐயா "

" அண்ணாச்சி உங்கள வச்சு நமக்கு ஒரு உதவி வேணுங்க அண்ணாச்சி "

"என்னப்பா சொல்லுப்பா உனக்குச் செய்யாம யாருக்குப்பா செய்யப் போறேன்? "

"எங்க சித்தப்பா மகன் ஒருத்தனுக்கு வேலைப் போட்டுக் கொடுக்கணும் ஐயா"

"சரி சரி பார்த்து கண்டிப்பாக

பாரம் எல்லாம் வந்து என்கிட்ட குடுக்க சொல்லு "

வேலைக்கான நேர்முக தேர்வு நடந்துட்டு இருக்கு

அண்ணாச்சி ராமசாமி வர சொல்றாரு

" என்னப்பா உன்ன நல்ல ஆளுன்னு நினைச்சா நீ என்னப்பா இப்படி பொய் சொல்லி இருக்க "

"ஐயா என்னன்னு சொல்லுங்க ஒன்னும் புரியலை அண்ணாச்சி "

"ரத்தினசாமி உனக்கு சித்தப்பா மவன்னுச் சொல்ற?"

"அவன் டிசி ல அங்க அப்பாப் பேரு ஜெயராஜ் நாடார் இருக்கு? "

"என்னலே சொல்ற நீ "

நீங்க உங்க அப்பா வந்து அங்க கோவம் காட்டுலயிருந்து ஆடு யாவாரம் தான்ப்பா செய்றாங்க,

".... "

உங்க அம்மா உன் தங்கச்சி உங்க சொக்காருங்க எல்லாம் ஆடு தானப்பா மேச்சிட்டு இருக்கீங்க?

"ஆமா அண்ணாச்சி "

" நீ கோங்கமாரு தானப்பா? "

"....."

"அந்த பையன் நாடாக்குமாருப் பையன் தானேப்பா? "

பின்ன எதுக்குத் தம்பி சித்தப்பா, தம்பி,அப்படியெல்லாம் சொன்ன?

"...."

"உண்மைய சொல்லலாம் இல்லப்பா? "

"ஐயா அது வந்து"

"தம்பி மனுசனுக்கு நாக்கு தான் ரொம்ப முக்கியம் "

"ஐயா நீங்க சொல்றது உண்மையா இருந்தாலும்,

நான் சொன்னது ஒன்னும் பொய் கிடையாது"

"......"

"ரத்னசாமி வேற யாரும் இல்ல, எனக்கச் சித்தப்பா மவன் தான் "

"அவங்க அப்பா வந்து எங்க அப்பாவ அண்ணன்னு தான் கூப்பிடுவாங்க

அவங்க அம்மாவை நான் வந்து

சித்தின்னு தான் கூப்பிடுவேன்"

"நீங்க வேணா ஊருக்குள்ள கேட்டு பாருங்க"

அது பெரிய ஒரு தேவர் மேலேயும், கீழேயும் முழிக்கிறார்

அப்போ உறவுக்கு ஜாதி கிடையாது போல நினைச்சுட்டு

மத்தியானம் நாலு மணி இருக்கும் ஆபிஸை பூட்டுற நேரம்

அந்த பச்சை நிற சுழல் தொலைபேசியில் அழைப்புமணி ஓங்கி ஒலிக்கிறது

அந்த தொலைபேசி முனையை எடுக்கவில்லை தேவரய்யா


அண்ணன், தம்பி உறவுக்கு முன்னால ஜாதி ஒன்னும் பெரிதல்ல என்று உணர்ந்த தேவர் ரத்தினசாமிக்கு உடனே வேலையில் கையெழுத்து போட்டு

"சரியா போய்ட்டு வா என்று சொல்லி சொல்கிறார்"

பெரிய கும்பிடுப் போட்டு நன்றி சொல்லுகிறார்கள் ரெண்டு சாமிகளும்,

சந்தோசமா ரத்தினசாமியும், ராமசாமியும்

ஒன்றிய அலுவலகத்தில் இருந்து வெளியே வராங்க,




# இன்று புதிதாய் பிறந்தேன்...

தி.வள்ளி, திருநெல்வேலி

*எல்லோரும் தூங்கும்போது.. என்னுடைய இரவு மட்டும் ஏன் சீக்கிரம் விடிந்துவிட்டது?" மெல்ல எழுந்து ஆறுமுகம்பிள்ளை ஹாலுக்கு வந்தார். அறையின் மெல்லிய வெளிச்சத்தில் விசாலத்தின் படம் கண்ணில் பட்டது. மனம் கலங்கியது. மகனும், மருமகளும் என்னதான் பாசமாக இருந்தாலும், தனிமை உணர்வை அவரால் தவிர்க்க முடியவில்லை. 50 ஆண்டுகளாக அவருடன் வாழ்க்கையை பகிர்ந்துகொண்ட வளை அவ்வளவு எளிதில் மறக்க முடியுமா?*

தாமிரபரணி ஆற்றங்கரையில்,அமைதியான சூழலில், அமைந்த அரண்மனை போன்றது அவரது பூர்வீக வீடு. "வைப்பது சட்டம்... எடுப்பது முடிவு".. என்று வாழ்ந்தவர். விசாலம் அவரை திருமணம் செய்து கொண்டு வந்த பிறகு,

அவளுக்கு சகலமும் அந்த வீடுதான்.வேலை ஆட்கள் பலர் இருந்தாலும், கணவனின் வேலைகளை தானே பார்த்து பார்த்து செய்வாள்.காலை 4 மணிக்கு எழுபவள் மாமியார் மனம் கோணாமல் இரவுவரை உழைப்பாள்.

காலை எழுந்ததும்,ஒற்றை அடுப்பில்.. கொல்லையில் செப்பு பானையில், நல்ல தண்ணீர் ஊற்றி அடுப்பை பற்ற வைப்பாள், அது சுடுவதற்குள், 4 வாளி பச்சை தண்ணீரை தலைக்கு விட்டு குளித்து விட்டு... சேலை மாற்றி... ரெடியாக வந்து விடுவாள். தினமும் வீட்டிலேயே தயாரிக்கும் காபி பொடியில் திக்காக டிக்காஷன் போட்டு, ஆறுமுகம் பிள்ளை எழுந்ததும், கால்படி பிடிக்கும் வெள்ளித் தம்ளரில் மணக்க மணக்க முதல் காப்பியை கொடுப்பாள் விசாலம். அவள் தரும் காப்பியில் மயங்கி ஆறுமுகம் பிள்ளை" காப்பி போட்ட கைக்கு தங்க காப்பு போடலாமடி" என்று அம்மாவுக்கு கேட்காத குரலில் முணுமுணுப்பார்.

அவருக்குப் பிடித்த சமையலை சுடச்சுட தயார் செய்வது விசாலத்தின் வேலையென்றாலும்... அவருக்கு பரிமாறும் உரிமையை மட்டும் விசாலத்தின் மாமியார் மருமகளுக்கு தர என்றுமே விரும்பியதில்லை. மகன் பொண்டாட்டி கவனிப்பில் அவள் பக்கம் சாய்ந்து விடுவானோ என்ற பயமாக கூட இருக்கலாம்.

தினமும் பத்து பேராவது அவரைப் பார்க்க வருவார்கள். யாருக்கு எந்த வேலையானாலும் முடித்து கொடுத்து விடுவார். நெல்லையில் அவருக்கு தெரியாத பெரிய புள்ளிகளே கிடையாது. பி.ஏ. படித்திருந்ததால் வேலை எளிதாக கிடைத்தாலும்.... அவர் அம்மா," இருக்கிற காடு கரையை பாரு ராசா... நீ எவன் கிட்டயும் கைகட்டி நிற்க வேண்டாம்..."என்று தடுத்து விட்டாள்.

விசாலிக்கு ஆண் குழந்தை பிறந்தபோது தாயும், மகனும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மகனுக்கு தந்தை குமாரசாமியின் நினைவாய் 'குமரன்' என்று பெயரிட்டார். குமரனின் பத்து வயதில், நான்கு நாள் காய்ச்சலில் படுத்த பாட்டி ஒரேடியாக போய் சேர்ந்து விட்டாள்.

குமரன் நன்றாக படிக்க உள்ளூரில் பள்ளிப்படிப்பு முடிந்ததும் சென்னையில் அவன் விரும்பியபடி சிவில் எஞ்சினியரிங் படிக்க வைத்தார். படிப்பு முடிந்ததும், வேலை கிடைத்தது. தன் ஒன்றுவிட்ட தங்கை பெண் காஞ்சனாவை நிச்சயம் செய்தார். திருமணத்தை தடபுடலாக நடத்தியவர்.குடியிருக்க சென்னை திருவான்மியூரில் ஒரு வீடு வாங்கிக் கொடுத்தார்.

குமரனுக்கு ஆண் ஒன்றும், பெண் ஒன்றுமாக இரு குழந்தைகள் பிறந்தனர். விசாலம் மகன் நெல்லைக்கு குடும்பத்தோடு வரும்போதெல்லாம் தினமும் விதம் விதமாக சமையல் செய்து தடபுடல் படுத்துவது வழக்கம். இதோ பிள்ளைகள் வளர்ந்து, கல்லூரி போகப் போகிறார்கள்.

ஒருநாள் விசாலம் லேசாக நெஞ்சு வலிக்கிறது என்று சொன்னவள் மருத்துவமனை போவதற்கு முன்னரே உயிரை விட்டாள்.அந்த அதிர்ச்சி பெரியவருக்கு தாங்க முடியாததாக இருந்தது. ஒருநாள் கூட தலைவலி என்று படுக்காதவள், ஒரு நொடியில் தன்னை விட்டு போய்விட்டாள் என்பதை அவரால் நம்ப கூட முடியவில்லை.

விசாலம் இல்லாத வீட்டில் அவரால் தனியாக இருக்க முடியும் என்று தோன்றவில்லை.எனவே தன் மகன் அழைத்தவுடன் அவனுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தார்...தன் வீட்டில் ஏகபோகமாக வாழ்ந்தவர்... நகரத்து பரபரப்பான வாழ்க்கை அதிக மனச்சோர்வை கொடுத்தது. ஊரில் இருந்த அமைதியும்,நிம்மதியும், சென்னையில் எதிர்பார்க்க முடியாது.அவர் மனம் நகரத்து வாழ்க்கையில் ஒட்ட முடியாமல் தவித்தது.

காலையில் வீடு அதகளமாக இருக்கும்.குமரனும் பிள்ளைகளும் கிளம்பும் வரை பரபரப்பாக இருக்கும் வீடு பிறகு அமைதியாகி விடும்.

காஞ்சனாவுக்கும் வீட்டு வேலைகள் அதிகம் இருக்கும். அதை முடித்துவிட்டு வெளியே சற்று போய்விட்டு வருவாள். ஊரில் எல்லா வேலைகளையும் செய்ய ஆட்கள் உண்டு. இன்று மருமகள் அந்த வேலைகளை செய்வதை பார்க்கும்போது மனசு உறுத்தலாக இருக்கும். ஆனால் எந்த வேலையும் பார்த்து பழக்கம் இல்லாததால்.... பேசாமல் இருந்து விடுவார்...மொத்தத்தில் மனைவியோடு வாழ்க்கையின் அர்த்தமும் போய்விட்டதாக தோன்றியது.

அடுத்த வாரத்தில் பேரன் ஜீவனின் பிறந்தநாள் வர, வீடு பரபரப்பானது.கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடிய பின் குமரன் அப்பாவிடம்," அப்பா நான் பிள்ளைகள் பிறந்த நாளன்று அருகில் இருக்கும் அனாதை ஆசிரம குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவது வழக்கம். இன்னைக்கு மதிய உணவு நமக்கு குழந்தைகளோடு தான். நீங்களும் வாருங்கள்" என்றான்.

ஆசிரமத்திற்கு போன ஆறுமுகம் திகைத்துப் போனார்... சென்னையில் இப்படி ஒரு இடமா... எழில் நிறைந்த, அமைதியான அந்த சூழல்,மனதில் இனம் புரியாத ஒரு நிறைவை உண்டாக்கியது.ஆசிரமத்து குழந்தைகள் குமரனையும், காஞ்சனாவையும் பார்த்ததும் ஓடி வந்து அன்புடன் சூழ்ந்து கொள்ள... குமரனும், காஞ்சனாவும் அவர்களை ஆரத்தழுவிக் கொண்டனர்.

பெரியவருக்கு அதைப் பார்த்து மனம் வியப்பில் ஆழ்ந்தது. எந்த உறவுகளும் இல்லாத அந்த பிஞ்சு குழந்தைகளை பார்த்து மனம் சலனப்பட்டாலும்,

கள்ளம் கபடம் இல்லாத அந்த குழந்தைகளின் இயல்பு அவருடைய மனதிற்கு எதையோ உணர்த்தியது.வாழ்ந்து முடித்த வாழ்க்கையை எண்ணி நான் வருந்துகிறேன். இந்த குழந்தைகள் நிகழ்கால வாழ்க்கையில் எவ்வளவு குதுகலமாய் இருக்கின்றனர்.இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் பற்றி கவலைப்படாதனாலேயே அவர்கள் நிம்மதியாக இருக்கிறார்கள்..பெரியவருக்கு ஏதோ புரிந்தது போல இருந்தது.

"சார் வாங்க!" என்று குமரனை வரவேற்ற நிர்வாகிக்கு குமரன் தன் தந்தையை அறிமுகப்படுத்தினான். ஆசிரம நிர்வாகி," ஐயா வணக்கம் உங்க மகன மாதிரி ஒருத்தரை பார்க்க முடியாது. உங்க மகனும், மருமகளும் அவங்க வீட்ல விசேஷம்ன்னா, இந்த குழந்தைங்க கூட தான் கொண்டாடுவாங்க, பணம் கொடுத்து உதவி செய்றதுக்கு ஆசிரமத்துக்கு நிறைய பேர் இருக்காங்க. ஆனா அந்த குழந்தைகளோட உணர்வுப்பூர்வமாக பழகறதுக்கு கொஞ்ச பேர்தான்...

உங்க மகனையும், மருமகளையும் இந்த குழந்தைகள் 'அப்பா அம்மா' ன்னு தான் கூப்பிடுவாங்க. விடுமுறை நாட்களில் சில மணி நேரமாவது, இங்கே வந்து இந்த குழந்தைகளுடன் கூட விளையாடுவாங்க. கதை சொல்லுவாங்க.. பாட்டு சொல்லிக் கொடுப்பாங்க. இந்த குழந்தைகளும் அவர்களைப் பார்த்தா குஷியாயிடுவாங்க. உங்க மருமகள் பகல்ல வேலையை முடித்ததும், இங்க வந்து இந்த குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பாங்க. இப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்ற நீங்கள் உண்மையிலேயே கொடுத்து வச்சவங்க தான்" என்றார்.

பெரியவர் மனதில் ஒரு தெளிவு பிறந்தது. இத்தனை நாளாய் இருந்த மனசுல இருந்த வெறுமை நீங்கியது. அவர் ஆசிரமத்தில் நிர்வாகியை பார்த்து," ஒரு வேண்டுகோள் இந்த குழந்தைங்க இந்த புதிய தாத்தாவை ஏத்துக்குவாங்களா? நான் தினமும் இங்கு என் மருமகள் கூட வரலாமா? இந்த குழந்தைகளுக்கு கதை சொல்லலாமா? இவங்களோட என் நேரத்தை கழிக்கலாமா.."

ஆர்வமாக பேசிய பெரியவரைப் பார்த்து நிர்வாகி,"இந்த குழந்தைகளுக்கு ஒரு புது தாத்தா கிடைச்சிருக்காரு.. அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம் தருகிற விஷயம் உறவுகள்தான்"

தன் வாழ்வின் மிச்ச நாட்களை அர்த்தமுள்ளதாக வாழ வேண்டும் என நினைத்தார். இவ்வளவு பரபரப்பான வாழ்க்கை சூழ்நிலையிலும் குமரன் எவ்வளவு அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்கிறான்... வாழ்வின் அர்த்தமான மறுபக்கத்தை தனக்கு காட்டிய தன் மகனின் கையை பெருமையோடு பற்றிக் கொண்டார்.அன்று புதிதாக பிறந்த பெரியவர்....

ஏ.எம். கஸ்புள்ளா

# முற்றத்து குருவியும் நானும்

குருவியொன்று
எனது வீட்டு முற்றத்தில்
வந்து
விளையாடித்திரிகிறது

இன்னொன்று
அதனுடன்
சேரந்து கொண்டதும்
அதற்கு
இரட்டிப்பு மகிழ்ச்சி

மண்ணில் உணவுகளை
இறைவன் மறைத்து
வைத்திருப்பது
இவைகளுக்காகத்தான்
என நான் நினைக்கிறேன்

அவைகள் கொத்தி
கொறித்து
உண்பதை கண்டு
கொள்ளவே முடியவில்லை

பாலைவன மணலில்
ஒட்டகைகள் இப்படி
உண்பதை
நான் முத்தமிடுவதாக
நினைத்துக் கொண்ட
காலமது
கடந்தே போனாலும்

சிலவை
சிலநேரம் இனிமையானதுதான்.



# பெண்மை

## ரகுநாத் வ

வண்டி மானாமதுரை போகுதா? எனச் சத்தமாக கேட்டவாறே திருப்புவனத்தில் நின்றுகொண்டிருந்த பேருந்தில் ஏறியமர்கிறாள் தோராயமாக அறுபது வயதில் இருக்கும் அந்தப் பாட்டி.

ஆம்பளய்ங்க எல்லாம் ஆளுக்கொரு சீட்ல உக்காந்திருக்காங்க 'கொஞ்சம் மாறி ஒக்காந்தத்தான் என்ன' என்றவாறே, நான் என் பேரன் பக்கத்துல உக்காருரேன் என்றவாறே ஒரு இளைஞனின் அருகிலமர்கிறாள்.

'ஒழச்சு சம்பாதிக்கணும் தம்பி, எங்க போனாலும் செயிக்கணும், அவன் என்ன எனக்கு சோத்த போடுறது, நான் போடுறேன் அவனுக்கு சோத்த, அவனை நம்மி நானில்ல, நாமே ஏன் அவன்கிட்ட போகணும், ஒழச்சு வாழ தெம்பிருக்கு என்ன தம்பி சொல்ற?' என பக்கத்திலமர்ந்த இளைஞனிடம் கேட்க அவர் பதிலேதும்

சொல்லாமல் தலையசைத்து தலைகால் எதுவும் புரியாமல் அவள் கூறியதை ஆமோதிப்பதாய் இருக்கிறார்.

பேராண்டி எந்த ஊரு எனக்கேட்ட பாட்டி அவர் பதில்கூறும் முன்பே, தம்பி, ‘என்ன பெரிய ஆம்பள ஆம்பளனு’ சொல்றய்ங்க ஊருக்குள்ளே நானும் ஆம்பளதான் அப்படித்தான் திரிஞ்சேன் திரிவேன், இவனுக்கு என்ன உரிம இருக்கு என்ன என்னய அடிக்க அதான் போடானு கௌம்பி வந்துட்டேன், ஆம்பளயாம் ஆம்பள, ஒடம்புல தெம்புதான் தம்பி மொக்கியம், நானென்ன ஊர்மேஞ்சுட்டா திரிஞ்சேன் ஒழச்சேன், அவனுக்குதானே ஒழச்சுப்போட்டேன் ‘திமிரு தம்பி எல்லாம் திமிரு ஆம்பளங்கிற திமிரு’

அவர் எதுவும் புரிந்தவரும் புரியாதவருமாய் அவர் தலையசைத்துக்கொண்டிருக்க

“பெத்தவய்ங்கதான் தம்பி முக்கியம் பெத்தவய்ங்கள பாத்துக்கப்பா”

‘அம்மா அப்பாதான் முக்கியம்’ அவிங்கதான் மொதல்ல என்றவள் தனது பிள்ளைகளைப் பற்றி கடைசிவரை எதுவும் கூறவில்லை

பாட்டி ஒங்க பசங்க என்றவர் கேட்டதும் லேசாக நிமிர்ந்து பார்த்து அல்லாம் பசங்கதான் தம்பி ‘அல்லாம் நல்லாயிருக்கனும் நல்லாயிருக்கனும்’ என கைகளை மேலுயர்த்தி ஆசிர்வாதம் செய்வதாயிருக்க, கண்களிலிருந்து சில துளிகள் அவளையறியாமல் வெளிவிழுகிறது...

தம்பி மானாமதுதை வந்தா சொல்லுப்பா அங்கருந்து கமோதி போலாம்ல ராஜா என்றதும் இவர் ஆமா பாட்டியென என சன்னமான குரலில் பதிலளிக்கிறார்.

சிறிது மௌனம் அவளுக்கு அது எந்தெந்த ஞாபகங்களை கொடுத்ததோ கேவி கேவி அழுகத் தொடங்குகிறார்...

‘விடமாட்டேன் தம்பி ஒழச்சு வாழுவேன் தம்பி ஒடம்புல தெம்பிருக்கு’ என்றவாறே சிலுப்பிக்கொண்டு நிமிர்ந்து அமர்கிறாள்.

பாட்டி மானாமதுரை வந்துடுச்சு என்றதும் வந்துடுச்சா என்றவள் அவரின் தலையில் கைவைப்பதாய் போய்ட்டு வாரேன் ராசா, பாத்துப்போ பெத்தவய்ங்கள பாத்துக்க அவிங்கதான் அல்லாம் என்றவாறு கீழிறங்குகிறார்.

அன்று மார்ச் எட்டு, எழுந்து அவளிடம் கைகுலுக்கி மகளிர் தின வாழ்த்து கூற வேண்டுமென தோன்றியது. பேருந்து கிளம்புகிறது சாளரம் வழியே அவளை பார்க்க என்னைப் பார்த்து புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டுச் செல்கிறது அந்தப் பெண்மை!

கா.ந.கல்யாணசுந்தரம்

# தன்முனைக் கவிதைகள்

தெருவெங்கும் ஓடிய வெள்ளம்
வற்றிய தடயங்கள்
மழைநீரின் வாசத்தோடு
ஒதுங்கிய காகிதக் கப்பல்கள்

★

எப்போதுமே எனது
கைப்பிடித்து நடக்கிறாய்
உனக்கென்ன லாபம்
தென்றல் காற்றே?

★

தாத்தாவின் கைத்தடியை
பாதுகாத்து வருகிறேன்
அவரது நினைவுகளின்
ஊன்றுகோல் எங்களிடம்

★


கிராமத்து தெருக்களிடம்
கேட்டுப் பார்த்தேன்
தயக்கமின்றி கொடுத்தன
மனிதநேய உறவுகளை

★

காற்றில் தவழ்ந்து வருகிறது
ஆலய மணியோசை
அதற்குமுன் வந்தமர்கிறது
கையில் பட்டாம்பூச்சி

★

கிழக்கு மேற்கு சாலைகளுடன்
நட்புறவோடு கைகோத்தன
நாளும் கொண்டாட்டம்தான்
கிராமத்து குறுக்குத் தெருக்கள்



# சுடர் நிலா கவிதைகள்

## நவீன மணப்பெண்

அலங்காரப்பந்தல்..
அள்ளிச் சூடிக்கொண்ட மல்லிகைச்சரங்கள்
அவளின் அரைவாசிக் கூந்தலை மென்று
விழுங்கியிருந்தன..
ஒலித்துக்கொண்டிருந்த நாதஸ்வரச்சத்தம்
ஓலமிடுவதாய் அவளின் காதுகளில்
இரைந்துகொண்டிருந்தது

புகைப்படப்பிடிப்புக்கு
மத்தியில் பெண்பார்த்த நொடிகள்
ஓமகுண்டத்தில் கமழும் புகையில்
சட்டென்று தோன்றி மறைந்தன..

“மாப்பிள்ளைக்கு..”
என்றெழுந்த சீதனப்
பேச்சுக்களின் இடைநடுவே
“நானும் இன்ஜினியர் தான் “
என்றெத்தனித்த நாவும்
மாமாவின் கடைக்கண் அசைவில் கட்டுண்டு
கொண்டது…

இன்று…
ஒன்றரை மணித்தியால ஒப்பனையின் முடிவில்
விலைக்கழிக்கப்பட்ட விற்பனைப் பொம்மையாய்
நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாள்
நவீன மணப்பெண்
நவயுக மணமேடையில்…

★

## கிராமத்து வீதி

பெரு வாகனங்கள் தின்றெஞ்சிய
சிறு வீதிகளை மென்காற்றும் கொஞ்சம்
கொஞ்சமாய் கொறித்துகொண்டிருக்கும்..

மிதிக்கட்டைகளை அழுத்தி
எதிர்க்காற்றை எதிர்த்து நகரும்
துவிச்சக்கர வண்டியின் சிறுஅசைவைக்
கேலி செய்யும்
பெருவீதியெங்கும்
பரந்திருக்கும் கிரவற் கற்கள்…

வீதியோடு கைகோர்த்து நெழியும்
வாய்க்கால்களின் ஓரமெல்லாம்
கானாங்கோழிகளின்
காதற் கதைகள்
பக்கம் பக்கமாய் எழுதப்பட்டிருக்கும்

சேற்றைப் பூசிக்குளித்து
வெளியேறும்
எருமை மாடுகளின் அணிவகுப்பால்
உழுது விடப்பட்ட விதை நிலமாய்
மாறிப்போயிருக்கும் கிராமத்து வீதிகள்..

சே கார்கவி கார்த்திக், நாகப்பட்டினம்

# மனித தும்பிக்கைக்கும் இரு துளை உணர்வுகளே...

எப்போதாவது சுவாசிக்கும் பொழுது
மலையளவு கடினங்கள்
துளைகளையடைத்து
நினைவுத்துவாரங்களை
மூர்ச்சையடையச் செய்கின்றன

ஆனாலும் சிறிது
பருத்தும் சிறுத்தும்
சிறு சிறு திணறலுக்கு இடையில்
விடாமல் கடின உருண்டையை
பற்றியே சுவாசிக்கத் தொடர்கிறது
தும்பிக்கையறிவு

சிறு கால்களையும்
விசக் கொடுக்குகளையும்
கொண்ட மனிதனை வேற்றுருவில்
கண்டது போல்
எறும்பானது கடினங்களை
கடித்துண்ண ஆரம்பித்தது

கருத்துப் போன சுவாச வண்ணங்களை
தும்பிக்கையுடன் சேர்த்துண்ணத் தொடங்கிய
எறும்பெண்ணங்களுக்கு
கொடுக்கு சற்று பெருதுதான்

நீரறுந்தயியலவில்லை
திணறிப்புடைத்த வயற்றிலேறி
பெருமூச்சு
மேலும் கீழும் ஆட்டமிட
கடினம் குறையத்தொடங்கியது
தும்பியக்கையுடன்
தந்தைத்தை சேர்த்துண்ணும்
மனிதரின் கண்முன்

புடைத்த வயிறு சுருங்கச் சுருங்க
கிடைத்த சுவாசமெல்லாம்
உயிரெனப் பருகிய
மனித எறும்புகளுக்கு
அள்ளி வீசியது மூச்சறைகளின்
கொஞ்ச நஞ்ச நம்பிக்கைதனை

இனி கிடைக்கப் போவதில்லை
கடின சுவாசங்களை திணித்து
தந்தம் திண்ற மனிதர்களின்
உண்மைத் தனங்கள்
ஆழ் துளைவரை கிழித்து
வழித்து ஈர்தெரிந்த தந்தங்கள்


யானையின் அறியாமையில்
மறுத்துப் போய்
காட்டினை மறந்துப் போய்
நிழலாய் வலம்வரும்
யானையின் தும்பிக்கைக்கு
நம்பிக்கையென்பது
துளையடைத்துப் போன மனித தும்பிக்கையின்
இரு உணர்வுத்துளைப் போலத்தான்....

# எழுத்தாளர் தி.ஜானகிராமனின் ‘உதயசூரியன்’(1966)

பிரேமா இரவிச்சந்திரன், சென்னை

வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள், அறிஞர்கள், பயணிகள், போன்றோர் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று அந்த நாட்டினைக் குறித்த நிலையினை பதிய வைத்திருக்கும் பயணக் கட்டுரைகளானது, அந்த நாடுகளின் வளர்ச்சிக்கும் தோல்விக்கும் காரணமாக என்னவெல்லாம் இருந்திருக்கலாம் என்பதைக் கண்டறியும் காரணியாகவும் அமைந்துவிடுகிறது. பிற நாடுகளின் பிற்போக்குத்தனத்தை களைத்தெறிவதற்கு எதனை கைவிடலாம் என்பதையெல்லாம் அலசிப் பார்க்க, இவ்வாறான பயணக் கட்டுரைகள் பயன்படுகிறது.

“என் நாடு ஏன் அவ்வாறு இல்லை?”



என்பது, அயலக நாடுகளுக்கு சென்று விட்டுத் திரும்பும் நம் இந்திய மக்களுக்கு எழும்புகின்ற பொதுவான கேள்வி. இதற்கான பதிலை 1966 ஆம் ஆண்டு ஜப்பான் பயணம் மேற்கொண்டு எழுத்தாளர் தி. ஜானகிராமன் அவர்கள் எழுதிய பயண நூலான உதயசூரியன் எனும் நூலில் கொடுத்திருக்கிறார்.

அதாவது,

"நம்முடைய முன்னேற்றத்தின் மந்தகதிக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் விட பெரிய முட்டுக்கட்டை திரும்பி திரும்பி பார்க்கிற நம்முடைய போக்குதான். நடக்கிறவர்கள் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனால் நடை தடைபடும். சில சமயம் தடுக்கி விழவும் நேரிடும். நம் பழைய ஆதாரங்கள் கொள்கைகள் பற்றுகள் வேற்றுமைகளை எல்லாம் திரும்பி திரும்பி பார்த்து நின்று விடுகிற பாச உணர்வு தான் நம்மை தொட்டில் முதல் இடுகாடு வரையில் ஆட்டி வைக்கிறது. அதை அறவே பெயர்த்து எரிந்து விட முடியாது. பெரும் அளவுக்கு நீக்கத்தான் வேண்டும். நீக்கி எறிகிற தைரியம் வேண்டும். பிரியும் துன்பத்தை களைய வேண்டும். பழைய சாமான்களை எறியாமல் சேர்த்து வைத்துக்கொள்ள இடம் அடைந்து போகிறது. புதிய சாமான்கள் வைக்க இடமும் இல்லாது போகிறது."

என்பதாக அவரது பதில்கள் இருக்கிறது.

இதனை அடிப்படையாக வைத்து நாம் சிந்தித்துப் பார்த்தால், ஜப்பான் மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு மதப்பற்று இருந்தாலும் மதத்தின் மீது தீவிரம் இல்லை என்பதை இந்த நூலின் வாயிலாக அறிய முடிகிறது. நான் இந்த மதத்தைச் சேர்ந்தவன் என்பதை மிகப்பெரும் அடையாளமாக தங்களை அறிவித்துக் கொள்வதில்லை. தங்களது மதங்களை பாதுகாக்கின்ற விவாதங்களில் பொழுதுகளை வீணடிப்பதுமில்லை. மதங்களாலும் ஜாதிகளாலும் துண்டுபட்டுப் போயிருக்கின்ற இந்தியப் பெருநாடானது, நம் மக்களிடம் மாறக்கூடாத மண்ணின் அடிப்படைப் பண்புகளை மட்டும் தக்க வைத்துக் கொண்டு, நம்மை பிரித்து ஆளும் சூழ்ச்சிக்கு இடம் கொடுக்கும் மதங்களை தூர எறிந்து விட்டு தங்களை தூய்மைப்படுத்திக் கொண்டால் சிறப்பாக இருக்குமென்று குறிப்பிடத் தோன்றுகிறது.

ஜப்பான் நாடுகளில் எழுத்தாளர் தி ஜானகிராமன் அவர்கள் சென்று வியந்து பார்த்து இந்த நூலில் பதிய வைத்திருக்கும் தொழில் நுட்ப வசதிகளும், மக்களின் பழக்க வழக்கங்களும், அவர்களது அமைதியான மனப்பான்மையும், தொழிலில் சுறுசுறுப்பாக இயங்கும் மனநிலையும், நாட்டின் தூய்மையும் அவரை வியக்க வைத்திருக்கிறது. இவற்றையெல்லாம் நமது இந்திய நாடு அடைவதற்கு பல நூறு ஆண்டுகளாவது ஆகலாம் என்பது அவர்களது ஏக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் தற்போது 2024 ஆம் ஆண்டில் அந்த நூலை எடுத்து வாசிக்கும் பொழுது 100 ஆண்டுகள் கூட முழுமை அடையாத நிலையில் ஜப்பானில் குறிப்பிட்டிருக்கின்ற தொழில்நுட்பங்கள் அத்தனையும் இந்தியாவில் உள்ள மாநகரங்களில் இன்றைய காலகட்டங்களில் கிட்டியிருக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

அன்று ஆசிரியர் அங்கு படிக்கும் மாணவர்களிடம் இந்தியாவைப் பற்றிய கேட்ட கேள்விக்கு பெற்ற பதிலானது, "இந்தியா மிகவும் ஏழை நாடு" என்பதாகவே இருந்திருக்கிறது. உலகின் பார்வையில் இந்தியாவின் நிலை அன்று அவ்வாறே இருந்திருக்கிறது என்பதாகவே இந்த மாணவனின் பதிலை எடுத்துக் கொள்ளலாம்.

ஜப்பான் மண்ணிற்கே உரியதாக சொல்லப்படுகின்ற ஊர் முழுவதும் நிசப்தமாக இருக்கின்ற அளவிற்கு மக்களது தாழ்ந்த குரலிலான பேச்சும், செய்யும் செயல்களை சிறப்பாகச் செய்ய தங்களது கவனத்தை குவிக்கச் செய்யும் மனப்பயிற்சியும், ஆசிரியரை வியக்க வைத்தாலும், இந்தியாவின் தென்பகுதியில் தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து சென்ற போதிதர்மன் கற்றுக் கொடுத்த தற்காப்பு கலைகளும் தியானமும் இவர்களது இந்த மனப்போக்கிற்கு அடிப்படையாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். நம் நாட்டில் இல்லாத கலைகளே இல்லையென்றாலும் நாம் கவனத்தில் கொள்ளாது நம்மால் உணராமல் போன பெருமைகளும் ஏராளம். இந்தியாவில் பிறந்த சித்தார்த்தரை நம்மை விட அந்நாட்டைச் சேர்ந்தவர்கள் மிகவும் மதிக்கிறார்கள் என்பதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்..

ஜப்பானில் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கின்ற தொலைக்காட்சி பெட்டிகளைப் பார்த்து ஆசிரியர் வியந்து கூறினாலும் அவற்றை அவர்கள், "இடியட் பாக்ஸ் - (முட்டாளின் பெட்டி) என்றும் கூறுகிறார்கள்" என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். இன்று இந்தியாவில் நாம் தொழில்நுட்பத்தில் நன்கு வளர்ந்து கணினிக் கருவிகளும், கைபேசிகளும் மலிந்து கிடக்கின்ற வேளையில் அவற்றிற்கு அடிமையாகாமல் ஆக்கப்பூர்வமாக மட்டுமே பயன்படுத்திக் கொள்வதும் நமது விழிப்புணர்வாக இருக்க வேண்டியிருக்கிறது..

மற்றபடி 100 மீட்டர் வேகத்தில் விரைந்து செல்லும் ரயில் வண்டிகள், வந்து சேரும் நேரத்தை சரியாக கடைப்பிடிப்பதும், வானுயர அங்காடிகளில் வாயிற் கதவுகளானது வாடிக்கையாளர்கள் உள்ளே வரும் பொழுது தானாக திறந்து கொள்வதும், ஜப்பான் நாட்டு மக்களே தங்களது நாட்டில் சுற்றுலா பயணிகளாக ஒவ்வொருவரும் புகைப்படக் கருவிகளோடு வலம்

வருவதையும், எலக்ட்ரானிக் பொருள்கள் மலிவாகக் கிடைப்பதையும், வியந்து பாராட்டி நம் நாட்டில் காணாததை அங்கு கண்டதாக எழுதியிருக்கும் பொழுது 100 ஆண்டுகள் கூட முடிவடையாத நிலையில் அவை அத்தனையும் இன்று இந்தியாவில் உள்ள மாநகரங்களில் நடுத்தர மக்களுக்கு கிட்டும் அளவிற்கு நம் இந்திய நாடு உயர்ந்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டு பெருமிதம் கொள்ள நம்மால் முடிகிறது.

மேலும், இயற்கை சீற்றங்களை மீறி, அந்தந்த நொடிப்பொழுதை ரசித்து நிம்மதியாக வாழும் ஜப்பான் மக்களது மனநிலையையும், அந்நாட்டின் அழகான ஃபியூஜி மலைத்தொடரையும் இரண்டாம் உலகப் போருக்கு பின்பு ஜப்பான் கிட்டத்தட்ட அழிந்த நிலையில் மீண்டும் மெய்ஜி ஆட்சியில் அந்நாடு தன் உழைப்பில் தலை நிமிர்ந்த நிலையையும் அழகாக விவரித்திருக்கிறார்.

ஜப்பானைப் பொருத்தவரை அந்த நாடு வீழ்ந்தெழுவதென்பது தொடர்ந்து சந்திக்கும் நிகழ்வாகவே அதன் வரலாற்றைப் பொருத்தவரை நாம் அறிந்திருக்கிறோம். இந்திய நாட்டை பொறுத்தவரை அதன் இயற்கை வளங்களான பரந்து விரிந்த நிலப்பரப்பும், செழிப்பான காடுகளைக் கொண்ட மலைகளும், கங்கை, காவிரி, மகாநதி போன்ற வற்றாத நதிகளும், விளைநிலங்களும் அதற்கேற்ற தட்பவெப்ப நிலையுமென இவ்வளங்களில் மிகக் குறைந்த அளவே ஜப்பான் பெற்றிருக்கிறது. பஞ்ச பூதங்களான நிலத்தில்- நிலையில்லாத நிலமும், நீரில்- பனிப்புயல்களும், காற்றில்- சூறாவளியும், நெருப்பில்- எரிமலைகளுமென ஆகாயத்தின் கீழ் அடிப்படை வாழ்விற்கே போராட்டம் என்பதில் கூட மீண்டெழுந்து தங்களது உழைப்பையும் தன்னம்பிக்கையையும் முதலீடாக வைத்து வல்லரசுகளில் ஒன்றாக வாழ்ந்துவிட்டது ஜப்பான். தற்போது மக்கள் தங்களது அயராத உழைப்பை மறந்த நிலையில், இன்றைய தலைமுறையினர் பணத்தைக் கொண்டு பணத்தைப் பெருக்கும் வழிகளை ஆராய்வதும், லஞ்சம் எனும் மீளமுடியாத கையூட்டும் இந்நாட்டை பின்னோக்கி நகர்த்திக் கொண்டிருப்பதாக ஜப்பானின் எதிர்காலம் குறித்த கட்டுரைகளில் இடம் பெற்றிருக்கிறது. இதனை அறியும் பொழுது, மீளாத கையூட்டு எனும் இச்சீற்றத்திலிருந்து ஜப்பான் மீண்டும் எழுமா? என்ற நம் மனக்கேள்வியுடன் ஜப்பானின் மரங்கள் உதிர்த்த பூக்கள் மட்டுமே தற்போது நினைவில் நிற்கிறது. இந்தக் கேள்வி, தன் இயற்கை வளங்களில் சிறந்திருக்கும் இந்திய நாட்டுக்கும் தான். கையூட்டிலிருந்து மீண்டும் எழுமா??!!

# கோவை ஆனந்தன் கவிதைகள்

பருவம் முடிந்த பிறகும்
பழுக்காத இரு பிஞ்சுகளை
சுமப்பது -அவ்வளவு
பெரிய குற்றமோ!

தினமும் கல்லடிகளால் காயப்படுகிறது
பழுத்த மரம்.

★

சூரியனும்
சந்திரனுமில்லாத
ஆகாயமாகிறது
ஓயாமல் பெய்யும் மழை நாளொன்றில்
விரியும் குடை

★

கடற்பரப்பின் மீதுதான்
பறத்தலென முடிவான பின்பு
ஒரு குச்சியைத் தவிர
வேறெது ஆசுவாசப்படுத்தும்
நீண்ட தூரம் பயணிக்கும்
பறவையை.....

★

வாழ்ந்துதான்
ஆகவேண்டுமென
முடிவான பிறகு
கூலாங்கற்களையும்
விழுங்கித்தான்
உயிர் வாழ்கிறது
செரிமானக்
கோளாறுகளைப் பற்றி
யோசிக்காத பறவையும்.

உடப்பூர் வீரசொக்கன்

# புரிவோம் அறிவோம்

மலரின் வாசம்
வண்டுக்கு தெரியும்
பலரின் பாசம்
உறவுக்கு புரியும்

உறவின் பந்தம்
உள்ளத்துக்கு தெரியும்
பறவையின் கீதம்
பாடகனுக்கு புரியும்

காலின் நடை
பயணத்தில் தெரியும்
பாலின் தன்மை
பரிகினால் புரியும்

கடையின் இலாபம்
முதலாளிக்கு தெரியும்
நடையின் பயணம்
பாதத்தில் புரியும்

மீனின் சுவை
நாவுக்கு தெரியும்
ஆணின் தேவை
பெண்ணுக்கு புரியும்

மணியின் ஓசை
காதுக்கும் தெரியும்
பணியின் பாசை
பாலகனுக்கு புரியும்

உணவின் அருமை
உண்பவனுக்கு தெரியும்
கனவின் கருமை
நனவில் புரியும்

கண்ணீரின் ஒளி
அந்தகனுக்கு தெரியும்
மண்ணின் வலி
உழுபவனுக்கு புரியும்

தண்ணீரின் தாகம்
வந்தால் தெரியும்
பன்னீரின் வாசல்
தெளித்தா புரியும்

நோயின் கொடுமை
நோயாளனுக்கு தெரியும்
வாயின் வழமை
பேசினால் புரியும்

வெயிலின் உஷ்ணம்
நிழலுக்கு தெரியும்
தாயின் கஷ்டம்
பேரில் புரியும்

பகைவனின் பலம்
எதிரிக்கு தெரியும்
வகையின் வலம்
வந்தால் புரியும்
தண்ணீரின் அருமை
தாகத்துக்கு தெரியும்
கண்ணீரின் பெருமை
அந்தகனுக்கு புரியும்

கல்வியின் உயர்வு
மாணவனுக்கு தெரியும்
பல்லின் வலி
பிடுங்கினால் புரியும்

பெற்றோரின் உறவு
பிள்ளைக்கு தெரியும்
நற்றோரின் வரவு
காலத்தில் புரியும்

பாசத்தின் படிப்பினை
நேசத்திற்கு தெரியும்
நாசத்தின் நட்பினை
நாடுதல் புரியும்.




**இளையவன் சிவா**

குஞ்சத்தில் மிதந்த தொப்பியும்
பஞ்சடைத்த தொப்பையும்
வண்ணப்பூச்சுகளுக்குள் மின்னும் கன்னமும்
மூக்கின் நுனி கண்ட உருண்டையும்
ஆளடைத்தாலும் நிரம்பாத ஆடையும்
வானமே தலையில் வீழ்ந்தாலும்
விலகிப் போகாத புன்னகையும்
அணிவகுத்துக் கொண்டு
உங்களை ஆசுவாசப்படுத்தும்
கோமாளியை நீங்கள்
ஓய்வில் சென்று பாருங்கள்
ஒட்டிப் போன வயிறும்
உருண்டு விளையாடும் வறுமையும்
அந்தரத்தில் அவனைத் தொங்கவிடுவதில்
கைதட்டியா சிரிப்பதென
கவலைப்பட வாய்க்கலாம்
நமக்குள்ளும் ஒரு கோமாளித்தனம்.

**நேசன் மகதி**

# அம்மாவும்... ஆட்டுக்குட்டியும்.!

அம்மா முன் செல்ல
பின்னால் விளையாடிக்கொண்டு
சாலையோர மரக்கிளைகளின் பூக்களைப் பறித்து
வீசியெறிந்து குதுகாலித்துச்செல்லும்
சிறுபிள்ளைகளின்
சாயல் ஒத்துக்கிடக்கிறது
மேய்ச்சல் முடிந்து
தலையில் இலைக்கட்டோடு திரும்பும்
மேய்ப்பரின் முன்னே
அங்கும் இங்கும் மேய்ந்துகொண்டே
வீடு திரும்பும்
ஆடுகளின் அழகு...!



# கனவு மெய்ப்பட வேண்டும்

கமலினி கதிர் (சுவிற்சர்லாந்து)

பேராதனை பல்கலைக்கழகத்திற்கு பொறியியலாளர் படிப்புக்கு தேர்வு செய்யப்பட்டதை நினைக்க நினைக்க பார்த்திபனுக்கு பெருமையும், மகிழ்ச்சியும் மாறிமாறி நெஞ்சில் அலைமோதியது.எட்டு வயதில் தாயைப் பறிகொடுத்து தானும் பத்து வயதேயான அக்கா நிரஞ்சலா வும்;,இரண்டு தங்கைகளும் அநாதைகளாகி நின்ற கோலம் பசுமரத் தாணி போல் அவன் மனதில் நிலைத்து நின்றது.மூன்றே வயதான கடைசித் தங்கை மட்டுமே அவன் தாய் இறக்குமட்டும் அவவுடன் இருந்தாள்.அவனது அம்மாவுக்கு கான்சர் நோய் என்று அறிந்த நேரத் திலேயே நான்கு பிள்ளைகளைப் பற்றிய எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் விட்டுச் சென்ற அப்பாவின் உருவம் தெளிவில்லாததால் மனத்திரையில் நின்று நிலைக்கவில்லை. ஆனால் அம்மாவின் முகம் கலங்கலாக அவன் நினைவில் நின்றது. அம்மாவின் வாசம் மனதோடு ஒட்டியே இருந்தது.தங்கள் நால்வரையும் அருகில் இருத்தி அணைத்த படியே கண் கலங்கியதும் எப்படி வாழப் போறீங்க என்று அழுததும் பார்த்திபனுக்கு மறக்கவில்லை. அவனுக்கு அப்பாமேல் கோபம் கோப மாக வந்தது.போர் மேகம் சூழ்ந்த காலம் அது.முல்லைத்தீவு மண் போர்க்கோலம் பூண்டு தம் வீரத்தை உலகுக்கு பறைசாற்றிக் கொண்டி ருந்தது.அப்படிப்பட்ட போர்க்காலத்தில் எப்படித்தான் அம்மா தங்களை வளர்த்தாவோ தெரியேலை என்று அடிக்கடி நினைத்துக் கொள்வான். தன்னுடைய வாழ்நாள் காலம் குறுகி வருவது தெரிந்து பிள்ளைகளு க்கு ஏதும் ஏற்பாடு செய்யும் முழு முயற்சியில் பலரைப் போய்ப் பார்ப் பதும் வருவதுமாக இருந்தது அவனது அக்கா அடிக்கடி சொல்லி வந்ததால் தானோ என்னவோ பார்த்திபன் ஞாபகத்தில் அழியாதிருந் தது. அம்மாவின் களையிழந்த முகம்தான் இன்னும் அவன் மனத்திரை யில் நிழலாடும்.தான் இல்லாமல் போய்விடுவேனோ என்ற பரபரப்பில் பிள்ளைகள் மீது அன்பை அள்ளியள்ளிக் கொட்டினாள்.

வன்னியில் அவன் அம்மாவுக்கு வைத்தியம் செய்த டாக்டர் அம்மா செய்த உதவிகள் பற்றி அம்மாவின் தோழி கல்பனா ஆன்ரி நிரஞ்சலா வைப் பார்க்கப்போனபோது சொன்னதாக சொன்னவை பார்த்திபனுக்கு நன்றி உணர்வை இப்போதும் ஏற்படுத்தும்.எந்தப் பலனும் எதிர்பார்க்கா மல் இரு பெண் குழந்தைகளைச் செஞ்சோலையிலும் பார்த்திபனை அன்பு இல்லத்திலும் சேர்த்துவிட்டதுடன் ஒருநாள் மூவரையும் ஒரு சேர அழைத்து'நீங்க மூன்றுபேரும் சகோதரர்கள்.இன்னுமொரு தங்கை உங்கள் அம்மாவுடன் வளர்கிறா.ஒருகாலத்தில் சேர்ந்து இருங்கோ' என்று கூறியதுடன் எல்லோருக்கும் சாக்லெட்டும்,உடையும் பரிசளித்த

தாக பார்த்திபனுக்கு ஞாபகம்.அவரைப் பற்றி நினைக்கும்போது அவர் பெயரைக் கூடத் தெரிந்து வைக்கவில்லையே என்று கவலையாக இருக்கும். திடீரென ஒருநாள் இல்லத்திற்கு வந்த சித்தி'உங்கடை அம்மா செத்திட்டா.வந்து கடைசியாய் முகத்தைப் பாருங்கோ'என்று கூறி அழைத்துச் சென்ற போதுதான் சித்தி என்றொருவர் இருந்ததே அவர்களுக்குத் தெரிந்தது. அந்த டாக்டரும் 2009 கடைசிப் போரில் வீரச் சாவு அடைந்ததாகக் கேள்விப்பட்டபோது அவர்கள் தாயைப் பற்றி இனிமேல் கேட்பதற்கு யாரும் இல்லை என்ற உணர்வு கசந்தது.

ஆதரவற்ற குழந்தைகள் வாழும் அன்பு இல்லத்தில் அரவணைக்க யாருமே இருந்ததில்லை.வயதொத்த நண்பர்களும் பார்த்திபனைப் போலவே அன்புக்கு ஏங்குபவர்களாகவே இருந்தார்கள்.யாரும் போட்ட உடைகளே அவர்களுக்காய் வழங்கப்படும்.வயிற்றுப் பசி போக்க மட்டுமே உணவு வழங்கப்பட்டு வந்தது. வெளிநாட்டில் வாழும் சிலர் தங்கள் பிள்ளைகளின் பிறந்தநாள் அன்று ஆதரவற்ற குழந்தைகள் வாழும் இல்லங்களுக்கு உணவு வழங்குவார்கள்.யாருக்கும் பிறந்தநாள் வந்திடாதா அன்றைக்காவது ஏதும் விசேட உணவு கிடைத்திடாதா என்று ஏங்கும் குழந்தைகள் வாழும் இல்லம் அது.பார்த்திபனும் எத்த னையோ நாட்கள் இப்படி ஏங்கியதுண்டு.அங்கு அழுவதைக் கேட்க ஆட்களுமில்லை.ஆறுதல் வழங்க யாரும் இருந்ததுமில்லை.அங்குள்ள குழந்தைகளுக்கு தாயின் மடியோ,தந்தையின் நிழலோ கிடைத்திடவுமி ல்லை. பிள்ளைகள் படும் துன்பத்தைப் பார்க்காமல் போய்விட்ட அந்த தாய்தந்தையர் கொடுத்து வைத்தவர்கள்.

சிறுவயதிலிருந்தே பார்த்திபன் வெளியில் உட்கார்ந்து விண்ணில் ஒளி ரும் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருப்பான்.அவை பிரகாசத்து டன் கண் சிமிட்டும் அழகை இரசிப்பதில் அவனது பெரும்பாலான இரவுகள் கழிந்துவிடும்.அவற்றுடன் மணிக்கணக்கில் பேசுவது அவனு க்கு பிடித்தமானது.வானத்தில்தான் அம்மாவும் இருப்பாவோ என்று நினைத்துக் கொள்ளுவான். சிலநேரங்களில் அழுகைவரும்.தான் அழும் நேரங்களில் எல்லாம் 'ஆம்பிளைப்பிள்ளை அழக்கூடாது' என்று அம்மா கூறுவது காதில் வந்து கிசுகிசுக்கும்.'ஏன் அம்மா எங்களை விட்டிட்டுப் போனீங்க.இன்னும் கொஞ்ச நாள் இருந்திருக்கலாமே நான் வளர்ந்து உங்களையும் தங்கச்சியவையையும் பார்க்கமாட்டேனா? அக்காதான் பாவம்.தங்கச்சிகளையும் பார்த்துக்கொண்டு தானும் படிக்கிறா.அவ கெட்டிக்காரி அம்மா.என்னைப்போல அழமாட்டா'என்று வானத்தைப் பார்த்து தாய் இருப்பதுபோல கதைப்பான்.அவனுக்கு நண்பர்களே வானமும்,விண்மீன்களுந்தான்.

முழுநிலவு நேரங்களில் நிலவைப் பார்க்கும்போது அம்மா சிறுவயதில் சொன்ன கதை ஞாபகத்தில் வரும்.'நிலவில் யார் அம்மா உட்கார்ந்தி ருக்கிறது'என்று பார்த்திபன் கேட்கவும் அம்மாசொல்லுவாள்'பார்த்திபா! அவதான் ஔவைப்பாட்டி.அவதான் ஆத்திசூடி,கொன்றைவேந்தன்,நல் வழி,மூதுரை என்று சிறுவர்களுக்காக பாடல்கள் பாடிய பாட்டி.கிட்டத் தட்ட ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முதல் இவற்றை எழுதியிரு க்கிறா.'சொல்லவும் 'ஆ!அவ்வளவு காலமா?'பார்த்திபன் வாயைப் பிளந்து கேட்டது இன்னும் மறக்கவில்லை.எண்ணும் எழுத்தும் கண் ணெனத் தகும் என்றும் ஊக்கமது கை விடேல் என்றும் நிலவிலை உட்கார்ந்திருந்து சின்னப் பிள்ளைகளுக்காக எழுதிக் கொண்டிரு க்கிறா. படிப்பை மட்டும் மறந்திடக் கூடாது என்றதுதான் அவவுடைய விருப்பம்.வாழ்க்கையில் முன்னேற படிப்பு மட்டுந்தான் உதவி செய்யும். உற்றுப் பார் ஐயா அவ உங்களுக்காக எழுதிக் கொண்டிருக்கிறது தெரியும்.' பார்த்திபனுக்கு கனகாலம் நிலவைப் பார்க்கும் போதெல்லாம் ஔவைப்பாட்டி உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பதுபோல் தெரியும். அம்மா போட்ட விதை மனதில் ஆழமாக பதிந்து விட்டது.படிப்பு மட்டுமே தங்களை உயர்த்தும் என்ற விடயம் நிரஞ்சலாவின் மனதி லும் பார்த்திபன் மனதிலும் ஆணியடித்தது போல் போய் உட்கார்ந்து விட்டது.வார்த்தைகளுக்கு உள்ள வலிமை இப்போது பல்கலைக்கழ கத்துக்கு தெரிவானபோது பார்த்திபனுக்கு புரிந்தது.நிரஞ்சலாவின் மனதிலும் ஆழமாகப் பதிந்ததால்தான் அவளாலும் சாதிக்க முடிந்தது. ஆனால் இரண்டு தங்கச்சிகளும் அவ்வளவாக படிப்பில் ஆர்வம் காட்டி யதில்லை. அவர்கள் தனித்து ஆதரவற்றோர் இல்லங்களில் வாழ்வதால் நிரஞ்சலாவுக்கு அவர்களைக் கண்டிக்க மனசு வருவதில்லை.அதுவும் கடைசித் தங்கை காஞ்சனாவின் மேல் அளவு கடந்த பிரியம்.தாய்ப் பால் குடிக்கக் கூட கொடுத்து வைக்காத குழந்தை என்று அவளிடம் அதிக பாசம் காட்டுவாள்.தான் பட்டப் படிப்பு முடித்திருந்தபோதும் இன்னும் வேலை கிடைக்காவிட்டாலும் மனந் தளராமல் முயற்சித்துக் கொண்டே இருக்கிறாள்.ரியூசன் கொடுத்தும் அதே தெருவிலிருக்கும் ஒரு முதிய பெண்ணுக்கு குளிக்க வார்ப்பது உணவூட்டுவது,வீட்டைப் பராமரிப்பது என்று வேலை செய்வதால் கிடைக்கும் பணத்தை வைத் து அவ்வப்போது வரும் தம்பிக்கு கொடுப்பதும் தங்கைகளுக்கு பிடி த்த சிற்றுண்டிகள் வாங்கிக் கொடுப்பதுமாக இருந்தாள்.சொந்த வீடு இல்லாத காரணத்தால் வாடகை என்ற பெயரில் பணம் செலவழிக்க வேண்டியிருந்தது.வசதியாக வாழும் சொந்த அத்தை தங்கள் வீட்டை அவளுக்கு வாடகைக்கு விட்டிருந்தாள்.கதவுகளோ,வசதிகளோ அற்ற அந்த வீட்டில் தன்னுடன் படிக்கும் ஒரு மாணவியுடன் குடியேறி இன்று வரை வாழ்கின்றாள்.அவளது மேற்படிப்புக்கு வெளிநாட்டிலிருக்கும் ஒரு பெண் உதவி செய்ததுடன் வீட்டுக்கு கதவு போட்டது என்று அவசிய த்தேவைகளை அந்தப் பெண்ணே கொடுத்து

உதவினார்.இதற்கெல் லாம் அம்மா செய்த நல்வினைதான் காரணம் என்று நிரஞ்சலா ஆணித்தரமாக நம்பினாள். அப்பா விட்டுச் சென்ற பின்பும் அவரை நோகாமல் அப்படியே அதை ஏற்றுக்கொண்டு பிள்ளைகளை சுமையாக நினைக்காமல் கூலி வேலை செய்தென்றாலும் சுகமாய் வளர்த்த நேர்த்தி நிரஞ்சலாவை நெகிழச் செய்யும். பார்த்திபனும் அக்காவுடன் வாழ்ந்த காலம் குறைவெனினும் அதே கருத்தையே கொண்டிருந்தான்.

தாங்கள் நால்வரும் தனித்தனியாக வாழ்வது நிரஞ்சலாவுக்கும்,பார்ததி; பனுக்கும் கவலையே அளித்தாலும் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.காலம் எந்தக் காயத்தையும் ஆற்றுவதில்லை. மனதில் ஆழப் புதைத்து ஒரு பக்கத்தில் ஓரமாய் நிற்க வைக்கிறது.சிறுவயதில் அம்மா காட்டி விட்ட ஔவையும்,பாரதியும் அவனைக் கைபிடித்து இதுவரை அழைத்து வந்து விட்டது.புத்தக வாசிப்பு என்ற அறைக்குள் நுழைந்ததால் உலகம் அவனுக்கு தெரிய ஆரம்பித்தது.புத்தகம் அவனை அடுத்தடுத்த இடம் நோக்கி நகரத் தூண்டியது.பார்த்திபன் வளரவளர மனதில் ஓர்மம் குடிகொண்டது.தான் படித்து ஒரு பொறியிய லாளராக வர வேண்டுமென்று கனவு காணத் தொடங்கினான்.சிலநேரங் களில்'பல்கலைக்கழகத்துக்குப் போனால் கனகாசு வேணுமே படிக்க. யார் எனக்குத் தருவினம்'என்ற எண்ணம் வந்து அவனை முடக்கி விடும்.ஆறாம் ஆண்டில் அவனுக்கு கிடைத்த கணித ஆசிரியை பூர்ணிமா அவனுக்கு அம்மாவை ஞாபகப்படுத்துவா.அவனது ஆர்வத் தைத் தூண்டி விட்டதுடன் தீவிரமான ஆசையும் தீவிர முயற்சியும் இருந் தால் அது நடக்கும் என்ற விதையை அவன் மனதில் போட்டு விட்டா. தான் கொண்டு வரும் உணவில் பார்த்திபனுக்கு கொடுப்பதி லும் புரியாத பாடங்களை புரிய வைப்பதிலும் அவரின் பங்கு இருந் ததை இப்போதும் பார்த்திபன் நினைவு கூருவான்.அவரைப்போல் எல்லோரையும் தானும் நேசிக்க வேணுமென்று நினைத்துக் கொள்ளு வான்.'அன்போ,அறிவோ,சாந்தமோ ஒருவரிடம் அபரிதமாக இருந்தால் தான் மற்றவர்களுக்கு கொடுக்க முடியும்.ஆகவே நீ அன்பை,அறிவை, சாந்தத்தைப் பெருக்கிக் கொள்ள வேணும்'என்று பூர்ணிமா ரீச்சர் அடிக்கடி சொல்வது அவன் மனதில் அடிக்கடி வந்து போகும்.

பல்கலைக்கழகப் படிப்பிற்காக வங்கியில் கடன் பெறலாம் என்று ஒருவர் சொன்னதைக் கேட்டு வங்கிக்குச் சென்றான்.அப்போதுதான் புரிந்தது அதொன்றும் இலகுவான காரியமில்லையென்று. பெற்றோரின் கையெழுத்து அல்லது அவர்களின் இறப்புச் சான்றிதழ் வேண்டும் என்று கேட்டபோது எப்படி எங்கு எடுப்பதென்று தெரியாமல் திண்டாடி விதானையிடம் போனபோது இறந்த இடம்,திகதி,ஆண்டு விபரங்கள் கேட்டபோது எதுவுமே தெரியாதென்று சொன்னதால் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று. தங்களைப்போல எத்தனையோ ஆயிரம் பிள்ளைகள் தமது பெற்றவர்கள் பெயர் கூடத் தெரியாமல் இல்லங் களில் வாழ்ந்ததை நினைவு கூர்ந்தான்.பெற்றவர்களின் இறப்புக்குப் பின்பும் தங்களுக்கொரு கரடுமுரடான வாழ்வு இருப்பதை நினைத்து வேதனைப்பட்டான். எந்தத் தவறுமே செய்யாமல் தண்டனைகளை மட்டுமே அனுபவிக்கும் தங்களை ஒத்தவர்கள் நலனில் யாருமே அக்கறை காட்டாமலிருப்பது பற்றி யோசிப்பான்.அரசாங்கமோ,தமிழ்த் தலைமைகளோ இதுபற்றி சிந்தித்ததோ அன்றி ஏதும் முயற்சி எடுத்த தாகவோ அவனுக்குத் தெரியவில்லை.உயிரோடிருக்கும் பிள்ளைகளை விட வெறும் கடதாசிக்கு இருக்கும் முக்கியத்துவம் பற்றி சிந்திப்பான்.

ஒவ்வொருவரிடமும் சென்று ஒரேவிதமான பதிலையே வாங்கிக்கொண்டு வந்தான்.நம்பிக்கை மிதிக்கப்படும்போது வாழவே பிடிக்காமல் விரக்தி நிலைக்குச் செல்வான்.உடைந்து விட்ட அவன் மனதில் விடாப்பிடியாக ஒவ்வொருத்தரும் சொன்ன வார்த்தைகள் மட்டும் பிடிவாதமாக உயிர் வாழ்ந்து கொண்டிருந்தன.அவமானங்கள் அவனை போராடத் தூண்டி யது.அஞ்சுவதும் கெஞ்சுவதும் ஒருவருக்கு அழகல்ல என்று எங்கேயோ வாசித்தது நினைவுக்கு வர எப்படியாகிலும் படித்து ஒரு பொறியியலாளராக வந்துவிட வேண்டுமென்ற வெறி மனதில் ஊன்றி யது.பல்கலைக்கழகம் தொடங்கும் வரை வயலில் கூலித் தொழிலுக் கும்,கட்டடங்கள் கட்டும் தொழிலில் கூலியாளாகவும் வேலை செய் தான்.வேலை முடிந்து அவன் வானத்தை பார்த்து உட்கார்ந்தபோது எத்னையோ பேரின் பெருமூச்சுக்களையும், கண்ணீரின் ஈரத்தையும் சுமந்துகொண்டு காற்று வீசிக் கொண்டிருந்தது. மண் மீட்கப் போராடி உயிர் நீத்த பெற்றோரின் அநாதரவாக நிற்கும் தமிழீழ இளையவர் களின் சோகங்களைத் தன்மேல் ஏற்றிக் கொண்டு அந்த மாலை வேளையிலும் வெப்பமான காற்று வீசத் தொடங்கியது. யாரிடம் தன் கோபத்தைக் காட்டுவது என்று தெரியாத பிரபஞ்சம் காற்றின்மேல் வெப்பத்தைப் பரப்பி அந்த வெப்பத்தின் மூலம் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டது.தன் பொருளாதாரச்சுமையால் வந்த கவலைகளை விழுங்கி ஆற்றுவார் இல்லாமல் தவிக்கும் பார்த்திபன் போன்ற இளை யவர்களின் இதயங்களை மெல்லெனத் தடவி ஆற்றுப்படுத்தும் மருந் தாக குயில்களின் இதமான கூவல்கள் எழத் தொடங்கின.ஆற்ற முடி யாத வேதனைகளுக்கு மருந்துகளை இந்தப் பிரபஞ்சம் தன்னிடமே ஒளித்து வைத்திருக்கிறது போலும். போட்டி போட்டுக் கொண்டு கூவும் குயில்களின் இன்னிசையில் தன் துன்பத்தை மறந்தான் பார்த்திபன்.

( உண்மை கலந்த கற்பனை)

# மணிபாலா கவிதைகள்

ஜாதி மத
இட ஒதுக்கீடுகள்
ஏதுமில்லை,
இறப்பிடம்...
அதுவே,
இறைவன்
இருப்பிடம்...

பினாமியாய்
பின் செல்ல;
சுனாமியாய் சுருட்டி
இறந்து முன் செல்ல
இருநூறு பேர்
இருப்பினும்,
இறுதியாய்
உறுதியாய்
இறந்துதான் ஆகவேண்டும்..
இறப்பிடம்,
கருணை இரந்துதான்
ஆகவேண்டும்...

உயிர் முடிவிலி..
பிறப்பு இறப்பு அதன் வழி..
வாழத் தெரியாமல்
வாழ்ந்து முடிவதே,
வாழ்வின் வலி...

சங்கடப்படாமல் செத்தவர் யார்?!
சகலமும் அனுபவித்து வாழ்ந்தவர் யார்.?!

வயது கூடக் கூட
வருத்தம் கூடும் வாழ்வில்,
இனி எல்லாம் சுகமே..
நாளை நமதே...
இந்நாள் பொன் நாள் என்று
இந்த நொடி இனிது வாழுங்கள்..

பின்னால் வரும்
அந்நாளும் பொன் நாள்
ஆகும்..

பயணம் இனிதாக,
பக்குவப்படுவோம்..,
நிறுத்தம்
எங்கு கொண்டு சென்று
நிறுத்தும் என்று (மனதில்)
நிறுத்திப் பார்க்க
ஒருத்தனும் இங்கு
இறைவன் இல்லை..


எழுதிய அனைத்தும்
சூழல்
பழுதுற பழுதற
பக்குவமாய்
அழுதழுது அவன்
எழுதியவை.,

இயன்றால்
பழுது அற
முயன்று
தணிக்கை செய்து,
துணைக் கை தந்து
இனிதாக்கட்டும்
இனியேனும்
இனிதாய் வாழ...

இறைவன் இனியன்
இவ்வுலகு இனிது..


பணிந்துய்ப்போம்,
இனி(து) வாழ(க்கையை)...

★



2

கற்றவை சிறப்பாயின்
பற்றவை…
மற்றவை மற்றவர்
வாழ்விலும் சிறப்பாக
சிற்றவை தன்னிலும்
கொற்றவை போலொரு
கூர்மிகு ஞானமாம்
கல்விதனை
தனமாய்
தானமாய் பெற்றிடினும்
பட்டவை
கேட்டவை
அனைத்திலும் நிற்கும் ஞானமதை
தீயென பற்றவை,
பரவட்டும்
ஞான ஒளி…
உன்னிலிருந்து…



# தண்டனை

கார்த்திக் கிருபாகரன்

“உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களை ஒப்புக் கொள்கிறீர்களா?” சற்று எரிச்சலுடன் கேட்டார் நீதிபதி.

“முழுமையாக ஒப்புக் கொள்கிறேன் ஐயா” என்றான்.

“நான் வில்லியத்தை குற்றவாளி என்று தீர்மானிக்கிறேன். பத்து வயது உள்ள ஜூலி என்ற பெண் குழந்தையை கொடூரமாக கற்பழித்து, அதனை மறைக்க இரக்கமில்லாமல் அந்த சிறுமியை எரித்து கொன்ற குற்றத்திற்காக பத்து ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.” என்று தீர்ப்பு வழங்கினார்.

வில்லியத்தின் குற்றம் நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி, பல மகளிர் அமைப்பினர் “வில்லியத்திற்கு தூக்கு தண்டனை வழங்க கோரி” போராட்டம் நடத்தியுள்ளார்கள். இறுதியாக கடுங்காவல் தண்டனை கிடைக்க, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி, காலை பத்தரை மணிக்கு, தண்டனை பெற்ற வில்லியத்தை திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைத்தார்கள்.

பத்தாண்டு காலம் சிறையில் நரக வேதனை அனுபவித்து,

2023 ம் ஆண்டு, டிசம்பரில் தண்டனை காலம் முடிந்து விடுதலையானான். தண்டனை காலத்தில் தன் மனைவி, மகன் சிறையில் தன்னை பார்க்க வரவில்லை என்ற வருத்தம் அவன் மனதில் வெம்பி வர, அவர்களை தேடி சொந்த ஊருக்கு சென்றான். அவர்கள் பத்து ஆண்டுக்கு முன்பே சென்னை பகுதியில் குடியேறியதால், சென்னையில் வசிக்கும் மனைவி, மகனை தேடி புறப்பட்டான். பல நாட்கள் அலைந்து தேடி, ஒருவழியாக மகன் வீட்டு முகவரியை கண்டுபிடித்தான்.

கே கே நகரில் முதல் வரிசை அபார்ட்மெண்ட்டில் கீழ் தளத்தில் மகன் பீட்டர் வீடு. வீட்டு வாசலிலேயே வந்து நின்றான். வீடு பூட்டி இருக்க, பக்கத்து வீட்டை அழைப்பு மணியை அடித்தான். உள்ளிருந்து வந்தவர்,

வில்லியத்தை ஏற இறங்க பார்த்தார்.

நரைத்த சுருளான தலைமுடி, சுருங்கிய முகம், லேசான வெள்ளை தாடி, மக்கிய நிலையிலான வெள்ளை சட்டை, அதில் ஆங்காங்கே பழுப்பு நிற திட்டு, வெளுத்து போன வெள்ளை வேட்டி கட்டியிருந்தபடி வில்லியம் இருந்தார்.

“யாருங்க நீங்க?” என்றார்.

“சார், அது பீட்டர் வீடு தானே?” என்று வீட்டை காட்டி வில்லியம் கேட்க,

“ஆமா, அது பீட்டர் வீடுதான். நீங்க யாரு?” என்றார்.

“பீட்டர் அப்பா வில்லியம்” என்றார்.

“என்னது, பீட்டரு அப்பாவா????, அவர் செத்துட்டதா! என்கிட்ட சொல்லிருக்காரே!” என்றவாறு சந்தேகம் வந்து, பீட்டருக்கு அலைபேசியில் அழைப்பு விடுத்தார்.

“ஹலோ பீட்டர்”

மறுமுனையில் “ஹலோ.... சொல்லுங்க மணி சார்” என்றான் பீட்டர்.

“பீட்டர் உங்கள தேடி ஒருத்தர் வந்திருக்காரு” என்றார் மணி.

“யாரு சார்”

“கேட்டதுக்கு உங்களுக்கு அப்பா. பேரு கூட வில்லியம்னு சொன்னாரு” என்றார் மணி.

“ஓ.....சிட்......” என்று எரிச்சலானான் பீட்டர்.

“பீட்டர்..... என்னாச்சு?” என்றார் மணி.

“அவர் என்னோட சொந்தகாரர். அப்பா முறை வரும். வெயிட் பண்ண சொல்லுங்க. நான் உடனே வரேன்” என்று உடனே அலைபேசி அழைப்பை துண்டித்தான் பீட்டர்.

“என்ன உடனே கட் பண்ணிட்டாரு” என்று நினைத்தவாறு, வில்லியத்தை பார்த்து, “ஐய்யா, உள்ள வாங்க. பீட்டர் இப்ப வந்திருவாரு. உள்ள வந்து உட்காருங்க” என்று மணி அழைக்க, தயக்கப்பட்டு,”பரவாயில்லங்க” என்றார் வில்லியம்.

“அட தயக்கபடாம வாங்க” என்று மணி அழைக்க, உள்ளே வந்து, நாற்காலியில் அமர்ந்தார் வில்லியம். மணி குடிக்க தண்ணீர் கொடுக்க, வாங்கி குடித்தபடி, சுவரில் மாட்டியிருந்த தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருந்தது. தொலைக்காட்சியை பார்த்தார். அதில் நியூஸ் சேனலில், “சென்னை அன்னை காலணி பகுதியில் எட்டு வயது பெண் குழந்தை கற்பழித்து கொலை” என்ற செய்தி ஓடிக் கொண்டிருந்தது. அதை கவனித்த மணி, “இந்த நாட்டுல வயித்த வலி,கண்ணு வலி மாதிரி சில ஆட்களுக்கு மட்டும் விறைப்பு வலி அடிக்கடி வரும் போல, அது வந்தா! சின்ன குழந்தைகள்னு கூட பார்க்காம இப்புடி நாசம் பண்ணீடுறாங்க. இங்க கூட இதுமாதிரி நடந்திருக்கு. இந்த மாதிரி தப்பு பண்ணுற ஆட்களை எல்லாம் துப்பாக்கி எடுத்து சுடனும். இல்ல தூக்குல போடனும்” என்று ஆவேசமாக மணி பேசியபடி தொலைக்காட்சியை அணைத்து வைக்க, முகமெல்லாம் லேசாக வியர்த்த நிலையில் வில்லியம் அமர்ந்திருந்தான்.

பின் மெல்ல தயங்கி தயங்கி, “பீட்டர் அம்மா ராணி இங்க இருக்காங்களா?” என்றான் வில்லியம்.

“தெரியல சார். பீட்ரு இந்த வீட்டுக்கு குடி வந்த, மூனு வருஷமா தான் தெரியும். பீட்டர், பீட்டர் மனைவி மலர், அப்பறம் அவங்க குழந்தை ஜோன். இவங்க தான் இங்க இருக்காங்க” என்றார் மணி.

“பீட்டருக்கு கல்யாணமாகி குழந்தை இருக்கா?” என்று வியப்பில் கேட்டான் வில்லியம்.

“ம்.... கல்யாணமாகி நாலு வருஷமாச்சு. ஜோன்னு குட்டி பொண்ணு இருக்கு” என்றார்.

“பீட்டர் அம்மாவ நீங்க பார்த்தது இல்லையா?” என்று வில்லியம் கேட்க,

“நான் பார்த்ததில்ல. ஆனா அப்பா இறந்துட்டாரு. அம்மாவுக்கு ஆஸ்துமா. இங்க இருந்தா குழந்தைக்கு இன்பெக்சன் ஆகிடும்னு ஹோம்ல இருக்கத முதல் தடவை பார்த்தப்ப பீட்டர் சொல்லிருக்காரு” என்று மணி சொல்லி கொண்டிருக்கும் போது, சட்டென்று வெளியே கார் வரும் சத்தம் கேட்டது. “கார் சத்தம் கேட்குது. பீட்டர் வந்துட்டாரு போல” என்றார் மணி.

காரை நிறுத்தி, அவசர அவசரமாக மணி வீட்டுக்குள் வந்தார் பீட்டர்.

பத்து வருடங்களுக்கு பின் மகனை பார்ப்பதால் பாசமும், பத்து வருடங்களாக சிறையில் தன்னை பார்க்க வரவில்லை என்கின்ற வருத்தமும் இருந்தது.

வந்த வேகத்தில், “உங்களுக்கு நான் இங்க இருக்கேன்னு யார் சொன்னது. எப்புடி வந்தீங்கன்னு” கேட்டு கொண்டே, அப்பாவின் கையை பிடித்து தரதரவென வெளியே இழுத்துக் கொண்டு போனான் பீட்டர்.

“ஏதோ பிரச்சினை” என்று கவனித்தவாறு மணி அமைதியாக பின் வந்தார்.

வெளியே காரிலிருந்து மனைவி மலர், தன் குழந்தையை தூக்கி கொண்டு இறங்கி, “என்ன ஆச்சு பீட்டர். யார் இவரு?” என்றாள்.

“நான் சொல்லிருக்கேன்ல, எங்கப்பா” என்றான்.

வில்லியத்தை கேவலமாக ஒரு பார்வை பார்த்து, “சீ...” என்றவாறு முகத்தை திருப்பி கொண்டு, “என்ன பீட்டர் இதெல்லாம் நாம இருக்க இடம் இவருக்கு எப்படி தெரியும்?, நீங்க சொன்னீங்களா?, இவர நம்ம கூட இருக்க வைக்க முடிவு பண்ணிருக்கீங்களா?” என்றாள்.

இழுத்து வந்த அப்பாவின் கையை விட்டு, “மலர்....அப்படி எதுவும் இல்ல” என்றான்.

“அப்பறம் எப்படி, நாம இருக்குற இடம் தெரிஞ்சு இங்க வந்தாரு?” என்றாள்.

“தெரியல.... யார் சொன்னாங்கன்னு”

“நம்ம கூட இவர தங்க வக்கனும்னு கனவுல கூட நினைக்காத, இப்படி ஒரு ஆள பத்தி தெரிஞ்சும், உங்க நல்ல குணத்துகாக தான் உங்கள கல்யாணம் பண்ணேன். அப்ப கூட இவர் திரும்பி வரமாட்டார்ன்னு நீங்க சொல்லவும் தான். ஆனா இப்ப இங்க வந்திருக்காரு. நமக்கும் பெண் குழந்தை இருக்கு” என்று ஆவேசமாக மலர் பேசினாள். அக்கம்பக்கம் குடியிருப்போர் வெளியே சுற்றி வேடிக்கை பார்க்க,

கூனிகுருகி போய் நின்றார் வில்லியம்.

“என்ன பிரச்சினை?, மாமனார் தானே வீட்டுக்குள்ள போய் பேசுங்க” என்றார் மணி.

“சார், இதெல்லாம் உங்களுக்கு தெரியாது. இவரை பத்தி தெரிஞ்சா நீங்க இவரை உட்கார வச்சு கூட பேசிருக்க மாட்டீங்க. பிளீஸ் இதுல தலையிடாதீங்க” என்றாள் மலர்.

வில்லியத்தை ஒரு பார்வை பார்த்தபடி மணி அமைதியானார்.

“மலர், நீ பாப்பாவ கூட்டிட்டு வீட்டுக்குள்ள போ.

இந்த ஆள் நம்ம கூட இருக்கமாட்டாரு'' என்றான் பீட்டர்.

மகன் பேசியதை வருத்தத்தோடு கேட்டு கண் கலங்கி, அவனது குழந்தையை ஏக்கத்தோடு வில்லியம் பார்க்க, அந்த குழந்தை முகத்தை திருப்பி அம்மாவின் தோள்பட்டையில் சாய்ந்து கொண்டது. இதை கவனித்த மலர், ''பாரு இப்பவே இந்த காமபிசாசு திருந்தாம, எப்புடி பாக்குது பாரு'' என்றாள்.

கோபத்தில் பீட்டர் திரும்பி,அப்பாவின் கன்னத்தில் அறைவிட்டு தள்ளு தள்ளிவிட, நிலை தடுமாறி கீழே விழுந்தார். சுற்றி வேடிக்கை பார்த்தவர் ஒருவர் அவரை கைபிடித்து தூக்கி விட, கண் கலங்கி, சட்டையில் ஒட்டியிருந்த மண்ணை தட்டியபடி நின்றார் வில்லியம்.

ஒருபக்கம் பீட்டர் மலரை சமாதானம் செய்து,

''நீ வீட்டுல இரு. நான் இவரை அனுப்பிட்டு வரேன். ஆனா திரும்பி வரப்ப இவர் இருக்கமாட்டார்'' என்று அப்பாவை இழுத்து காரில் ஏற்றி சட்டென்று புறப்பட்டார்.

கார் ஹைவே பகுதியில் வேகமெடுத்து போய் கொண்டிருந்தது.

''இத்தன நாளா நிம்மதியா இருந்தேன். எப்புடிதான் நிம்மதிய கெடுக்க கிளம்பி வரீங்களோ!'' பல்லை நரநரவென கடித்தபடி பீட்டர் கேட்க, பதில் சொல்லாமல் காரிலிருந்து வெளியே பார்த்தபடி அமர்ந்திருந்தார் வில்லியம்.

கார் நகரை விட்டு வெளியே வெகுதூரம் பயணமானது.

''கேட்டதுக்கு பதில் சொல்லுங்க'' என்று கோபத்தில் பீட்டர் கத்தினான்.

பீட்டரை பார்த்து திரும்பி, ''ராணி எங்க?'' என்று வில்லியம் கேட்க,

ஒரு நொடி திரும்பி அப்பாவை பார்த்து, ''அம்மா செத்து போச்சு'' என்றான்.

கண்கலங்கி,பீட்டர் சொல்வதை நம்பாமல், ''ஹோம்ல இருக்காளா?, உண்மைய சொல்லு'' என்றார்.

''ஜெயில்ல இருந்தாலும் இவ்வளவு தெரிஞ்சுருக்கு. இரண்டு வருஷத்துக்கு முன்னாடியே ஆஸ்துமால அம்மா ஹோம்லயே செத்துட்டாங்க'' என்று பீட்டர் சொல்ல, மனம் நொந்து, கண்ணீர் துளிகளை வராமல் தடுத்து,அழுகையை முழுங்கியபடி கோபத்தோடு வில்லியம் பார்த்தார்.

''அம்மாவும் உயிரோட இல்ல, அப்பான்னு உங்கள வீட்டுல எப்புடி தங்க வக்கிறது. மலர் கண்டிப்பா ஒத்துக்கவே மாட்டா, குழந்தை வேற இருக்கு'' என்று சொன்னவுடன், கண்சிவக்க, இரத்தம் கொதிக்க, பீட்டரை ஓங்கி அறை விட்டார் வில்லியம். பதட்டத்தில் காரை 'சடன் பிரேக்' போட கட்டுப்பாட்டை இழந்து, பீட்டரும்,வில்லியமும் முன்னால் தூக்கி வீசும் அளவிற்கு வந்து நின்றது.

பதட்டத்திலும்,அறை வாங்கிய அதிர்ச்சியில் பீட்டர் இருந்தான்.

''என்னடா, நீ பண்ண தப்புகாக பழிய நான் ஏத்துகிட்டு,உன் வாழ்க்கைகாக, என் வாழ்க்கைய தொலைச்சு. அவமானபட்டு இருக்கேன். நீ இன்னும் மாறல. உன் கூட உறவாட வரல. அவ உயிரோட இருக்காளன்னு பார்க்க வந்தேன். ஆனா, அவளும் போயிட்டா, இனி உன்ன மாதிரி தப்பை மறைச்சு, மறந்த மிருகத்தோட வாழுறதுக்கு, செஞ்ச தப்ப நேர்மையா ஒத்துகிட்டு கைதியா இருக்கவங்க கூட வாழலாம்'' என்று ஆவேசமாக சொல்ல, அமைதியாக தலை கவிழ்ந்தபடியே இருந்தான் பீட்டர்.

''இங்க பாரு... மரணத்தை விட மோசமானது தப்பை மறைக்கிறதும், மறந்து போறதும்'' என்றபடி காரைவிட்டு இறங்க, கதவை திறந்தபடி திரும்பி பீட்டரை பார்த்து, ''நான் பொண்டாட்டிய தவிர வேற யாரையும் நெனச்சதில்ல. ஆனா, அவ கூட என்னைய குற்றவாளின்னு நினைச்சு இத்தன வருஷத்துல என்னைய பார்க்கவே வரல. ஒருதடவையாவது அவகிட்ட பேச நெனச்சேன்.இப்ப அவ உயிரோட இல்ல'' என்றபடி கண் கலங்கி, கண்ணீரை துடைத்தபடி, ''தப்பை உணருவ, மனுஷன இருப்பன்னு நினைச்சேன். ஆனா நீ மிருகத்தை விட கேவலமான ஆள்.

உன்னைய என்னோட மகன்னு நினைக்கவே அசிங்கபடுறேன்'' என்று சொல்லியபடி, காரை விட்டு இறங்கி நடந்தார். பதில் எதுவும் பேசாமல் ஸ்டெரிங்கை பிடித்தபடியே, கண்ணாடி வழியாக அவர் போவததை பார்த்தான் பீட்டர்.

வில்லியமும் பழைய சம்பவத்தை நினைத்தபடியே செல்ல, மெல்ல மெல்ல அவர் உருவம் கண்ணாடியை விட்டு மறையும் வரை பார்த்தபடி காரை எடுத்து செல்ல,

ஒருதிசையில் பீட்டர் காரில் செல்ல, மறுதிசையில் வில்லியம் பழையதை நினைத்து கண்ணீர் விட்டபடி செல்ல,

சட்டென்று அதிவேகமாக வந்த லாரி, நிலை தடுமாறி மோதி தள்ளியது.



க. புனிதன்


# புத்தனின் அரண்மனை முக்காலி

முக்காலமும் அறிந்த
புத்தனின் அரண்மனையில்
இந்த முக்காலி மட்டும் தான்
மிஞ்சியது
தாமரை இதழ்களை வரைந்திருக்கும்
அந்த முக்காலியில் அமர்ந்துதான்
அம்மா தினமும் மாட்டில் பால்
பீசுகிறாள்
மழைக் காலம் தழைக்கும்
கொழுந்தியா புல் தின்னும்
மாட்டு பாலில் கொழுப்புசத்து
குறைவாய் இருக்கும்
ஞானத்தை செலவழிப்பது போல்
பால் காசை செலவழிப்பேன் நான்

இரா. வெங்கடேஸ் குமார்

# விழி கவிதைகள்

வேலி இன்றி பேசும் ஒரு மொழிதான் பார்வை
இரு விழிகள் ஒரு சேர்த்து கோர்த்த கவிதை
இதழ் பேசும் மொழி வலி எனும் வாள்க்கூட
வீசும்
விழி பொழியும் வார்த்தை யாவும் மனதின் மொழி
பேசும்
உதட்டின் வார்த்தை கொண்டு கோவத்தீ அனல்
கக்கும்
விழியின் பேச்சில் தான் உணர்ச்சிகள்
தலைக்காட்டும்
இதழ் கொண்டு காதலை கேள்வியாய் கேட்டு
விடலாம்
இமை மூடி தான் காதல் சம்மதம் அறியலாம்
இதழ் பேசும் மொழியிலும் மேம்பட்டது
இமையின் பேச்சுகள்.



# கவிஞர் தமிழ் ஒளியின் பன்முகமும் படைப்பும்

ச.வாசுதேவன்

## முன்னுரை

மூடக்கருத்துக்கள் மூண்டெழுந்த காலகட்டத்தில் இருள் போக்கி ஒளி கொடுக்கும் தமிழ் கவிதை மரபில் தோன்றியவர் விஜயரங்கம் எனும் தமிழ் ஒளி. இருபதாம் நூற்றாண்டின் போக்கை மறுமலர்ச்சியாக்கி, மறுமலர்ச்சியின் சாரத்தை கவிதைகளின் வழி பரிணமிக்க வைத்த பாரதியின் பரம்பரையில் வந்த தமிழ் ஒளி மண்ணுக்கும் மக்களுக்கும் பாடுபட்டதோடு மட்டுமல்லாது சமத்துவத்திற்கும் தொழிலாளர் நலனுக்கும் குரல் கொடுத்தவர். தமிழ்ச் சூழலில் தமிழ் ஒளி குறித்த பதிவு என்பது பரவலாக இல்லை என்ற கருத்தை காத்திரமாகப் பதிவு செய்கிறார் பேராசிரியர் வீ.அரசு. பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த பாண்டிச்சேரி. இப்பகுதியில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் தமிழ் ஒளி. ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் ஏழை எளிய மக்களுக்கு எட்டாக்கனிய் இருந்த விடுதலை உணர்வை விதைத்துச் சென்றவர். பாரதிக்குப் பின் பாரதிதாசன் பாரதிதாசனுக்குப் பின் தமிழ் ஒளி என்று பாடம் கொள்வது எனது கருத்து என்கிறார் பேராசிரியர் வீ.அரசு. தமிழ் ஒளி பன்முகத் தன்மை கொண்டவராகத் திகழ்ந்தார். கவிதை, புனைகதை, சிறார் இலக்கியம், ஆய்வுப் பணி போன்ற துறைகளில் ஆழங்கால்பட்டவராக இருந்தார். பொதுவுடமை, திராவிடம் ஆகிய கட்சிகளில் தன்னை இணைத்துக் கொண்டு புரட்சி முழக்கம் செய்தார். தமிழகக் கவிஞர்களுள் தனக்கெனத் தனி இடம் பெற்ற கவிஞராகத் திகழும் தமிழ் ஒளி காலத்தை வென்று வாழ்கின்றார். அவரின் படைப்புகளும், காலத்தை வென்று நிற்கின்றன. தமிழ் ஒளி படைத்தளித்த படைப்புகளில் கண்ணப்பன் கிளிகள் எனும் படைப்பும் ஒன்று அப்படைப்பு தமிழ் ஒளி படைப்புகளில் மிக முக்கியமானது. கண்ணப்பன் கிளிகள் எனும் பனுவலின் ஆழத்தையும், கருத்துப் புலப்பாட்டையும் இக்கட்டுரை திறம்பட விளக்குவதோடு, தமிழ் ஒளியின் பன்முகத் திறத்தையும் வாழ்வியல் பணியையும் எடுத்துரைக்கின்றது.

## தமிழ் ஒளியின் வாழ்வும் பணியும்

கவிஞர் தமிழ் ஒளி கி.பி.1944 முதல் 1948 வரை போர்வாள் (திராவிட முன்னேற்றக் கழக வார இதழ்) திராவிட நாடு, குடியரசு போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து தனது புரட்சிகரமான கவிதைகளையும், செயல்பாடுகளையும் பதிவு செய்து வந்துள்ளார். தமிழ் ஒளி பாவலரேறு பாலசுந்தரனாரின் வகுப்புத் தோழர் ஆவார். 1948 – 49களில் கம்யூனிஸ்ட் பத்திரிகையான முன்னணி என்ற பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

1947 இல் நிலைபெற்ற சிலை என்ற குறுங்காவியம் படைத்தார். அதே ஆண்டில் வீராயி என்ற காவியம் படைத்தார். 1948 ல் கவிஞனின் காதல் எனும் குறுங்காவியமும், 1952 ல் மே தின ரோஜா எனும் குறுங்காவியமும் படைத்தளித்தார். தமிழில் முதன் முதலாக உழைக்கும் வர்க்கத்தைத் தலைமைப் பாத்திரமாக வைத்துக் காப்பியம் படைத்த முதல் படைப்பாளர் கவிஞர் தமிழ் ஒளி என பேராசிரியர் வீ.அரசு கூறுகின்றார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றிய பெருமை தமிழ் ஒளிக்கு உண்டு. 1966 இல் செ.து. சஞ்சீவி அவர்கள் தமிழ் ஒளி கவிதைகள் என்ற முதல் தொகுதியை வெளியிட்டார். இத்தொகுதியில் 45 கவிதைகள்

இடம் பெற்றுள்ளன. 1955 - 58 களில் காவியங்கள் பலவற்றை எழுதத் தொடங்கினார். தமிழ் ஒளியின் கடைசி கவிதைத் தொகுதியில் 120 கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

கவிஞர் படைத்த படைப்புகளில் விதியோ! வீணையோ! என்ற காவியமும், மாதவி காப்பியமும் இசை, நாடகம் பற்றியதாகவும் சிலப்பதிகாரத்தின் தாக்கத்தைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. தே.பொ. மீனாட்சிசுந்தரனார் சிலப்பதிகாரத்தின் கானல் வரியைப் பல நிலைகளில் ஆய்வுக்கு உட்படுத்தி உண்மைப் பொருளை உலகுக்கு அறியச் செய்தார். அவரைப் போலவே கானல் வரி குறித்த ஆய்வினை கவிஞர் தமிழ் ஒளி மேற்கொண்டு சிறந்த ஆய்வு முடிவினை சமூகத்திற்கு எடுத்துக்காட்டினார். சிலப்பதிகாரத்தைப் பாடி ஆடக் கூடிய இசை நாடகம் என்று பதிவு செய்கிறார். கவிஞர் படைத்த படைப்புகளை 40 ஆண்டுகள் பாதுகாத்துப், பின்பு அதனை பதித்து வெளியிட்ட பெருமை பெரியவர் செ.து.சஞ்சீவி அவர்களுக்கே உரியது. தமிழ் ஒளி இன்னும் பல படைப்புகளைப் படைத்திருக்கிறார். அவை., புத்த காவியம் (முதல் காண்டத்தோடு நின்று போனது) கோசலைக் குமாரி, மாதவி காப்பியம் (மாதவி காப்பியத்தில் மாதவியைத் துறவியாக்கி உள்ளார்), தமிழர் சமுதாயம், சிலப்பதிகாரம் நாடகமா?, திருக்குறளில் கடவுள் தன்மை, திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகரைப் பற்றி விமர்சனம் செய்துள்ளார். சமஸ்கிருத மொழி நம்முடைய மரபில் எப்படி எல்லாம் வந்து சேர்ந்தது என்பதைத் தமிழர் சமுதாயம் என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். 7,8 ஆம் நூற்றாண்டுகளில் வைதிக புராண கடவுள் மரபு சமஸ்கிருத மொழியின் ஊடாக வருகின்றது என்பதையும் ஆராய்ந்து உரைக்கிறார். தமிழரின் இசை மரபு ஒழிக்கப்பட்டது. பண் மரபு கர்நாடக மரபாக மாறுப்போனது என்று நுண்மான் நுழைபுலத்தோடு பதிவு செய்துள்ளார். தமிழரின் சதிராட்டம், பரதநாட்டியம் ஆக்கப்பட்டது. தமிழ் - கலை – பண்பாடு – நாகரிகம் - இலக்கியம் - மொழி ஆகியவற்றின் தனித்தன்மை குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். வன மலர்கள் எனும் தொகுப்பில் 105 கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் சிறார் இலக்கிய வகையில் அமைக்கப்பட்டது. தமிழ் ஒளி குறித்து அச்சு ஊடகத்திற்கு அதிகமாகப் பங்களிப்பு செய்தவர் வ.ராமசாமி ஆவார். 1962 ல் பாடு பாப்பா பாடு எனும் சிறார் இலக்கியத் நூல் தொகுதியை வெளியிட்டார். 1952 – 53 ல் சாக்கடைச் சமுதாயம் (8 கதைகள் கொண்ட சிறுகதை நூல்) ஆகியவற்றைப் படைத்தளித்தார். 1947 - 55 களில் கவிதை எழுதத் தொடங்கிய தமிழ் ஒளி மிகப் பெரிய கவிஞன், அவனுக்கு நிகர் அவனே எனும் கருத்தைச் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வீ.அரசு தெரிவிக்கின்றார். காவியங்களை உருவாக்கிய கலைஞன் தமிழ் ஒளி என்றும் கூறுகிறார். தமிழ் ஒளியின் வாழ்வில் பலதரப்பட்ட துன்பங்கள் வந்த போதிலும் நாட்டின் விடுதலைக்கும் மக்களின் வாழ்வியலுக்கும் பாடுபட்ட உன்னதக் கவிஞனாக விளங்கியவர். தமிழ்நாடு முழக்கம் எனும் கவிதையில் தமிழனுக்கே தமிழ்நாடு என்ற வீர வரிகளை அள்ளித் தெளித்து தமிழ் மக்களுக்கு விழிப்பூட்டி வேட்கையைத் தூண்டியவர்.

தமிழ்நாடு தமிழனுக்கு....

இதை தடுக்க யார் செய்தாலும் கேடு

சமர் செய்து வீழ்த்துவீர் இன்றே

மேலும் சாடும் திறல் கொண்டு நின்றே!

பிரிந்து வாழும் உரிமை எங்கள் பிறவி தந்த உரிமையாம்

பிறர் மறுக்க நியாயம் இல்லை முரசு தன்னைக் கொட்டுவோம்

இருந்திருந்து பொறுமையாக சிறுமை வாழ்வை எய்தினோம்

இறையைத் தேடும் சிங்கமாக எழுந்து இருந்து வருகுவீர்!

என்ற ஒரு கவிதை தமிழ்நாட்டையே திரும்பி பார்க்க வைத்த மகாகவிதை என்றே சொல்லலாம். 1945 ஆம் ஆண்டு பொதுவுடமை கட்சியிலே சேர்ந்தார். 1948 - 1952 இவ்வாண்டுகளில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் ஜனயுகம் என்ற பத்திரிக்கையைத் தொடங்கித் தொடர்ச்சியாக நடத்தி வந்தார். இப்படிப் பல பன்முகத் தன்மைகளைக் கொண்டவராக திகழ்கின்றார். அவரின் வாழ்விலும் பணியிலும் அயராது உழைத்துக் கொண்டிருந்த உத்தமராய் விளங்கியவர் கவிஞர் தமிழ் ஒளி.

### தமிழ் ஒளியின் கண்ணப்பன் கிளிகள்

கணவனை இழந்த கண்ணகியின் துயரை வெளியிட்ட சிலப்பதிகாரத்தைப் படித்து உள்ளத்தைப் பறி கொடுத்தவர் தமிழ் ஒளி என்பதைக் கண்ணப்பன் கிளிகள் எனும் கதைப்போக்குக் காட்டுகிறது. இந்நூலின் நடை இருபதாம் நூற்றாண்டு நடையானாலும், சொல்லும் பாணியும் கவிதைச் சந்தமும் பல இடங்களில் சிலப்பதிகாரப் பாடல்களை நினைக்கச் செய்கின்றன என்கிறார் வாகீச கலாநிதி கி.வா.ஜெகநாதன். காதலில் தோல்வியுற்று, வாழ்விலும் தோல்வியுற்று காச நோய்க்கு இரையாகி இளம் பருவத்திலே வாழ்வை நீத்த அவருடைய உள்ளத்தின் சோகமே இந்தக் கதையாக வடிவெடுத்ததோ! என்னவோ! யார் அறிவார் என்கிறார் கி.வா.ஜ. தமிழ்க் கவிதைத் துறையில் புதிய வழித்தடங்களைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் பாரதி பாரதிதாசன் வழிவந்த கவிஞர் தமிழ் ஒளி என்கிறார் கண்ணப்பன்

கிளிகள் நூலின் பதிப்பாசிரியர் அமரர் செ.து.சஞ்சீவி.

40 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து இறந்து போனவன் மக்கள் கவிஞர் தமிழ் ஒளி. அவரின் உன்னத படைப்புகளில் கண்ணப்பன் கிளிகள் தனித்தன்மை வாய்ந்தவையாக விளங்குகின்றன. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் குயில் பாட்டுக்குப் பின்னர் தமிழ் மரபில் தோன்றிய மிகச்சிறந்த உருவ காப்பியம் என்ற பெருமை இந்நூலுக்கு உண்டு என்கிறார் செ.து.சஞ்சீவி. உணர்ச்சிமயமான பொருள் பொதிந்த பாடல்களால் உருவாகியுள்ளது. இந்நூலின் அருமை கருதி 1971-1973 ஆண்டுகளில் தில்லிப் பல்கலைக்கழகமும், 1978 – 80 ஆண்டுகளில் சென்னை லயோலா கல்லூரியும், இளங்கலை மாணவர்களுக்குப் பாடநூலாக இதனை ஏற்றுச் சிறப்பித்தன. கிளிகளை மையமிட்டு கதாபாத்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆண்கிளி குணம் என்றும், பெண்கிளி குற்றம் என்றும் குறிக்கப் பெறுகின்றது.

ஆண்கிளி பெண்கிளி இரண்டும் இல்லத்தில் கணவன் மனைவி எப்படி தன் வாழ்வை நடத்திச் செல்வார்களோ அப்படி தங்களின் வாழ்க்கையைச் சிறப்பாக நடத்திச் செல்கின்றன என்ற கண்ணோட்டத்தோடு எழுதுகிறார் கவிஞர் தமிழ் ஒளி. இரண்டு கிளிகளுக்கும் சண்டை ஏற்பட்டு கிளி வளர்ப்பவனால் (கண்ணப்பன்) பிரிக்கப்படுகின்றன. குற்றக்கிளி ஒரு கூண்டிலும், குணக்கிளி ஒரு கூண்டிலும் அடைக்கப்படுகின்றன. கிளிகளின் பிரிவைச் சோகத்தோடு எழுதிச் செல்கிறார் கவிஞர்.

பிரிந்தன இரு கிளிகள் - அவை
பிரிந்தன சொறிந்தன நீர் விழிகள்
எறிந்தன இரு கிளிகள் - அவை
இடறின இடறின இடரினவே!

மகாகவி பாரதியை நினைவுபடுத்துகின்றன. கண்ணப்பன் கிளிகளுக்கு உணவு கொடுக்கிறான். இந்த காட்சியை மாற்று கண்ணோட்டத்தில் படைக்கிறார் கவிஞர். கிளி பேசுவதாக பதிவு செய்கிறார். சொல்வதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பது பழமொழி, ஆனால் இக்காவியத்தில் சொல்லாததையும் கிளி செய்கின்றது. கண்ணப்பனிடம் கிளி தானே பேசுகிறது. அக்காட்சியைக் கவிதை வடிவில் தருகின்றார் தமிழ் ஒளி.

பால் எனக்கு எதற்கு கண்ணப்பா - பெண்
பால் எங்கே சொல்லு நீ கண்ணப்பா!
கூட எனக்கு எதற்கு கண்ணப்பா - கண்
கூட எங்கே சொல்லு நீ கண்ணப்பா!...

என்ற கவிதை ஆண்கிளியின் பிரிவாற்றாமையைத் தெரிவிக்கின்றது. சங்கம் தொட்டு சமகாலம் வரை காதலுக்குக் கரை என்பது கிடையாது. காதலும் வீரமும் தமிழரின் இருகண்கள். வாழ்வியலின் பகுப்பை வகுத்துக் கொடுப்பது காதலில் தீர்மானிக்கப்படுகின்றது. காதல் ஆறறிவு மனிதன் முதல் ஓரறிவு உயிர் வரை எல்லாவற்றுள்ளும் இருக்கின்றது. கண்ணப்பன் மனதில் கிளியின் பேச்சுக் காதலை பதிய வைக்கிறது. அதனைக் காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

கடலை அலை மறைக்குமோ - இளம்
கதிரை சுடர் மறக்குமோ
உடலை உயிர் மறக்குமோ - பின்
உலகில் உயிர் இருக்குமோ!

என்ற கிளியின் பேச்சு நீண்டு கொண்டே செல்கின்றது. சங்க கால பெண்ணொருத்தி தலைவன் காதலை முன்னிறுத்தி ஊரெல்லாம் தூங்கும் போது அவள் ஒருத்தியின் நினைவு மட்டும் அவனையே தேடிக் கொண்டிருப்பது போல பெண் கிளியின் நிலையும் ஆண்கிளியைத் தேடுவதாகவே இருக்கின்றது.

கடலும் உறங்கவில்லை - அலை
காற்றும் உறங்கவில்லை
படரும் இருளிடையே - கிளிப்
பாவை உறங்கவில்லை!...

என்ற வரிகள் சோகத்தின் உச்சத்தை படம் பிடிக்கிறது. கிளியின் காதலை மட்டுமல்லாது கிளியின் பண்பாட்டையும், விடுதலையையும் இக்காப்பியம் பதிவு செய்கின்றது. கலிங்கத்துபரணியின் கடை திறப்பை நினைவுபடுத்துகிறது. ஒரு பாடல்.,

இணையினை யாயவை இயங்கிடவே
இரவென பகலென முயங்கிடவே
பிணை பிணையாயவை பறந்திடவே
பிறை பிறை ஆயவை பிறந்திடவே!
இப்பாடல் கலிங்கத்துப்பரணியில் உள்ள
சுரி குழல் அசைவுற அசைவுற
துயில் எழு மயிலென மயிலென
பரிபுர ஒலி எழ ஒலி எழ
பனிமொழி அவர்கடைத் திறமினோ!

இந்தப் பாடலை நினைவுபடுத்துகிறது. பண்பாடு நிறைந்தது காதல் மட்டும் தான், அந்தக் காதலில் விழுந்தது மனம் தான், மனதைத் நிறைத்தது கவிதை தான் என்று சொல்லும் அளவிற்கு கிளிகள் பேசும் வார்த்தைகளைக் கவிதை எனும் நூலிழையால் கோர்த்துத் தமிழன்னையின் தோளில் சேர்த்திருக்கிறார் கவிஞர் தமிழ் ஒளி. கண்ணப்பனை நோக்கிக் கிளி சொல்கிறது.

ஆண் கிளியை நீ விரும்பி
ஆசையுடன் வைத்திருந்தாய்
மான் கிழி மடிந்த உடன்
மறந்து விட்டாய் நீ மனிதன்!...

இயல்பாய் இருந்த ஒருவன் இறந்து போய் விட்டானானால் இரண்டொரு நாளில் அவனை மறந்து போகின்ற மானுட சமுதாயத்தில் பிறந்த நீயும் ஒரு மனிதன் தானே உனக்கு எங்கே தெரியப் போகிறது எனது நிலை என்று ஒரு கிளி மனிதனுக்கு புத்தி கூறுவதைப் போல கண்ணப்பன் கிளியிலே தமிழ் ஒளி அமைத்திருப்பார். கிளிகள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளையும் மனதில் தாங்கிக் கொண்ட கண்ணப்பன் கிளியைக் கூண்டை விட்டுத் திறந்து விட்டார். கிளி வெளியே பறந்து சுதந்திரக் காற்றை சுவாசித்தது அதனை.,

கிள்ளை பறந்தது பிள்ளை பறந்தது
இளம் பிறை வந்த நிறம்
வெள்ளை பறந்தது பச்சை பறந்தது
விதவித அந்தி நிறம்!

கவிதைச் சுவையில் பாடுகின்றார். பறந்து போன கிளியைப் பார்த்து மனமுடைந்து கண்ணப்பன் பேசுகின்றான் மனித வாழ்க்கை எப்படி எல்லாம் மாறும் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

எனினும் உன் அன்பே சிறந்ததம்மா
இருளிலும் என்னுள்ளம் இருண்டதம்மா!
என்ற வார்த்தைகளைச் சொல்லி.,
நின்ற மழைச் சிறு துளிகள்
உதிர்ந்தது கண்ணீர் நித்திரங்கள்
கண்ணீர் சிதறி நிறைந்ததம்மா!

காதலன் காதலியைப் பிரித்த வருத்தத்தைக் கண்ணீர் விட்டு ஆற்றிக் கொள்பவனாய் கண்ணப்பன் பெண்கிளிடம் கூறுகிறான். பெண்கிளி விண்ணில் பறந்து தன் இணையோடு சேர்ந்தது. போய் வா என்று சொல்லி தன் மனதை தானே ஆற்றுப்படுத்திக் கொண்டான் கண்ணப்பன். ஒரு கிளியை மையப்படுத்தி மனித சமுதாயத்திற்கே நீதி புகட்டும் நோக்கில் கண்ணப்பன் கிளிகளைப் படைத்துள்ளார் கவிஞர் தமிழ் ஒளி. கவிஞரின் படைப்புகளில் சாதி, தீண்டாமை ஒழிப்பு ஆகிய கருத்துக்களே வெளிப்படுகின்றன என்கிறார் இரா. இராஜாமணி. கவிஞர் தமிழ் ஒளி தமிழ் வானத்தில் விளங்கிய ஒரு விண்மீன்! அதன் மங்காத கவிதை ஒளியைப் போற்றுவோமாக எனப் போற்றுகிறார் டாக்டர் மு.வ

## முடிவுரை

பண்பாட்டுப் படைப்பு வெளியில் தடம்படித்தவர்களுள் கவிஞர் தமிழ் ஒளியும் ஒருவர். புதுச்சேரி மாநிலத்தில் புகழ்பெற்றவராக விளங்கினாலும் ஒட்டுமொத்த மனித சமுதாயத்திற்கே தீப்பிழம்பானக் கவிதைகளைத் தந்த மகாகவிஞன் என்று சொல்லலாம். பாவேந்தரின் தலைமை மாணாக்கனாக விளங்கிய தமிழ் ஒளி தன் ஆசிரியரைப் போலவே தானும் பட்டொளி வீசி பறப்பவராக திகழ்கின்றார். அவரின் நூற்றாண்டு சமகாலத்தில் கொண்டாடப்பட்டாலும் தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ் ஒளி குறித்த பதிவுகள் இன்னமும் பரவலாக்கம் அடையாமல் உள்ளது. மாணவர்கள் தமிழ் ஒளியைப் பற்றி அதிகம் கற்றுக் கொள்ளும் வகையில் அரசுப் பாடத்திட்டங்களில் தமிழ் ஒளியின் படைப்புகளைப் பாடமாக வைக்க வேண்டும். தமிழ் ஒளியின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஒளிக்கு மார்பளவு சிலை அமைக்க வழிவகை செய்தார் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின். தமிழ் ஒளி தமிழ்க் கவிதை மரபின் தூணாக விளங்கியவர். அவரின் தமிழ்ப்பணி அளப்பரியது. அவர் எழுதிய படைப்புகள் போற்றுதலுக்குரியது. கருத்தாழம் கொண்டது. கண்ணப்பன் கிளிகள் எனும் காவியம் அவரின் படைப்பிலே முத்தாய்ப்பான ஒன்றாகும். ஐந்தறிவு உயிரினங்கள் ஆறறிவு மனிதனுக்கு புத்தி புகட்டுவதைப் போல அந்நூலைப் படைத்திருப்பார். கண்ணப்பன் கிளிகளை வைத்து மானுட சமுதாயத்திற்கு சொல்லவருவது என்ன வென்றால், வாழ்வில் கணவன் மனைவிக்குள் ஆயிரம் சண்டைகள் இருக்கலாம் அதனை அவர்களே சரிசெய்து கொள்வார்கள் ஊடுறுவிச் செல்லும் நபர்களால் இருவருக்கும் இருக்கும் அன்புச் சண்டை ஆத்திரச் சண்டையாகி இருவரும் வாழ்நாள் முழுவதும் பிரிய நேரிடும் அப்பிரிவிற்குக் காரணமாவோரைப் போல இம்மண்ணில் பாவம் செய்தவர்கள் இல்லை எனும் அறத்தை இக்கட்டுரை நிலைநிறுத்துகிறது.

## பார்வை நூல்கள்



அரசு.வீ., தமிழக முப்பெரும் கவிஞர் மரபில் தமிழ் ஒளி (தமிழ் மரபுக் கவிதை), தடாகம் வெளியீடு, பதிப்பு :

தமிழ் ஒளி கவிஞர்., கண்ணப்பன் கிளிகள், புகழ்ப் புத்தகாலயம், பதிப்பு : 2001 (மூன்றாம் பதிப்பு)

செயங்கொண்டார்., கலிங்கத்துப்பரணி,

சாமிநாதையர்.உ.வே., (உ.ஆ)., குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா.நூல் நிலையம், பதிப்பு : 2020 (எட்டாம் பதிப்பு)

இராஜாமணி.இரா., கவிஞர் தமிழ் ஒளி (கட்டுரை), உலகத்தமிழ் – அக்டோபர் 2023,



# எஸ்.பொவின் “தேர்” சிறுகதை திறனாய்வு

**ஈழத்து இலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை எஸ்.பொன்னுத்துரை(எஸ்.பொ)**

**கனகசூரியம் யோகானந்தன், திருகோணமலை**

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை எஸ்.பொன்னுத்துரை(எஸ். பொ)வட புலம் யாழ்ப்பாணம் நல்லூரில்

பிறந்தவர்.பல்துறை ஆற்றல் கொண்ட இவர் சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு,நாடகம் என சகலவற்றிலும் தனி முத்திரை பதித்தார்.

சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் பட்டப்படிப்பு மேற்கொண்டவர்.பன்மொழிப்புலமை

கொண்டவராக விளங்கியதோடு, மட்டக்களப்பு, நைஜீரியா போன்ற இடங்களில் ஆங்கில ஆசிரியராக தொழில் புரிந்தவர்.நெஞ்சுரம், துணிச்சல் ஆளுமை கொண்டவர். இலக்கிய உலகில் கேலியாக 'கலகக்காரர்''என்று அழைக்கப்பட்டார்.''சடங்கு '' தீ''போன்ற நாவல்களை இலக்கிய உலகிற்குத் தந்தவர்.தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் ''மித்திர''பதிப்பகத்தைத் தொடங்கி, ஏராளமான நூல்களை வெளியிட்டார்.

''வரலாற்றில் வாழ்தல்'' என்னும் 2000 பக்கங்கள் கொண்ட சுயசரிதையை எழுதி, இலக்கிய உலகில் புதிய பதிவினை மேற்கொண்டவர்.மகாவம்சத்தை தமிழில் மொழிபெயர்த்த பெருமை இவரையே சாரும்.இடதுசாரியச்சிந்தனையோடு,தளைய சிங்கம் அவர்களோடு இணைந்து பணியாற்றினார்.இவர் தனது எழுத்துக்கள் மூலம் எல்லோராலும் நன்கு அறியப்பட்டதோடு, ஈழத்து ஜெயகாந்தன் எனப் போற்றப்பட்டார்.

''வீ''என்ற சிறுகதைத் தொகுப்பில் இருந்து ''தேர்''என்னும் சிறுகதை தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

இக்கதையானது சமூகவமைப்பினையும், குடும்ப உறவினரும் படம் பிடித்துக் காட்டுகிறது.கடந்தகால வாழ்க்கை பிள்ளைகள் பற்றிய குடும்ப விடயங்கள், கொண்டமைவதோடு, பிரதான பாத்திரத்தின் மனவோட்டம் கதையில வந்துபோகும் முன்னோட்டம், பின்னோட்டம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

மனித வாழ்வின் தொடக்கத்திலே கூட்டு வாழ்வின் தேவை உணரப்பட்டது. மனிதன் சமுதாய விலங்கு என்றவகையில், அவனுடைய அடிப்படைச் செயல்களான உணவுண்ணுதல், மூச்சுவிடல், இயங்குதல் முதலிய செயற்பாடுகள் சிலவற்றை மாத்திரமே அவனால் தனிமனிதனாக நின்று செயலாற்ற முடிந்தது.ஏனைய செயல்களைச் செய்வதற்காக ஒருவர் மற்றவரோடு, சேர்ந்து கூட்டாகச் செயல்பட வேண்டியுள்ளது. சேர்ந்து வாழ்தல் என்பது கட்டாயமானது என அனைவராலும் உணரப்பட்டது.உலகம் முழுவதும் பரவிவாழ முற்பட்ட மனிதர்களிடத்தே திருமணம், குடும்பம், உறவுமுறை, சமூக ஒழுங்கு போன்றவற்றில் இன்றுவரை ஒத்த தன்மை ஏற்படவில்லை.சிக்கலான சமூக உறவுத்தொடர்புகளையே சமூகம் என்கின்றனர்.

குடும்பம் என்பது எல்லாச் சமூகங்களிலும் உள்ள, அடிப்படை அமைப்பு அதிலிருந்துதான் உறவு தோன்றுகிறது.சமுதாயம் என்பது,

உறவு முறைகளால் பின்னப்பட்ட வலைபோலுள்ளது.''தேர்''ஓடுவதற்கு அச்சாணி தேவையாக உள்ளது. இதைத்தான் ''அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாதென்பர்.இதனுடைய

மையக் கருவாக புது வருடத்தில் யாழ்ப்பாண வீட்டில் ஒன்றுகூடும் குடும்பத்தைப் பற்றியது. இக்கதையில் பாத்திரங்கள் ஏராளமாக அமைந்திருந்தாலும் கதைப் பின்னல் சிறப்பாக அமைந்துள்ளது.பிரதான பாத்திரம் முகத்தார்(ஆறுமுகம்) இவருடைய மனைவி பார்வதிப்பிள்ளை.இவர்களின் பிள்ளைகள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வாழுகிறார்கள்.

புதுவருடத்தைக் கழிப்பதற்காக,தந்தையின் வீட்டிற்கு வருகை தந்துள்ளனர்.கதையாசிரியரே கதை சொல்லியாக மாறிவிடுவதைக் காணலாம்.

''தேர்''என்பது குறியீட்டு வடிவமாக குடும்பத்தைக் குறிக்கிறது.இதுவே குடும்பத்தின் இயக்க சக்தியாகப் பார்க்கப்படுகிறது.இக்கதையின் மூலமாக எஸ்.பொ சமுதாயச் சிக்கல்கள் தனிமனித நடவடிக்கைகளால் ஏற்படுத்தப்படும்

வேண்டத்தகாத செயல்கள் போன்றவற்றை கூறுவதோடு, சிலவேளைகளில் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் தீர்வுகளாக காட்டுகிறார்.குடும்பத்தேர் இயங்குவதற்கு அச்சாணி தேவைதான்.என்பதனையும் மறைமுகமாக அச்சாணியாக முகத்தார் காட்டப்படுகின்றார். இவரே தேரை இழுத்துச் செல்கிறார்.கதையானது மனவோட்டத்திற்கேற்ற வகையில் நகர்ந்து செல்வதைக் காணலாம்.

முகத்தாரின் கடந்தகால வாழ்க்கை குடும்ப விடயங்கள் விரிந்து செல்வதைக் காணலாம்.இவருடைய பிள்ளைகளாக, மூவர் ஆண்களும்மூவர் பெண்களுமாக, அறுவர் காட்டப்படுகின்றனர்.

மூத்தவன் சுப்பிரமணியம் கொழும்பில் வாழ்கிறான். இரண்டாவது மகன் குமாரசாமி கிறித்தவ பெண்ணை மணமுடித்து, கொழும்பில் வாழ்கிறான்.புதுவருடத்திற்காக யாழ்ப்பாணம், குடும்பத்தோடு வந்திருக்கிறான். திருமணவயதில்

தங்கை இருப்பதையும் மறந்தது காதல் மணம் புரிந்துள்ளமையானது முகத்தாருக்கு இவன்மீது வெறுப்பை ஏற்படுத்திய இருந்தாலும் மனதைக் கட்டுப்படுத்தி சமாளித்துக் கொள்கிறார்.கடைசிமகன் மனோகரன் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம்மொன்றில் வேலை செய்கிறான்.தனது சகோதரியின் மகளைத் திருமணம் செய்துவைக்க முகத்தார் ஆசையோடு காத்திருக்கிறார்.

மூத்த மகளாகிய சளந்தரம் புதுவருடத்திற்கு, கணவனின் உறவுகளின் வருகைக்காக காத்திருந்த போதும்கூட, தனது மகளை அனுப்பி வைத்துள்ளார்.

குடும்பத்திலே அன்பு நிறைந்த பாத்திரம்மாகவும், பொறுப்பு நிறைந்த பாத்திரம்மாகவும் விளங்குகிறாள். தனது பிள்ளைகளை முகத்தார் அன்புடன் வரவேற்பதும், மகிழ்ச்சி அடைவதும் அவர்களுக்காக காய் கறி வாங்கி வருவதும் தமிழர் பண்பாட்டின் அம்சமாக தனது கையினால் ''கை விஷேசம்'' கொடுப்பதும் கதையாசிரியர் அழகாக சித்திரித்துக் காட்டுகிறார். இந்தவேளையில் இறந்து போன தனது மனைவியையும் அவளுடைய அன்பையும் மனவோட்டம் மூலமாக நினைவு படுத்திக் கொள்வது சற்று நெகிழ்ச்சியை வாசகர் மனதில் ஏற்படுத்தத்தான் செய்கிறது.பெருநாளை யாழ்ப்பாண மக்கள் வரவேற்பதும்,அதனை

உறவுகளோடு சேர்ந்து கொண்டாடி மகிழ்வதையும் கதையாசிரியர் மனக்கண்முன்னே படம் பிடித்துக் காட்டுகிறார்.

வருடப் பிறப்பு நாளில் முகத்தாரின் நண்பரான ஐயம் பிள்ளை கொடுத்த சாராயத்தை நண்பர்களோடு சேர்ந்து குடிப்பதில் ஆனந்தம் அடைகிறார்.

இக்கதையில் வரும் மொழிக்கையாளுகை அதுவும் யாழ்ப்பாணத் தமிழில் குறிப்பாக பேச்சுத் தமிழில் வருவது, அலாதியானது.பாத்திரங்களை இயல்பாகவே வார்த்தெடுத்த ஆசிரியர் கதையை நகர்த்திச் செல்வது சிறப்பு எனலாம்.

கதைத்தலைப்புக்கும் பொருத்தமான வகையில் ஏனைய பாத்திரங்கள் பிரதான பாத்திரத்தோடு இணைந்து செல்லும் போக்கையும் காணலாம். ஆரம்பத்தில் வர்ணனைகள் ஓடு,கதை நகர்ந்து செல்வதைக் காணலாம்.

கதையின் பிரதான பாத்திரத்திரமான முகத்தார் வாசகர்களை உடன் அழைத்துக் கொண்டு பயணிக்கிறார் நித்திரை விட்டு எழுந்திருப்பதோடு,கதை ஆரம்பமாகிறது. மகன் வாங்கி வந்த இஞ்சி பிஸ்கட்டினை மெல்ல மெல்ல மென்று சாப்பிடுகிறார்.யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ் மக்களின் வாழ்வியலின் வெட்டு முகம் போன்றவை வாசகர்களை யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்திச் செல்ல முற்படுவதைக் காணலாம்

கதையாசிரியர் எஸ்.பொ அவர்கள் எங்கெங்கெல்லாமோ தொழில் நிமித்தம் சென்று வந்திருந்தாலும் யாழ்ப்பாணத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை முழுமையாகக் காணமுடிகிறது.ஈழத்திலும்சரி தமிழகத்திலும்சரி புனைகதை இலக்கியம் 'என்றவடிவம் தோற்றம் பெற்ற போதும், குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் அபிலாசைகளின்

வெளிப் பாடுகளின் சாதனமாகவே தொழில் பட்டது எனலாம்.இலக்கியம் என்பது படைப்பாளனுக்கும் வாசகனுக்கும் மனநிறைவு தருவதாக அமைந்திருந்தது. படைப்பாளன் தான் பெற்று அனுபவித்த இன்ப-துன்பங்களை அப்படியே வாசகனுக்குக் கொடுக்கும் போது மனநிறைவடைகிறான் . சிறுகதையானது, வாசகனுக்குச் சீர்திருத்தக் கருத்துக்களை கொண்டு

சேர்ப்பதோடு எழுத்தாளனைப் பற்றிய உன்னத உணர்வினை ஏற்படுத்திவிடுகிறது.''தேர்''என்ற சிறுகதை யானது குடும்பத்தையும், அதில் வருகின்ற சிக்கல் நிறைந்த பலவித முடிச்சுக்களையும் அப்படியே அவிழ்த்து விடுகிறது.

சிறுகதைகள் பாமர மக்கள் படிப்பதற்காகவும் ஒருவர் படித்துச்சொல்ல மற்றவர்கள் அதனைக் கேட்டு இரசிப்பதற்குமான கருவியாக அமைவதைக் காணலாம்.சிறுகதைகள் நாவல்களை

முந்திக்கொண்டு விரைவாகவும் வேகமாகவும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளன.இந்தியப் பத்திரிகைகளில் எழுதி வந்த ஈழத்து எழுத்தாளர்கள் ''ஈழகேசரி''பத்திரிகை வந்தது முதலாக தமது படைப்புக்களை ஈழகேசரியில்

படைக்கத் தொடங்கினார்கள் இடது சாரியை சிந்தனை கொண்ட எஸ்.பொ முற்போக்கு எழுத்தாளர்களுக்கு எதிரான போக்கினைக் கொண்டு செயற்பட்டார். நற்போக்கான எழுத்தாளராக தன்னை மாற்றிக் கொண்டார்.

தேர் என்னும் சிறுகதை மூலமாக ஒரு தந்தையின் பக்கங்களையும், வேதனைகளையும்,கவலையினையும் கண்டு கொள்ளலாம்.திருமணமாகாத பெண் பிள்ளைகளின் திருமணத்தின் பின்னர்தான் ஆண் சகோதரர்கள் தாம் திருமணம் செய்து கொள்ள வேண்டும். என்பது தமிழர்களின் எழுதப்படாத விதியாகும். இது மாறுபடும் போது குடும்பங்களில் சிறுசிறு சஞ்சலங்கள் ஏற்பட்டுவிடுவதுண்டு எஸ்.பொ அவர்கள் தனது எழுத்துக்களை வெளிப்படையாகக் கையாளும் தன்மை கொண்டவர்.யார் எதைப்பற்றி சொன்னாலும் அதைப்பற்றி அவர் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. இவருடையபாத்திரங்கள் எப்போதும் சமூகத்தில் உறவாடியும்,நடமாடியும் செல்வதைக்காணலாம்.

முகத்தார் ''எல்லாம் அளித்தபடி தான் நடக்கும்''மகன் வேதக்காரப் பெண்ணை திருமணம்செய்தமை சங்கடத்தை ஏற்படுத்தி இருந்தாலும் தனக்குள்ளே''வேதக்காரி என்றால் என்ன''ஊழ்ப்பானையில் விழுந்தவர்கள் ஏராளம்''என ஆறுதல்பட்டுக் கொள்கிறார்.கதை முழுமையாக குடும்பப் பாங்கானதாக அமைந்து செல்வதைக் காணலாம்.

இவருடைய எழுத்துக்கள் இவரை கடைசிவரை தமிழ் உலகின் மாபெரும் இலக்கிய ஆளுமையாகவே காட்டிச் செல்கிறது.

''தேர்'சிறுகதையின் பொருளைப் போலவே, வடிவமும் கனகச்சிதமாகவை எஸ்.பொ அமைத்திருப்பார்.எந்தச் சிறுகதையாக இருந்தாலும் ஆரம்பம்

நடு-முடிவு என மூன்று கட்டங்களாக அமைந்திருப்பது கதைக்குச் சிறப்பாக அமைதல் வேண்டும்.இது பற்றிய கருத்து முரண்பாடுகள் இலக்கிய உலகில் இல்லாமலில்லை.கிராமிய வாழ்க்கைமுறை எழுத்தாளனின்

அடிமனதின் ஆழத்தில் நிறைந்து காணப்படுகிறது. இவருடைய''சடங்கு '' நாவலானது , யாழ்ப்பாண சமுதாய அமைப்பை, வாழ்க்கைத் தவிப்பை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.இவருடைய எழுத்துக்களில் புதுமைப்பித்தன் பல பரிசோதனைகளைச் செய்தது போல இவரும் பல பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டுள்ளதைக் காணமுடிகிறது.தனது எழுத்துக்களை நேசித்த இவர் கர்வம்மிக்க ,எழுத்தாளுமை கொண்டவராகவே விளங்கினார்.இளம்பிறை ரகுமானோடு,இறுதிவரை நட்பால் இணைந்திருந்தார். ஈழத்துப் பேராசிரியர்கள் சிலரோடு கடைசிவரை முரண்பட்ட போக்கினைக் கொண்டிருந்தார்.


இவருடைய இலக்கிய வடிவங்களில் அடக்குமுறையைத் தகர்த்தெறிந்து வெளி வருவதைக் காட்டியிருப்பார் தமிழக எழுத்தாளர்களாலும் வாசகர்களாலும் எஸ். பொ நன்கு அறியப்பட்டவராக விளங்கினார்.

இவருடைய ''மாயினி''என்னும் நாவல் அரசியலையும் புனைவுகளையும் இணைத்துச்செல்வதாகவே அமைந்திருந்தது.

''அடையமுடியாத இலட்சியக் கனவுகளின் பெருமூச்சுக்களே சிறுகதைகள்''என்று கு.ப.ராவின் கூற்றுக்களை மெய்ப்பிக்கும் வகையில் ஈழத்துச் சிறுகதைகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

எஸ்.பொ கடினமான விடயங்களை மெதுவாகவே சொல்லிச் செல்லும் பாங்கு கொண்டவராக விளங்குகிறார். இவருடைய இறுதி காலமானது அவுஸ்ரேலியாவில் கழிந்து போனது எனலாம்.அவுஸ்ரேலியாவில் வாழ்ந்த

போதும் தனது எழுத்து முயற்சிகளில் ஆர்வம் காட்டியே வந்தார்.2014 வரை தமிழ் கூறும் நல்லுலகில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளராக வாழ்ந்து தனது 82 ஆவது வயதில் இவ்வுலகிற்கு விடை கொடுத்துச்சென்றார். இவர் மறைந்து போனாலும் இவருடைய எழுத்துக்கள் சாகாவரம் பெற்றவையாக விளங்கி வருவதைக் காணலாம்..



Dr ஜலீலா முஸம்மில், இலங்கை

# ஈர்ப்பின் பிறப்பு

இந்த உள்நாட்டுப் போர்
எப்போது முடிவுக்கு வரும்?
மௌனத்தோடு சண்டையிடுவது முடியாது
இருக்கிறது..
தெரிந்த விதிகள் எல்லாம்
பிறழ்ந்து கிடக்கின்றன
சொல்ல நினைப்பதெல்லாம் இறந்து கிடக்கின்றன
யார் யாரை வெல்ல?
யாரோவென விதி சொல்ல..
உடலங்கள் வெறுங்கூடுகள்
ஆன்மா ஒடுங்கி முனகுவது
ஓய்வதே இல்லை
தீராத தீ இது
தேய்மானமான சக்கரம் இது
முட்பாதையில் என் பாதங்கள்
ரோஜாக்களின் தரித்திரியங்கள்தாம் அங்கே
வெற்றுக்குடுவையாகி வாழ்வு கொதிக்க கொதிக்க,
கடந்து தான் ஆக வேண்டும்
பாலைவனங்கள் பலவும்..
குருதி சிந்திடும் சகாயம் வேண்டும்
அமிலத்திராவகம் அருந்த வேண்டும்
குறுநகைக்குடுவையில்
புதிய பிறப்பு ஒன்றை பெற்றுக் கொள்ள...
புதிதாகப் பிறந்த பின்பும் ஞானம் என்றும்
வரப்போவதில்லை
புதிய ஜென்மங்களில் சபிக்கப்பட்ட வடுக்கள்
மலையெனக் கிடக்கும்.
விடியலைக் கருக்கொள்ளாத இருளைப்
பெருந்துயரம் விழுங்கிக் கொள்ளும்
மீண்டும் ஒரு முட்கிரீடம்
மீண்டும் ஒரு முறைப்பு
மீண்டும் ஒரு அதிருப்தி
மீண்டும் ஒரு அந்நியம்
ஒரு வட்டப்பாதையில் சுற்றிக் கொண்டிருக்கும்
உன்னைச் சந்திக்கவே சைன்யம் திரட்டும்

ஆயினும்
பட்டறிவால் விழுங்கிச் செரித்துப் பறந்து
கொண்டிருப்பாய்
பெருநேசச்சிறகை விரித்து..

கொண்டாடித்தீர்க்கவும்
கொட்டிய வன்மத்தைத் தெரியாதது போல்
நடிக்கவும்
சொரூபமெடுத்த
ஈர்ப்பின் பிறப்பு நீ
கோடிமுறை கழுவேறிப்பின் உயிர்த்தெழுவாய்
அடர்நேசத்தின் அடங்காத குழந்தை நீதான்.

சங்கர சுப்பிரமணியன்

# சாடுவோர் மீதொரு பாடல்!

பாரதியை தூற்றிய உலகம்
இந்த பாமரனை தூற்றுவதில்
என்ன விந்தை

நெஞ்செ பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மாந்தரைஎண்ணி
என்ற பாரதியையும் தூற்றிய
உலகமும் இதுவன்றோ

நிலைகெட்ட மாந்தரை நிந்தை செய்தால்
தலைவிரித்தாடுவோரை இங்கு கண்டு
பாரதி சொன்னதுபோல்

மோதி மிதிக்கமாட்டேன்
முகத்திலும் உமிழ மாட்டேன்

பாப்பாவுக்கு சொன்னததை
பண்பட்டவனாய் நின்று நான்
ஒருபோதும் செய்யமாட்டேன்

நெற்றிக்கண்ணை திறந்தாலும்
குற்றம் குற்றமே என்ற
நக்கீரன் குற்றவாளி என்றால்
நானும் குற்றவாளி என்றே
பெருமை கொள்வேன் நண்பா

சொல்பவன் யாரென்றறியும்
சூத்திரம் கற்றவன் நான்
ஆத்திரம் கொண்டே ஒருபோதும்
அறிவை இழக்கமான்டேன்

தினைத்துணை நன்றி செய்யினும்
பனைத்துணையாய் காணும்
பண்பட்டோர் மத்தியிலே பிறர்
துன்பச்செயல் செய்திடினும்

செய்நன்றி மறந்து செழிக்கவைத்தோரை
தொய்வடையச் செய்யும் பாதகத்தை
செய்யென்றாலும் செய்ய மாட்டேன்

இடுக்கண் வருங்கால் நகுகவென
இயம்பியவன் சொல்கேட்பேன்

துன்பம் நேர்கையில் யாழெடுத்து
மீட்ட சொன்னவன் வழிநிற்பேன்

என்னைத் தரம் தாழ்த்த நினைத்து
தரம் தாழ்ந்து போவோர் முன்
நானும் அதைச்செய்து எய்தும்
இழிநிலைக்கு செல்லமாட்டேன்

தென்னை மரத்தில் தேள் கொட்டினால்
பனைமரத்துக்கு வலிப்பது போல்

உனக்கு நான் ஊறேதும் செய்யாதபோது
மரமாகி நின்று நிந்தை செய்யும்
மாட்சிமையை எங்கு கற்றாய்

இடிப்பாரை இல்லாத ஏமார மன்னன்போல
துடித்திடல் ஆகாதென்று குறள் சொல்வேன்
ஆகச் சிறந்த அறிவாளியாம் உனக்கு

அற்பனான இந்த ஏழைச்சொல்
அம்பலமேறாது என்பதும் நானறிவேன்
மூடனுக்கு புத்தி சொன்னால்
கேடுவரும் என்ற முதுமொழியும்
நான் மறவேன்

போற்றுவார் போற்றலையும்
தூற்றுவார் தூற்றலையும் கண்டவன் நான்

காற்றிலே அடித்துவந்த குப்பையும்
என்மேல் விழுந்து அசுத்தப்படுத்திடினும்

குப்பையை தட்டிவிடும் குணமே
நான் கற்ற கல்வி
குளத்தின்மேல் கோபப்பட்டு செல்லும்
அறிவிலி ஆகமாட்டேன்

என்னை தூற்றுவதால் ஏகந்தம் கிடைக்குமென்றால்
தூற்று நண்பா தூற்றி மகிழ்ந்துவிடு

நான் உன்னை போற்றித் தொழுதிடுவேன்
பொன்றுந் துணையும் புகழ் செய்வேன்!

# மணிமேகலை சரவணன் கவிதைகள்

### 1. கடந்துபோன பால்யம்

சிறு சிறு மரச் சொப்புகளில்
ஒளிந்து கிடக்கிறதென்
வண்ணமிகு பால்யம்...
பொன் வண்ண மிட்டாயில்
கோலிக்குண்டுகளின் நிறத்தில்
காதில் பெரிய வளையம் தொங்கும்
பெண்ணின் மரப் பொம்மையில்....
அருகிருந்து எனை அழைத்துச் செல்லக்
காத்திருந்த என் மரக் குதிரை
மீதேறிக் கடக்கின்றேன் இப்போதும்
என் பால்யத்தை....

### 2. ஓவியக் குருவிகள்


மரங்களற்றுப்போகும்
நாட்களில் ஓவியங்களில்
வாழப்போகும் குருவிகள்.

களத்து மேட்டில் சிறு
தானியம் கொறிக்க வந்த
சின்னஞ்சிறு குருவிகளை
காதுகளின் அணிகளை
கழட்டி வீசி விரட்டிய
காலம் போனதுபோல

இப்போது அரிசிகளை
வீசி எறியக் கூட
ஆட்கள் இல்லாது
போனதென்றாலும்

மரங்களின் பழங்களைப்
புசித்தாவது அவை
வாழ்ந்து கொண்டிருக்கட்டும்...

வருங்காலத்தில்
இதுதான் பறவை எனக்
காட்ட ஓவியம் வரையவாவது
அவை கொஞ்ச நாளாவது
வாழ்ந்திருக்கட்டும்



## 3.நிறம் மாறும் கற்கள்

ஏரி நீரின் துல்லியத்தில் தெரியும் கூழாங்
கற்களின் வண்ணத்தில்
நான் அமிழ்ந்து கொண்டிருக்கிறேன்.
தொலை தூர மலை முகட்டில்
தொலைந்து போன வாழ்வொன்றின்
மிச்சங்களை எண்ணி யாரேனும்
வாழ்ந்து கொண்டிருக்கக் கூடும்.
ஓங்கி உயர்ந்த மரங்களில் வீசும்
காற்று என்றேனும் மலைமுகட்டைத்
தொடுகையில் அங்கோர் உயிர்
பிழைத்திருப்பதை நீருக்குள் அமிழ்ந்திருக்கும்
வெள்ளை நிறக்
கல் ஒன்றின் நிறம் மாறுவதை
வைத்து நான் கண்டுகொள்வேன்.
அவ்வுயிர் விடும் மூச்சொன்றால்
ஏரி தனிமையில் ததும்பி நிரம்பி
உயிர்த்துக்கொண்டிருக்கிறது.
இதோ என் கண் முன்னே
புதிய கூழாங்கற்கள் தினம் தினம்
நிறமாறிக்கொண்டிருக்கிறன.



## 4. தீராப் பசி

அடர்ந்த மரங்களின் ஊடே
பயணித்துக் கொண்டிருந்தேன்..
இளந்தென்றல் மேனி தொட்டு
விளையாடிக்கொண்டிருக்க
சிலும்பிய கூந்தலோடு
பரவசப்பட்டுக் கொண்டிருந்தது
என் கவிதை மனது...
இறங்கிய பாதைச்சரிவில்
சலசலத்த ஆற்றின் நீரில்
மெல்லக் கால் வைத்து
சில்லென்ற குளிர்ச்சிதனை
மொத்தமாய் அனுபவித்துக்
கொண்டிருந்தேன்..
ஆற்றின் கரையில் ஏதோ
ஒரு சிறு தேவதைக்கென
படையல் தயாராகிக் கொண்டிருக்க
அதன் வாசனையை முழுதுமாய்
உள்வாங்கிக் கொண்டிருந்தேன்..
அப்படியே இறங்கி ஆற்றில்
நனைந்துவிட ஆசையாய்த்தான் இருந்தது,
எனினும் பாசி வழுக்கல்களின்
பயத்தில் இறங்க மறுத்தது மனது...
குளத்தில் குளித்த ஒருவர் உள்ளிருந்து
ஓர் உருண்டைக்கல்லை எடுத்து வர
அதன் வழவழப்பில் அவ்வாற்றின்
நீண்ட வரலாறு பதிந்து கிடந்த
ஆச்சர்யத்தைத் தொட்டுப் பார்த்தேன்..
மீண்டும் வாழ்வின் துரத்தல்களைத்
தேடிய வண்ணம் தொடங்கியது
என் மீள் பயணம் நகரம் நோக்கியவாறு...
எனக்கும் ஆற்றுக்கும் ஆன தூரம்
அதிகமான போது ஏதோ ஓர் துக்கம்
என் தொண்டைக்கும் வயிற்றுக்கும்
இடையே உருளத் தொடங்கியது..
என்னவென்று சொல்லத்தெரியாத
ஓர் வலியோடு அவ்வாற்றை நான்
பிரிந்து கொண்டிருக்கிறேன்...
இந்நேரம் சிறுதேவதைக்கான
படையல் முடிந்து தேவதையோடு
சேர்ந்து அவர்கள் அனைவரும்
பசி ஆறி இருப்பார்கள்..
தீராப்பசியோடு நான் மட்டும்
திரும்பிக்கொண்டிருக்கிறேன்...



இரவிகாந்தன்

# அகவை

நாற்பத்தெட்டு மணித்தியாலத்தில்
வெள்ளை இரவு விடிந்தது
மேகக் கூட்டமிரண்டு
முட்டிக் கொள்ள
கும்மிருட்டு தொடர்ந்தது

இரவும் பகலாக
இடி மின்னல் தொடர்ந்தது
அடைமழை அறிகுறி
அண்டமெல்லாம் நிகழ்ந்தது

நிலவுக்கு ஒளி
நிச்சயமற்றதும்
வானம் சூனியமானது
சுட்டெரித்த சூரியன்
ஏதோ சொல்லிவிட்டு தொலைந்து போனது


விருட்சத்துக்கொரு மகிழ்ச்சி
மரங்களுக்கு பேரதிர்ச்சி
ஒளி மங்கலாக மங்கி
காடுகளை இருள் கவ்வியது
வெள்ளம் வராத வீடுகளில்
எல்லாம் பள்ளம் நிரம்பியது
வேலிக்கு ஓணான்
சாட்சிக்கு வந்தது

மழை ஓய்ந்த பின்பும்
விருட்சத்தின் இலைகளில் விரும்பி எஞ்சி
இருந்தது அதர்மம்
காடழிப்பார் கண்ணெல்லாம் நிறைந்து வழிந்தது
கர்மம்
காற்று வீச மறுத்ததும்
தரையில் அமர்ந்தது தர்மம்
கிளையில் தாவி ஏறியது சிம்மம்

ஒவ்வொரு இலையாக
உசுப்பி பார்த்தது
இலைகளுக்கும் வலித்தது
இல்லை என்று நடித்தது
துளிர்களுக்கும் தொற்றிக் கொண்டால்
வானம் தூரம் என்று நினைத்தது
சில இலைகள் தலையுலர்த்தி
இல்லையென்று மறுத்தது
உடன் இருந்த சில கணத்தில்
கிளை முறிந்து தலை தெறித்தது

நல்ல தருணம்
பற்களை தொலைத்துவிட்டு
பசியோடு இருந்தவனுக்கு
பால் பாயாசம் கிடைத்தது
எஞ்சியிருந்த வேட்டைப் பல்
எல்லாத்தையும் கிழித்தது
எதுவும் முடியாமல்
கடன் வாங்கி தொலைத்தது
உண்மையை சொல்லச் சொல்ல
பொய்யுடம்பு கொதித்தது
கற்களுடன் அலைபவர்களுக்கு
கட்டளை ஒன்று பிறந்தது
சொற்களையும் கைது செய்யும்
சோகம் ஒன்று இயன்றது

இன்று எனக்க கவை
ஏழு பத்து ஆறு என்று
ஏதேதோ நிகழ்ந்தது



ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# நின்று பேசும் வார்த்தைகள்

சிலவற்றால்
ஈரம் கசியும்
சிலவற்றால்
ஆவி பறக்கும்

சிலவற்றால்
வாசம் வீசும்
சிலவற்றால்
துர்நாற்றம் எழும்

சிலவற்றால்
பாதை புலப்படும்
சிலவற்றால்
திசை முடியும்

சிலவற்றால்
வசந்தம் மலரும்
சிலவற்றால்
பசுமை உதிரும்

உச்சரிக்கும்
வார்த்தைகளெல்லாம்
உயிரானவை போல
தோற்றம் தரும்

எதற்காக என்பதோ
யாருக்காக என்பதோ
யாரிடமிருந்து என்பதோ
அல்ல

வருங்கால பாதைக்கு
வெளிச்சம் தருகின்ற
நேற்றைய வார்த்தைகளே
நாளைய வரலாற்றில்
நின்று பேசும்
வார்த்தைகள்.



மு.ஆறுமுகவிக்னேஷ்

# செம்மல்

ஒட்ட வெட்டினால் தான்
சளி பிடிக்காது என்ற
அறிவுரைக்கு இணங்கி
ஒட்ட முடியை வெட்டிய பின்
தலையைப் பார்த்து
கரிச்சா மண்டை,
சட்டி மண்டை என்று
அக்கம் பக்கத்து
அத்தைகள் அக்காக்கள் எல்லாம் கேலி
பேசியது ஒரு காலம்

காலம் அகாலம் ஆகாமல் இருக்க
உண்ட ஆலாலத்தை
கண்டத்தோடு கட்ட
உமையின் விரல்கள் முயன்ற போது
கண்டம் நீலகண்டமானது
அண்டத்தின்
வானமும் கடலும் கூடத்தான்

அரும்பு மீசையுடன் கூடவே
அருகம்புல் போல,
புல் மேயும்
ஆட்டுக்கு இருப்பதைப் போல
தாடைக்குக் கீழ்
ஆங்காங்கே முளைத்த
தாடியைப் பார்த்து
'ஷேவ் செய்யலயா சார்?' என்று ஜோதி அக்கா
தான்
முதன்முதலாக கேட்ட நினைவு

அதற்காகவே 'ஜில்லட் கார்ட்'
ரேசரோடு ஷேவிங் க்ரீம், பிரஸ் வாங்கி சுயசவரம்
தொடங்கினேன்

அதன்பின் எப்போது என்னைக்
கொஞ்சம் தாடியோடு பார்த்தாலும்
ஜோதி அக்கா
அதே கேள்வியைக் கேட்க தவறியதில்லை

இப்போது மணமாகி
வேற்றூர் போன ஜோதி அக்காவை
சமீபத்தில் பார்த்தேன்
மூன்று வார தாடியோடு இருந்த நான்

ஆனால் இப்போது அக்கா கேட்கவேயில்லை
'ஷேவ் செய்யலயா சார்?'

அரும்பு முகையைத் தாண்டி
அலராகி விட்டது
இனி வீயும் செம்மலும் தான்.